மங்கை

அணா எட்டு

ஏப்ரல் 1948

பெண்களின் மாதப் பத்திரிகை





இந்தியாவின் அடுத்த கவர்னர் ஜெனரல் ராஜாஜி.

367 / 2-49.

சக்தி வாய்ந்த நூல்கள்

காந்தி மகான் கதை : கொத்தமங்கலம் சுப்பு

மகாத்மா காந்தியடிகள்-நம்மை அடிமை வாழ்விலிருந்து விடுவித்த சரித்திரத்தை நாட்டுப் பாடல் வடிவத்தில் பாடியிருக்கிறார். அழகான அட்டைப் படம்—உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து தபால் செலவு தனி

சக்தி பிறக்குது : சுரபி

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள். அருமையான பதிப்பு.

விலை அணா : ஆறு தபால் செலவு தனி

லெனின் பிறந்தார் : ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்றால் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிறார். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்றும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு:

விலை ரூ. மூன்று தபால் செலவு தனி

உலோகமும் நாமும் : மு. அருணாசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்ய வீழ்ச்சியை விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. மூன்றேமுக்கால் தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை—14.

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 8

சர்வதாரி	...	தலையங்கம்	5
பெண்களும் யோகாசனமும்	...	சீதா லக்ஷ்மி குமாரஸ்வாமி	7
கன்னியர்குமரி	...	ரங்கதேவி	12
தாத்தாவின் கடிதம்	...	ஸ்ரீ	16
எதிர்பாராதது !	...	"கல்பனா"	17
பட்டினத்தார் காதல்	...	திருப்புகழ் மணி	26
உடலோம்புதல்	...	டாக்டர் நாமகிரி	31
வழியில் கண்ட வினோதம்	...	வித்வான் ஏ. கே. பாலாம்பிகை	33
அறுசுவை	...	ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி	37
மறக்க முடியுமா ?	...	கி. நாகலெக்ஷ்மி	40
அழகுக் குறிப்பு	...	ஸ்ரீமதி ஆத்மநாதன்	45
ரேவதியின் பரிசு	...	சகுந்தலா ராஜன்	49
சகோதரிகளின் சந்தேகங்கள்	...	"நித்யா"	53
மல்லிகை	...	விஜி	55
உள்ளக் காதல்	...	எம். சியாமளா	60
காணி நிலம் (தொடர் நாவல்)	...	ய. லக்ஷ்மி நாராயணன்	65
மாம்பழக் கதை	...	காமு	70
ஆசாரப் பேய்	...	சகுந்தலா பாரதி	75
வாசகர்களுக்கு	...		80

1948 ஏப்ரல்



காய்கறித் தோட்டம்
தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது
என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?
கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை
பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?
இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணாசலம் எழுதியது
விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி
சக்தி காரியாலயம்
சென்னை 14.

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2 | சென்னை, ஏப்ரல் 1948 | பகுதி 8

சர்வதாரி

●

புது வருஷம் பிறந்த பிறகு மங்கை பலதுறைகளில் சேவை செய்யவும் மேன்மையான ஒளியுடன் பிரகாசிக்கவும் சகோதரிகளின் சகாயத்தை வேண்டிக் கொண்டு வெளி வருகிருள். சென்ற ஆண்டில் நமக்குக் கிடைத்த சுயராஜ்யத்தினல் பெருத்த லாபத்தை அடைந்தோம். சந்தோஷக் கடலில் ஆழ்ந்து கிடந்த நமக்கு மகாத்மாவின் பிரிவு மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிற்று. துக்கத்திலிருந்து மீண்டுவர மகாத்மாவே நமக்கு பகவன் நாமத்தை ஒரு வரப்பிரசாதமாக அள்ளிக் கொடுத்துச் சென்ருர். மகாத்மா இந்த அநித்தியமான பூதவுடலைத் தாங்கி யிருந்த வரைக்கும் அவர் சொன்ன சில உபதேசங்கள் சிலருக்கு கேலிக் கூத்தாக இருந்தது. பகவன் நாமத்தை ஆயுதமாகக் கொண்டு சுயராஜ்யத்தையே தேடி விட்டாரல்லவா? மகாத்மா ஆத்ம சுத்தியுடன் செய்த பஜனையின் சக்தியினுலும், பெரியோர்களையும், தேசத் தலைவர்களையும் வதைத்த நிந்தனையினுலுமன்ரே ஆங்கிலேய நாடு ஒரு 'இன்ஸால் வெண்டு' நாடாக மாறி அவரவர்கள் நாட்டை அவரவர்களுக்கே கொடுத்து விட்டு 'போதுமென்ற மனமே பொன் செய்யும் விருந்தாக' மாறிற்று.

பஜனையில் ஒரு அலாதி சுகமுண்டு. லாபமும் உண்டு. பித்தளைப் பாத்திரங்கள் களிம்பேறிவிட்டால் புளியைத்

தடவித் தேய்த்தால் வெளுத்துவிடும். அப்படியேதான் களிம்பேறியுள்ள நம் ஆத்மாவையும் பகவன் நாமத்தால் சுத்தி செய்து விடலாம். இப்புத்தாண்டுக்கு 'மங்கை'யிடும் கட்டளையும் இதுதான். அங்கங்கே சத்சங்கங்கள் நிறுவி மங்கையர்கள் ஒன்று கூடி இருபத்துநான்கு மணி தேசாலத்தில் ஒரு சில நிமிஷங்களேனும் பகவானை நினைத்து ஆத்மாவுக்கு சாந்தி தேடினால், நாட்டிலே சாந்தி நிலவுவது திண்ணம். மகாத்மாவைக் கொன்ற அசுரனைப்போல பல சூர பத்மாக்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒழிக்க ஆத்ம பலமொன்றால் தான் முடியும்.

ராக்ஷஸ வர்க்கங்களை உற்பத்தி செய்யாதிருக்கவும், வருங்காலப் பயிர்களாகிய நமது சிறுவர்கள் அத்தகைய கணங்களாக மாறாதிருக்கவும் பாடுபட வேண்டியது மங்கையர்களின் கடமையாகும். மங்கையர்களிடந்தான் சக்தியிருக்கிறது. சூர பத்மனை ஒடுக்க முருகனுக்கு வேல் கொடுத்தது பராசக்தி. மருத மரமாயிருந்த நளகூபா மணிக்கிரீவர்களுக்கு நற்கதியளிக்க கண்ணனுக்கு உரலைக் கொடுத்தது யசோதை. பாஞ்சாலிக்கு மானபங்க மேற்படாது செய்தது 'ஸ்ரீ கிருஷ்ணா' என்ற அபய நாமம். சுயராஜ்யத்தை யடைய நம் மகாத்மாவுக்கு சக்தி கொடுத்தது ராம பஜனை.

உண்மையான ஆபரணம்

பெண்ணின் உண்மையான ஆபரணம் புனிதமான ஒழுக்கமேயாகும். தங்கமும், வைரமும் உண்மையான ஆபரணங்கள் ஆகாது. சீதை, தமயந்தி என்கிற பெயர்கள், அவர்கள் மாசுமறுவற்ற கற்புடையவர்கள் என்கிற முறையில் நம்மிடையே புனிதத் தன்மையைப் பெற்றிருக்கின்றன. நாம் புனிதமாகக் கருதுவது அவர்கள் நகைகள் அணிந்துகொண்டார்கள் என்பதற்காக அல்ல.

காந்தியடிகள்

பெண்களும் யோக ஆசனமும்

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

ஹலாசனம்

இதற்குமுன் சொல்லிவந்த ஆசனங்களில் முதுகெலும்பிற்கு படிப்படியாகப் பயிற்சி கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது புஜங்காசனத்தில் முதுகெலும்பின்மேல் பாகத்திற்கும், சலபாசனத்தில் கீழ்ப் பாகத்திற்கும், தனுராசனத்தில் மத்திய பாகத்திறகும் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர இவைகளில் முதுகெலும்பு பின் பக்கம் வளைக்கப் படுகிறது. பிறகு வரும் பாஸ்சிமோத்தாசனத்தில் முதுகெலும்பு முன் பக்கம் வளைக்கப் படுகிறது. இந்த ஹலாசனத்தில் மற்றெல்லா ஆசனங்களை விட இன்னும் நன்றாய் வளைத்து இளமைப் படுத்தப் படுகிறது. தவிர முதுகெலும்பின் வழியாக வரும நரம்புக் கூட்டங்களையும் இழுத்துப் புத்துயிர் உண்டாக்குகிறது.

மூளையின் அடி பாகத்திலிருந்துதான் நரப்புக் கூட்டங்கள் புறப்பட்டு முதுகுத் தண்டின் வழியாக வந்து பல பாகங்களுக்குப் பிரிகிறது. ஒரு சிறு [illegible]றும்பு கடித்ததை மூளைக்கு தெரிவிப்பதும் அந்த நரம்புகள்தான். உடனே அதைத் தள்ளிவிட கைகளுக்கு ஏவ, சமாச்சாரம் கொண்டு வருவதும் அந்த நரம்புகள்தான். இந்த நரம்புக் கூட்டங்கள் சரிவர வேலை செய்யவில்லை என்றால், மூளைக்கு செய்தி எட்டாது. அங்கிருந்து உத்தரரும் வராது. இப் பொடி நரம்புகளுக்கு போஷணை கொடுப்பது நல்ல இரத்தமும், இரத்தத்தினூடே இருக்கும் பிராண வாயுவும்தான். இப் பிராண வாயு எந்த இடத்திற்கு இரத்தத்தின் மூலம் செலுத்தப் படவில்லையோ அந்தப் பாகம் உணர்ச்சி அற்றதாய் விடும்.

அப் பாகங்களுக்கு பிராண வாயு கொடுக்க வேண்டுமானால் நேராய் ஊசி மூலமாகவோ, மருந்து மூலமாகவோ கொடுக்க முடியாது. இரத்தம் பாயும் நரம்புகளை இழுத்து கசக்குவதால், இரததத்தின் மூலம் பிராண வாயு கிடைக்கும். எததனையோ பேர்களை நாம் பார்க்கிறோமல்லவா? உயிர்ப் பிணங்களாக தங்களுடைய கால், கைகள் சுவாதீனமில்லாமல், கால் இருந்தும் நடக்க முடியாமலும், கை யிருந்தும் தூக்க முடியாமலும் இருப்பவர்களை.

நாம் வீணையில் நல்ல நாதத்தைக் கேட்க வேண்டுமானால் அன்றாடம் அதைத் துடைத்து, கம்பிகள் துரு ஏறாமல் ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து, சுதிக்கு தக்கபடி இழுத்து வாசிததால்தான் சுகமான சங்கீதத்தைக் கேட்க முடியும். கம்பிகள் துரு ஏறினால் பட்டென்று அறுந்துவிடும். கம்பிகளை சரியானபடி சுத்திக்குச் சரியாய் இழுத்துக் கூட்டினால்தான் அபஸவரம் இல்லாமல் சங்கீதம் கேட்க

முடியும். அதேபோல வாழ்க்கை என்னும் சங்கீதத்தை அனுபவிக்க, உடல் என்னும் வீணையை ஆரோக்கியமாயும், நரம்புகளென்னும் தந்திகளை துரு ஏருமல் அப்பியாசத்தின் மூலமாக சுத்தமாயும் வைத்திருந்தால்தான் முடியும். ஆனல் இதற்கும் அதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. வீணையின் தந்தி அறுந்துவிட்டால் வேறு மாற்றிப் போட்டுக்கொள்ள முடியும். உடலில் நரம்புகள் அறுந்தாலோ மாற்றிக்கொள்ள முடியாது. பிறகு வாழ்க்கையே பாழ்தான். வீணையின் தந்தி துரு ஏறிவிட்டால் உப்புக்காகிதத்தால் துருவை தேய்த்து நீக்கிவிடலாம். நரம்பு உணர்ச்சி யில்லாமல் மரத்துப் போனல் எந்த உப்புத் தாளால் தேய்த்து மாற்றுவது? அதற்குத்தான் நம் பெரியோர்கள் இந்த ஹலாசனத்தைக் கண்டுபிடித்திருக்கிருர்கள்,

சிலருக்கு நரம்பு பலஹீனத்தினுல் அடிக்கடி கோபம் வரும். அவர்களுக்கு ஆழ்ந்து யோசனை செய்யும் சக்தி இருக்காது. சாதாரணமாய் ஒரு மனிதன் ஒரு தடவை கோபம் கொண்டால் முதலில் அவனுடைய ரத்தம் கொதிப்பேறுகிறது. நரம்புகள் ரத்த வேகத்தினுல் புடைத்து விரிகிறது. அதற்குத் தகுந்தாற்போல் அங்கங்களும் விரைத்து மாறுதலடைகிறது. சற்று நேரம் பொறுத்து அவ்வளவிற்கும் நரம்பு தளர்ந்து சோர்வடைகிருன். மனம் நோகிருன். சாதாரண மனிதனுக்கே இக்கதி என்ருல், நோயாளிகளுக்கும், நரம்பு பலஹீனர்களுக்கும் சொல்லவா வேண்டும். ஆனல் அவர்களுக்குத்தான் அடிக்கடி கோபம் வருகிறது. அதனல் இன்னம் பலஹீனமாகிருர்கள்.

ஆரோக்கியமான வீர்யம் பொருந்திய உடலை உடையவனுக்குத்தான் உன்னதமான எண்ணங்களும், பெரும் நோக்கங்களும், நல்ல காரியங்கள் செய்யும் ஆற்றல்களும் உண்டாகும். இதுவரை உலகத்தில் பெரிய, பெரிய காரியங்களெல்லாம் அவர்களால்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. நோயாளிகளுக்கும், நரம்பு பலஹீனர்களுக்கும், ஆர அமர யோசிக்கும சக்தியும், பொறுமையும் குன்றி, எடுத்ததற்கெல்லாம் சிடுசிடுப்பும், கோபமும் வரும். இவர்களால் உலகத்திற்கு யாருக்கு நன்மை.

எத்தனை சகோதரிகள் சதா கோபப்பட்டுக் கொள்ளும் யாரையாவது, ஏன் தன்னையும் கூட நொந்துகொண்டே இருப்பார்கள். காரணம் பலவாக இருக்கலாம். குடும்பத்திற்கு போதிய வருமான மில்லாமையும் இருக்கலாம். தன் இஷ்டம்போல அக் குடும்பத்தில் நடக்க முடியவில்லையே என்றும் இருக்கலாம். இன்னும் பலவிதமான குறைகளும இருக்கலாம். ஆனல் ஆழ்ந்து நோக்கினல் அச்சகோதரிகளிடம் ஆரோக்கியக் குறைவே இதற்கெல்லாம் மூலகாரணம் என்பது விளங்கும். எத்தனையோ ஏழைக் குடும்பங்களிலுள்ள சகோதரிகள் எப்பொழுதும் சிரித்த முகமாயும், கல கலப்புடனும், சுறுசுறுப்புடனும் இருக்கிருர்கள். காரணம் அவர்கள் ஆரோக்கியமாய் இருப்பதினல்தான்.

ஒரு குடும்பம் சந்தோஷமாய் வாழ வேண்டுமானல், அது பணத்தை மட்டும் பொறுத்து

அல்ல, ஆரோக்கியத்தையும் பொறுத்திருக்கிறது. பணத்தினால் மாத்திரம் சந்தோஷம் உண்டாக வேண்டுமானால், பணக்காரக் குடும்பங்களெல்லாம் சொர்க்கமாக வல்லவா திகழ வேண்டும். அதற்குப் பதில் அங்குதான் புதிய புதிய பெயர்கள் கொண்ட வியாதிகள் தாண்டவமாடுகின்றன. யமபுரி தர்பார் அங்குதான் பார்க்க முடியும். யமகிங்கரர்களைப் போல ஊசிகளைக் குத்துவதும், அறுத்து ஆபரேஷன் செய்வதும், வெந்நீரில் கால்களை அமுக்குவதும், ஐஸ் போட்டு உடலைத் தேய்ப்பதும், வாயின் வழியாக ஆகாரம் செலுத்த முடியாமல், ஆசன வழியாக ஆகாரம் ஏற்றுவதும், நரம்புகளின் வழியாக வெந்நீர் செலுத்துவதும், பிராண வாயுவை ரப்பர் வழியாய் நுரையீரலுக்கு ஏற்றுவதும், அப்பப்பா போதும்! நரகம் ஒன்று இருக்கிறதோ இல்லையோ, நாம் நேரில் பார்த்தது கிடையாது. கருட புராணத்தில் படித்த அளவே. ஆனால் இங்கு எல்லாம் நடந்துவிடுகிறது.

இவைகளெல்லாம் யாருக்கு? பணம் படைத்தவர்களுக்குத்தான் இவ்வளவு சைத்தியோபசாரமும். பணம் இல்லாதவர்களுக்கு இக் கஷ்டங்கள் பட சௌகரியமேது. அவர்கள் சீக்கிரம் பரமபதம் அடைந்துவிடுகின்றார்கள்.

வேத நூல் பிராயம் நூறு என்று சொல்லியிருக்கிறது. ஆனால் அதில் பாதி வியாதிகளினாலும், சிகிச்சைகளினாலும் குறைந்துவிடுகிறது. அதிலும் பாதி நாமே உண்டாக்கிக் கொண்ட பழக்க வழக்கங்களினால் குறைந்து போகிறது. எஞ்சி இருப்பது இருபத்தி ஐந்து. நம் இந்தியர்களின் சராசரி வயதும் இருபத்தி ஐந்துதான். இந்த இருபத்தி ஐந்துக்குள் எத்தனை பிரசவங்கள், கருப்பச் சிதைவுகள் எத்தனை நட்டுவக்காலி ஊசிகள், அழகான ஆனால் சாப்பிடச் சகிக்காத டானிக்குகள். ஒரு பெண் இருபத்தி ஐந்து வயது ஆவதற்குள் வாழ்க்கை கசந்துவிடுகிறது. அதிக வயதானவளைப் போல ஆய்விடுகிறாள்.

இத்தனைக்கும் காரணம் கடவுளால் கொடுக்கப்பட்ட இச் சரீரத்தைக் கவனியாது காலாகோலமாக்குவதினால்தான். அதனை சீர்திருத்தி நிலைபெறச் செய்வது இந்த ஹலாசனமே.

பழகும் முறை:—விரிப்பில் மல்லாந்து படுத்து, கைகளை இரண்டு பக்கங்களில், உள்ளங்கை தரையில் ஒட்டவைத்துக்கொள்ளவும். கொஞ்சம் மூச்சைப் பிடித்து இரண்டு கால்களையும் சேர்ந்தாற்போல் மேலுக்குத் தூக்கி தலைப்பக்கம் வளைக்கவும். இச் சமயம் மூச்சை விட்டுக்கொண்டே வளைக்க வேண்டும். தலைக்குப் பின்னால் இன்னம் நன்றாய் வளைத்து தரையைக் கால் பெருவிரலால் தொட்டு, 3 வினாடி முதல் 10 வினாடி வரை அப்படியே இருக்கவும். கைகள் தரையில் ஒட்டியவாறே இருக்க வேண்டும் கால்கள் வளையக் கூடாது. பிறகு நிதானமாய்க் காலை முன் இருந்த நிலைக்கு திருப்பிக் கொண்டுவந்து இளைப்பாறவும்.

இந்த ஹலாசனம் நான்கு காலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

முதல் காலம்:—கால் பெருவிரல் பின்பக்கம் தரையில் தொடும்போது, முழங்கால் மூக்



ஹலாசனம்

கைத் தொட வேண்டும். கால்கள் மாத்திரம் வளையக்கூடாது.

இரண்டாவது காலம்:—கால் பெருவிரல் தரையைத் தொட, முழங்கால் நெற்றியைத் தொட வேண்டும்.

மூன்ருவது காலம்:—கால் பெருவிரல் தரையைத் தொட, உடலை நன்ருய்ப் பின் வீசி தொடையை நெற்றிக்கு நேராய் கொண்டு வரவேண்டும்.

நான்காவது காலம்:—உடலை எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்பக்கம் வீசி வளைத்து, பக்கத்தில் இருக்கும் கைகளை தலைக்கு மேல் தூக்கி, உச்சிப் பக்கம் கை விரல்களைக் கோர்த்துக் கொள்ளவும். இந்த நிலைமையில் முகவாய்க் கட்டை, மார்பை அழுத்தி இருப்பதினல் ஜாலந்திர பந்தம் ஏற்படுகிறது.

இவைகளைப் படிக்க சுலபமாய்த் தோன்றுகிறதல்லவா? வாருங்கள், கொஞ்சம் செய்து பாருங்கள். என்ன, 'கஷ்டமாகத் தோன்றுகிறதா? நப் போல் வளை' என்ற ஒளவைப் பிராட்டியாரின் முதுமொழி ஞாபகம் வருகிறதா? உடலைக் கஷ்டப் படுத்தினல்தான் சுகம் அடைய முடியும். உடலை அசைக்காமல் சுகம் மாத்திரம் அனுபவிக்க வேண்டுமானல் சுகத்துக்கு பதில் துன்பம்தான் உண்டாகும்.

முதலில் செய்யத் தொடங்குபவர்களுக்கு மூன்ருவது காலம் தான் வரும். இதைத் தினம் மூன்று முதல் பன்னிரண்டு தடவை வரைக்கும் செய்யலாம். பிறகு இரண்டாவது, ஒன்ருவது, நான்காவது காலம் முறையே பழகலாம். எல்லாவற்றையும் செய்யக்கூடிய திறமை வந்தபின் முதலிலிருந்து வரிசைக் கிரமமாய்ச் செய்து வரலாம். ஒவ்வொன்றும் மூன்று தடவை செய்தால் போதும். ஒவ்வொரு காலமும் செய்தபின் கொஞ்சநேரம் இளைப்பாறிக் கொள்ளலாம்.

சிலருக்குக் காலைத் தூக்கிப் பின்னுக்கு வளைக்க முடியாது. இடுப்பு மேலெழும்பாது. அவ்வளவுதான். நமக்கும் இதற்கும்

பிராரப்தம் கிடையாது என்று சொல்லித் தலை மூழுகிவிடக் கூடாது. இதற்கென சில நாள் கீழ்க்கண்டவாறு பயிற்சி செய்ய வேண்டும். அதாவது காலை நேராய் கெட்டியாக ஐந்தாவது சித்திரத்திலுள்ளபடி தூக்கி, மெதுவாய்க் கால்களை தரைப் பக்கம் இறக்கி முன் போலக் குதிக் கால்களை கீழே அமர்த்தாமல் அரை அங்குலம் இடைவெளி இருக்கும்போதே அப்படியே கால்களை மேலே தூக்கி, திரும்ப இறக்க வேண்டும். இவ்வாறே சக்தியை அனுசரித்து காலைக் கீழே வைக்காமல் மூன்றிலிருந்து ஆறு தடவை செய்யலாம். கொஞ்சம் இளைப் பாறிக்கொண்டு மேற்கண்டபடி மூன்றிலிருந்து ஆறு தடவை செய்யலாம்.

இம்மாதிரி ஓரிரண்டு மாதம் சென்றபின் காலையும், இடுப்பையும் பின்புறம் கூடுமானவரை வளைத்துத் திரும்ப முன் மாதிரி காலை தரையில் ஒட்டாமல் அப்படியே திரும்பத் தூக்கி தலைப் பக்கம் வளைக்கவும். இதையும் ஆறு தடவை செய்யலாம்.

மேற்கண்டபடி ஒரு மாதம் பழகுவதற்குள் வயிற்றுச் சதைகளுக்கும், இடுப்புக்கும், முதுகுச் சதைகளுக்கும், நரம்புக் கூட்டங்களுக்கும் பலம் உண்டாகி, இளகிவிடும். பிறகு ஹலாசனத்தின் மூன்றாவது காலம் தானாக வரும். அதையும் கொஞ்ச நாள் பழகி வந்தால், மற்றக்காலங்கள் லேசாக வரும்.

சிலருக்குகால்களைப்பின்பக்கம் வளைத்துத் தரையில் தொட சிரமமாய் இருக்கும். அப்பொழுது கைகளின் உதவியைக்கொண்டு புட்டத்தையும், இடுப்பையும் பிடித்து, பின் பக்கம் தள்ளிக் கொள்ளலாம். இரண்டு காலும் சேர்ந்தாற்போல் பின் பக்கம் தரையைத் தொட முடியாவிட்டால் முதலில் ஒரு காலைத் தொட முயற்சி செய்ய வேண்டும். பிறகு மற்றொரு காலைத் தொட முயற்சி செய்யலாம். இப்படியே செய்து வந்தால் கொஞ்ச நாளில் இரண்டு கால்களும் தொடவரும்.

பலன்: நரம்புகள் இழுக்கப் பட்டுகசக்கப்படுவதால் புத்துயிர் அடைந்து சுறுசுறுப்பாய் இருக்கும். இடுப்பு வலுவடைவதால் இடுப்பு வலி உண்டாகாது. முதுகெலும்பு நன்றாய் வளைக்கப்படுவதால் இளமை உண்டாகும். வயிறு நன்றாய் மடிந்து அழுத்துவதால், வயிற்றிலுள்ள உறுப்புகள் எல்லாம் தத்தம் வேலைகளைச் சரிவர ஒழுங்காய்ச் செய்யும். நாலாவது காலத்தில் ஜாலந்திர பந்தம் ஏற்படுவதால், சரீரத்திலேயே பிரதான சதைக் கோளங்களாகிய (glands) நெஞ்சில் இருக்கும் தைராய்ட் கிளாண்டும், பாரா தைராய்ட் கிளாண்டும் கசக்கப்படுகிறது. அதனால் அமிர்தம் உண்டவர்களைப் போன்ற ஒரு புது ஆரோக்கியம் நமக்குக் கிடைக்கிறது.

குறிப்பு: இந்த ஆசனம் கர்ப்பம் கொண்டவர்கள் 3 மாதம் வரை செய்யலாம். பிறகு 5 மாதம்வரை கால்களைச்சேர்த்து நெட்டக்குத்தலாய் மேல்தூக்கும் பயிற்சி அதாவது 5-வது சித்திரத்திலுள்ளதைச் செய்யலாம். இந்த ஐந்தாவது சித்திரத்திலுள்ள ஆசனம் மட்டும் புதிதாய்ச் செய்ய விரும்பும் கர்ப்பிணிகளும் 5 மாதம் வரை செய்யலாம். அதனால் சுகப் பிரசவமுண்டு.

கன்னியாகுமரி

ரங்கதேவி

(எந்தெந்தக் காலத்தில் எதெதைச் செய்ய வேணுமோ, அவற்றை அந்தந்தக் காலத்தில் செய்தால்தான் மதிப்பும் பலனும் இருக்கும். இக் கட்டுரையாளரின் அபிப்பிராயம் ஒரு வகையில் மேற் சொன்னதை அனுசரித்துத்தான் இருக்கும் என்று இக் கட்டுரையைப் படித்தபின் எண்ணத் தோன்றுகிறது. இந்தப் பிரச்னையில் உங்கள் அபிப்பிராயம் என்னவோ?

பாரத தேசத்தின் தென் கோடியில் ஒரு கன்னிகை நின்று கொண்டிருக்கிறாள். அவள் அழியா மங்கைப் பருவத்தினள். ஆண்டவனையே மணக்க எண்ணி அருந் தவம் புரிந்தனள். மும்மூர்த்திகளும் அவளை அடைதற்கு முற்போந்தனர் என சுசீந்திர ஸ்தல புராணம் கூறும். அவர்கள் தேவேந்திரன் பரிசுத்த மடைந்த புண்ணிய பூமியாகிய சுசீந்திரத்தை யடைந்ததும் கோழி கூவிற்று. அவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர். கன்னியா குமரியும் கன்னிகையாகவே நிற்கிறாள். "தனிமையின் இனிமை" (Single Blessedness) என்று கூறுவார்கள். அத்ன் இன்பத்தை நுகர்ந்தவர்க்கு மண வாழ்க்கை ருசிக்காது.

தனிமையில் என்ன சுகமுண்டு. கடவுள் மனிதனை சமூகப் பிராணியாக சிருஷ்டித்தார். அவனைச் சமூகத்தினின்றும் பிரித்தால் அவன் அதை ஓர் பெருத்த இன்னலாக நினைக்கிறான். ஆகலின் சிறைக் கூடங்கள் தண்டனைகளாக ஏற்பட்டன. தனிமை இனியதெனின் சிறைச்சாலைகள் வாழ்க்கையின் லட்சிய ஸ்தானங்களாக மாறிவிடாவோ?

அலெக்ஸாண்டர் ஸெல்கர்க் என்பான் தனிமையைக்குறித்து, "ஏ தனிமையே, உன் வதனத்தில் அறிஞர்கள் கண்ட கவர்ச்சிகள் எங்கே?" என ஓலமிட்டான் என கவி கூறுகிறார்......

இது எல்லாம் 'மங்கை' வாசகர்களுக்கு எதற்காக என்று அலுப்படைகிறீர்களா? இதோ சொல்லி விடுகிறேன்.

பத்து வருஷத்திற்கு முன்னால் நம் நாட்டில் பதினாறு வயது நிரம்பிய கன்னிகை கன்னியாகுமரி ஒருவளைத் தவிர வேறெவரும் காணக் கிடைக்க மாட்டாள். அப்பொழுது ஒரு புண்ணிய புருஷர் தோன்றினார் ஹரிவிலாஸ ஸாரதா என்பது அவர் பெயர். ஸனாதனிகளின் பெருத்த எதிர்ப்பை மதிக்காமல் அவர் பெண்களுக்குக் கல்யாண யுக்த வயதை நிர்ணயித்து சட்டமாக்கினார், ஐயோ பாவம், அவருக்கு அப்பொழுது தாம் எத்தனை பெண்களின் சாபத்துக்கு ஆளாகப் போகிறோம் என்று தெரியாது. தெரிந்திருந்தால் குறைந்த வயதை நிர்ணயித்தவர் கன்னிப் பருவத்திற்கும் ஒரு வரம்பு ஏற்படுத்தி, கன்னியா குமரிக்குப் போட்டியாகப் பல

கன்னிகைகள் தோன்றுவதைத் தடை செய்திருப்பார்.

பதினாறு வயதிற்குள் பெண்களுக்குக் கல்யாணம் செய்யக் கூடாதென்றும் சட்டம் சொல்கிறது. ஆனால் எத்தனை வயதிற்குள் கல்யாணத்தை செய்துவிட வேண்டும் என்று சட்டம் சொல்லவில்லை. அதனால் என் போன்ற பெண்களின் சங்கடத்தை விவரிக்க முடியாது.

பதினாறு வயதிற்குள் விவாகம் செய்து விடுவதால் பால்ய விதவைகள் அதிகமாகிறார்கள் என்பது சாரதா சட்டத்தைப் பிரசாரம் செய்தவர்களால் சொல்லப்பட்டது. மேலும் பால்யத்தில் விவாகம் செய்தால் பெண்களுக்குத் தங்கள் கணவனைத் தெரிந்தெடுத்துக்கொள்ள சந்தர்ப்பம் இல்லை என்றும் கூறப்பட்டது. ஆனால் இப்பொழுது நேர்ந்திருக்கும் சூழ்நிலையை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை.

ரஜஸ்வலைப் பருவத்திற்குமுன் விவாகம் செய்ய வேண்டுமென்ற சமூகக் கட்டுப்பாட்டிற்கிணங்க பல பெண்கள் மிகச் சிறு பிராயத்திலேயே விவாகம் செய்விக்கப் பட்டனர். அதன் காரணமாக ஒரு சிலர் வைதவ்யமடைந்து நிராதரவாக்கப் பட்டனர். ஆனால் இப்பொழுது நேர்ந்ததென்ன? பெண்களுக்கு விவாகம் செய்விப்பதற்குக் கட்டுப்பாடு ஒன்றுமில்லாமல் போகவே பெற்றோர்கள் அசிரத்தையாக இருந்து விடுகின்றனர். பெண்களும் விவாகத்துக்கு யுக்த வயதைத் தாண்டி தனிமையாகக் காலங் கழிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு சில பால்ய விதவைகளுக்கு நேர்ந்த நிலைமை இப்பொழுது பொதுவாக எல்லாப் பெண்களுக்கும் நேர்ந்துளது என்றால் மிகை படக் கூறியதாகாது.

மனித வகுப்பையே இரண்டு சாதிகளாகப் பிரித்து விடலாம். பணக்காரச் சாதி - பணமில்லாத சாதி. உலகில் எங்கும் - இந்தியாவையும் சேர்த்துத்தான் - உள்ளவை இந்த இரண்டு சாதிகள் தான். பணக்காரர்களுக்கு இந்த சட்டத்தினாலும் தொந்தரவில்லை. பணம் பத்தும் செய்யும். எல்லா நாடுகளிலுமே பணம் இல்லாதவர்தான் பெரும்பான்மையோர். நம் நாட்டில் பணம் படைத்தவர் மிக மிகச் சொற்பம்தான். மிக மிகப் பெரும்பான்மையோரான இந்தப் பணமில்லாதவர்களால் தங்கள் பெண்களுக்கு ஓரளவுக்கு மேல் படிப்புச் சொல்லிக் கொடுக்க முடிவதில்லை. தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால் உயர்தரக் கல்வி பெறும் மாணவிகளின் சத விகிதம் மிக மிகக் கொஞ்சம்தான். அப்படிப் படித்த பெண்களுக்கும் உத்தியோகங்கள் எங்கே காத்திருக்கின்றன? யுத்தம் முடிந்து வீடு திரும்பிய ஆடவர்களில் பலர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பட்டினிப் பட்டாளத்தை அதிகரித்துக் கொண்டு வருகின்றனர். அவர்கள் கஷ்டத்தை அதிகரிக்கப் பெண்களும் போட்டியிடுவதால் பயனென்ன? மேனாடுகளில் பெண்களின் தற்கால ஸ்திதி பல நூற்றாண்டுகளின் விளைவாக ஏற்பட்டுள்ளது. அதே சூழ்நிலையை நம் பெண் மக்களிடையே பத்து வருஷத்தில் ஏற்படுத்துவது வண்டிக்குப் பின்னால் குதிரையைக் கட்டி ஓட்ட முயற்சிப்பது போலத் தானாகும்.

இப்பொழுது சாரதா சட்டத்தை ரத்து செய்த போதி

லும் அதற்கு முன்னிருந்த நிலைமையை ஏற்படுத்தமுடியாது. சமூகத்தில் பல மாறுதல்கள் நேர்ந்துள்ளன. இவற்றையெல்லாம் அழித்துப் பழைய ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வரமுடியாது. எனவே பெண்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. அவர்கள் வாழ்க்கை முறையை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

என் தகப்பனுர் ஒரு வக்கீல். அவருக்கு என்னையும் சேர்த்து ஆறு பெண்கள். ஒரு பிள்ளை. என்னை ஐந்தாம் பாரம் வரையில் படிக்க வைத்தார். பிறகு படிப்பை நிறுத்திவிட்டார். என் சகோதரிகள் மூன்ருவது பாரத்திற்கு மேல் போகவில்லை. என் தகப்பனுர் என் விவாகத்திற்காக ஒவ்வொரு வருஷமும் முயற்சி செய்து தகுந்த வரன் கிடைக்காததால் ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தார். இப்பொழுது என் வயது 27. என் கடைசித் தங்கையின் வயது 18. எனக்குத்தான் கல்யாணமாகவில்லை யென்ருல் அது காரணமாக என் தங்கைகளுக்கும் மணம் புரிவது இயலாத காரியமாயிருக்கிறது. இப்பொழுது வீட்டில் என் தாயாருக்கு ஒத்தாசையாக நாங்கள் ஆறு வேலைக்காரிகள் இருக்கிருேம். எங்களால் என் தகப்பனுருக்குக் கஷ்டமும் மன வெதும்புதலும் தவிர வேறில்லை. அவருக்கு மாத வரும்படி நூறு அல்லது நூற்றைம்பது. எங்கள் வாழ்க்கை எப்படிப்பட்டது என்று நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள். ஒரே வார்த்தை சொல்லிவிட்டு என் சொந்த புராணத்தை முடித்து விடுகிறேன். இதுவரையில் நான் பல முறை தற்கொலை செய்துகொண்டு குடும்பத்திற்கு என் பாரமில்லாமல் செய்துவிடலாமா என யோசித்ததுண்டு. என் சகோதரிகளுக்கும் இந்த எண்ணம் தோன்றவில்லை என என்ருல் சொல்லமுடியாது. இது ஒரு புறமிருக்க நமது யுவர்கள் காலேஜில் படிக்கும்போது சிறிதளவாவது காதற் பயிற்சி பெருமல் இருப்பதில்லை. நமது களங்க உள்ளம் காரணமாக அவர்களால் தங்கள் மனைவியரின் தூய்மையை சந்தேகிக்காமலிருக்க முடிவதில்லை. இதன் காரணமாக மணம் புரிந்துகொண்டு பிரிந்துள்ள மங்கையர் அநேகர். இவ்வாறு பல நவீனமான துன்பங்கள் தற்கால மங்கைகளின் வாழ்க்கையைப் பாழ்படுத்த ஏற்பட்டுள்ளன.

இரண்டாவது உலக யுத்தத்துக்குமுன் இளம்பெண்கள் காமப்பேய் பிடித்த யுவர்களைக் குறித்து எச்சரிக்கப்படுவது சாதாரணம். இப்பொழுது மணமாகாத மங்கையர் மலிந்துள்ளதால் சில இளைஞர்கள் 'உஷார்' படுத்தப்பட்டதாக ஊர்க்குருவி சொன்னுலும் அதிசயப்பட வேண்டாம்.

முன்பெல்லாம் 'கன்னிப் பருவம்' கழிக்கப்பட வேண்டுமென்று பெற்ருேர்கள் பல தியாகங்களைச் செய்தனர். அவற்றில் முதன்மையாக வந்தது பெண்களின் மனச்சாந்தி. ஒரு பெண்ணுக்கு இருபது வயதுவரை கல்யாணமாகாமலிருந்து விட்டால் அது குடும்பத்திற்கே பெருத்த களங்கமாகக் கருதப்பட்டது.

"உன்னை எவண்டி கல்யாணம் செய்து கொள்வான்" என்பது ஓர் வசைச்சொல்லாக இருந்தது.

"செய்துகொள்ளா விட்டால் போகட்டுமே" என்று பெண் எதிர்த்துச்சொல்லும் காலம் இப்பொழுது வந்திருக்கிறது.

எப்படியாவது அகமுடையானைச் சம்பாதித்துக்கொள்வது என்ற லட்சியம் மாறவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது.

இந்த யுத்தத்தில்தான் நான் பிரவேசித்தேன். என் அத்தை ஊரிலிருந்து வந்த பொழுதெல்லாம், "ஏண்டாப்பா சரசுவுக்கு வரன் ஏதாவது வாச்சுதா" என்று கேழ்ப்பாள். பதில் சொல்லிச் சொல்லி அலுத்த என் தகப்பனர் 'இல்லே' என்பதற்கறிகுறியாகத் தலையை ஆட்டுவார். அவருக்கு இந்த இகழ்ச்சியை ஏற்படுத்தாமலிருக்க முடிவு செய்துவிட்டேன்.

என் சிநேகிதைகளில் பலர், [எனக்கு எழுதவே அவமானமாயிருக்கிறது] தங்களை மணம் செய்துகொள்ள வந்த முதல் வரனை முடித்துக்கொண்டு அதற்காகப் பகவானுக்கு நன்றி செலுத்துகிறார்கள்; ஏதோ ஒரு கல்யாணத் தாகனுக்கோ தங்கள் தாயாருக்கோ நன்றி செலுத்துவதற்குப் பதிலாக.

எனக்காக என் சிநேகிதைகள் பரிதாபப்படுவது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. நான் என் வேலேசெய்து பிழைக்கக்கூடாது. நான் பெண்ணாய்ப் பிறந்ததற்காக என்னைப் பராமரிக்க ஒரு புருஷனை எதிர்பார்க்க வேண்டுமா? உண்மையில் நான் அந்த சிநேகிதைகள் பலரின் வாழ்க்கையை நினைத்து மிகவும் பரிதாபப்படுகிறேன்.

இருபது வயதுக்குள் மணம் செய்துகொள்ளாத மங்கை தன் வாழ்க்கையை தேச சேவைக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டுமென்பது என் கொள்கை. அதனல் நான் மனச்சாந்தி பெற்று என் வாழ்க்கையை நன்மதிப்புள்ளதாக ஆக்கிக்கொண்டிருக்கிறேன்.

கல்யாணம் செய்து கொள்ளாத பெண் கவர்ச்சியற்றவளாகவோ, அவலட்சணம் பிடித்தவளாகவோ இருக்க வேண்டாம். அவர்கள் சுய நம்பிக்கையுள்ளவர்கள். தங்களை ஒரு மனிதனின் உழைப்பால் வயிறு வளர்க்கும் புல்லுருவியாக ஈசன் படைக்கவில்லை என்ற திட நம்பிக்கை கொண்டவர்கள். சுதந்தர வாழ்க்கையின் இன்பத்தில் லயித்து தனிமையின் இனிமையை உணர்ந்துகொண்டவர்கள். கன்னியாகுமரியைப்போல தவ முயற்சியே, தவப்பலனைக் காட்டிலும் மேன்மையானதென முயற்சியில் ஈடுபட்டவர்கள். தம்மை மணம் செய்துகொள்ள ஒருவன் கிடைக்காததால் கன்னிகைகளாக இருப்பதாக எண்ணுதவர்கள். ஒரு ஆடவன் பிரம்மசாரியாகக் காலங்கழிக்கலாமெனின், ஒரு பெண் கன்னிகையாகவே தன் வாழ்நாளை தேசத் திருப்பணியில் செலவழிக்கக் கூடாதா?

மகாத்மா காந்தியின் நினைவில் பல ஸ்தாபனங்களை நிறுவத் தலைவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளனர்.

என்னைப்போன்ற மனப்பான்மை கொண்டுள்ள பல ஆயிரம் சகோதரிகளுக்கு சேவை செய்ய ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினல் எவ்வளவோ பயன் உண்டாகுமல்லவா?

தாத்தாவின் கடிதம்

ஸ்ரீ

சௌபாக்கியவதி குருவம்மாவுக்கு தாத்தா அநேக ஆசீர்வாதம். தாத்தா எழுதிய கடிதங்கள் மங்கையில் வந்து விடும். ஆனால் என்ன? மங்காமல் இருக்கும். கன்னியா குமரியில் ஒரு மங்கை இருக்கிறாள். அவள் மங்காத மங்கை. மங்கைப் பருவத்தை ஸ்திரப் பருவமாகக் கொண்டிருக்கிறாள். அவளுடைய தவ மகிமை அவளை சதாகாலம் மங்கையாய் நிறுத்தி விட்டது போலும்! காலம் கடந்தவள் ஈஸ்வரனை அடைய தவம் புரிந்தாள். ஈஸ்வரனை அடைந்த பின்னர் யோசித்தாள். ஈஸ்வரனை அடைந்த சுகம் பெரிதா? அவனை அடைய இயற்றிய தவத்தின் சுகம் பெரிதா? தவ முயற்சியே தான் அடைந்த பேறு என்ற நிச்சயத்தை அடைந்தாள். தவ முயற்சியின் அனுபூதியே ஈசன். இதை உணர்ந்த பின்னர் ஈசனை தவ முயற்சியிலேயே கண்டு களிக்க மங்கையாய் நின்று விட்டாள் போலும்! கண்ணனிடத்தில் மாறாத அன்பு கொண்ட குழந்தாய்! உன் மங்கைப் பருவமும் அவ்வாறே வாழ்க. மணம்புரிந்த பின்னும் கணவரோடு மங்கையும் குமரியுமாய் நீடூழி வாழ்க. சிவன் சக்தியை யணைத்தும், சக்தி சிவத்தை யணைத்தும், இருவரும் ஒருவரை ஒருவர் பாராது, ஒருவரை ஒருவர் நினைந்து, தவ யோகத்தில் கண்கள் உள் நோக்க, ஆனந்த அனுபூதியான ஒரு பிம்பம் என் எதிரில் இருக்கின்றது.

யாவர்க்கும் ஒரு தெய்வம்

யாவர்க்கும் ஒன்றென்ற
தெய்வமுண்டு ஞானிகள்
உள்ளத்தினுள்ளே
கண்டதுண்டு
அன்பெனு மாசார
பூஜையுண்டு—அதற்கு
ஆனந்தமென்றதோ
ரனுக்ரஹமுண்டு
தொண்டர்கள் போற்றுங்கால்
உருவமுண்டு—கல்
கண்டர்கள் காணாத
மாயையுண்டு
உருவங்கள் அற்றதோர்
அருவமுண்டு—மேலும்
யாவுமே ஒன்றென்ற
பரமமுண்டு
பேதித்து நின்ற
விசித்திரமுண்டு—அதை
ஆய்ந்தறிய கூர்மை
அன்புமுண்டு
அன்பற்ற வாழ்வென்ற
துன்பமுண்டு—மேலும்
அறிவுற்ற அன்பெனும்
பேரின்பமுண்டு
—[யாவர்க்கும்]

இப்படிக்கு:
உன் அன்புள்ள,
தாத்தா

எதிர்பாராதது!

"கல்பனா"

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

'எதிர்பாராதது' வளர்ந்து வருவதை 'மங்கை' வாசகர்கள் ஆர்வமுடன் வரவேற்பது கண்டு மகிழ்வடைகிறோம். மனோதத்துவ அடிப்படையில் சுவாரஸ்யமான அம்சங்களுடன் நீண்டு வரும் இக் கதையில் கற்பனைச் சுவையும் நிரம்பி யுள்ளது. இந்த இதழில் 'அவள்' திரும்பவும் தன் மன நிலையை விளக்கியிருக்கிறாள். ஏனோ இன்னும் அவர் மனைவி மட்டும் வாய் திறக்கவில்லை. அடுத்த இதழிலாவது கட்டாயம் 'அவரும், அவர் மனைவியும்' நிலைமையை விளக்க வேண்டும். சிக்கலைத் தீர்ப்பது யார் கையில் இருக்கிறது என்பதை நம்மால் இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

நான் ஊர் திரும்பியதும் கடிதம் எழுதினேன். அவரும் தாமதியாது பதில் எழுதினார். பிறகு எங்களிடையே கடிதப் போக்கு வரத்து ரொம்ப சுவாரஸ்யமான முறையில் நடந்தது. ஆனால் அவருடைய கடிதங்களில் எனக்கிருந்த கவர்ச்சியைப்போல ஒரு விசித்திர மாறுதலும் இருந்தது.

ரயிலில் ஆரம்பமான நட்பு கடிதங்கள் மூலம் வெள்ளம மாதிரி பெருகிவிட்டது. ஏதோ ஒரு புதிய உலகுக்கு, அவர் கடிதங்கள் என்னை அழைத்துச் சென்றன. தன் மதிப்பின் அளவுக்கு மாறுதலில்லாது, அவர் எழுதினார். நானும் அவரும் எங்கள் வாழ்க்கையைப் பற்றியே கடிதங்கள் மூலம் சர்ச்சை செய்துகொள்ள ஆரம்பித்தோம்!

என் வாழ்வில் நான் அதுவரை அனுபவித்த சுக துக்க நிலைகள், வெற்றி தோல்வி அம்சங்கள் எல்லாவற்றையும் ஓரளவு அவரும் தெரிந்து கொள்ளும்படி எழுதினேன். அவரும அப்படி அலட்சியமாக இருந்துவிடாமல் ஆதரவும், ஆறுதலும் தரும் முறையில் பதில் எழுதினார். அவரைப் பற்றியும் எழுதினார். அவருடைய ஆறுதலான வார்த்தைகள் என்னைப் புது மனுஷியாக்கியது. அன்றுவரை தோல்வியால், ஏக்கத்தால் தடுமாறித் தவித்த நான் அலாதி தைரியமும் நம்பிக்கையும் பெற்றவளாகிவிட்டேன்.

அவர் என்னை தன்னம்பிக்கை கொள்ளச் செய்து விட்டதென்னவோ உண்மைதான்.

ஆனால் அவர் எழுத்துக்களிலே அலாதியாகக் காணப்பட்ட மாறுதல்—என் என்றுதான் புரியவில்லை. அந்த 'மாறுதல்' எனக்கு வியப்பை அளித்ததுடன் நிற்கவில்லை. ஓரளவு உண்மையறிய வேண்டிய 'ஆர்வத்தையும்' தூண்டியது. ஆனால் இந்த மாறுதல் எதிர்பாராத விதத்தி

லிருந்ததுதான் அதிசயம். அவர் தம் அன்புக்குரியவளாக என்னை நினைத்ததும் சரி, நான் அவரை என் அன்புக்குரியவராக நினைத்ததும் சரி. என்றாலும் அன்பின் வளர்ச்சி......இந்த 'அன்பு' பற்றிய விளக்கம்தான் தீர்மானிக்கப்படவேண்டும்.

என்போன்ற ஒரு யுவதி, அவரைப் போன்ற ஒரு யுவரிடம் அன்பு பாராட்டுவதை 'உலகம்' எப்படி நோக்கும்? அந்த நோக்கத்தில் எத்தனையோ விதவிதமான உணர்ச்சிகள் பிரதிபலிக்குமல்லவா? 'உலகத்'தைப்பற்றிய அக்கரையில்லாமல் எங்களால் வாழமுடியுமா? இது சர்ச்சைக்குரிய விஷயம். அவர் யார்? நான் யார்? எதற்காக இந்த விசித்திரமானதொரு 'சிக்கலில்' சுழலவேண்டும்? அவர் மனதில் என்னைப்பற்றிய அபிப்பிராயம் எவ்வகையில் உருவகமாகியிருக்கிறது? என் அதைத் தெரிந்துகொள்ளாமல் அவரிடம் நான் என்னைப்பற்றித் தெரிவிக்க வேண்டும்? நான் அவசரப் பட்டுவிட்டேனே ஒரு வேளை!

இதில் அவசரப்படவில்லை. நாங்களிருவரும் நிதான நிலையிலிருந்து நழுவிவிடவில்லை. பவித்திரமான சூழ் நிலையைப் பாழ்படுத்தும் எதுவும் எங்கள் கடிதப் போக்குவரத்திலில்லை. அவர் என்னிடம் அவ்வளவு சுவாதீனம் பாராட்டியதில் என் மனம் நெகிழாமலில்லை. அவர் கடிதங்கள் எனக்கு அலாதி ஆறுதலையும், நெகிழ்ச்சியையும் உண்டாக்கியதைப் போல வியப்புணர்ச்சியையும் உண்டாக்காமலில்லை. வியப்படையக் காரணமிருந்தது. எதிர்பாராதவிதமாக இன்னொரு அதிசய நிகழ்ச்சி! என்னால் வரிக்கப்பெற்றவர், மூன்று வருஷங்களுக்கு முன்னால் என் இதயங் கவர்ந்துவிட்டவர், மணந்தால் இவரையே மணப்பேன், இல்லையேல் கன்னியாகவே மாய்வேன் என்று நான் உறுதிகொள்ளக் காரணமாகவிருந்த அந்தச் சீமான் என்னை மணக்க முன் வந்தார். பெற்றோர் ஆதரவுடன், உற்றார் உதவியுடன் நாளும் நிச்சயமாயிற்று.

அந்த நாள்...என் வாழ்விலே என்றென்றும் இன்பம் நிலவச் செய்யும் நாள். நான் மூன்று வருஷ காலமாக கண்ட கனவுகள் யாவும் பலிதமாகும் நன்னாள்; இதுவும் நடக்குமா என்ற ஏக்கத்தில் திக்குத்திசை தெரியாத உலகக் காட்டில் நடைப் பிணம் போல் நகர்ந்த என்னுடைய வாழ்வில் நவஜீவன் ஊட்டி இனி உன்னுடைய எதிர்காலம் சந்துஷ்டியாக, சந்தோஷமாக இருக்கும் என்று இறும்பூதெய்தச் செய்த நாள் அந்த நாள்... அதிசயமான ஆனால் அதி இன்பமான நாள். இந்த அதிசயத்தில் என் நிலையே மாறிவிட்டது. அவருக்கு நான் இந்தச் சந்

தோஷச் செய்தியை எழுதவில்லை. தவறு செய்து விட்டேன். எவர் என் வாழ்வில் நன்மையை அதிதுரிதமாகவும் ஆவலாகவும் விரும்பினாரோ அவரிடம் நான் இந்த உண்மையைத் தெரிவிக்காமலிருந்து விட்டேன். இந்தத் தவறினால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் பற்றி நான் சிந்திக்கவேயில்லை. என் மனதிலே நிரம்பியிருந்த இன்பப்போதையில் மெய்ம்மறந்து விட்டேனோ! இல்லை. பெண்களுக்குரிய பேதைமையில் சிக்கி நிலைமாறி விட்டேனோ? தெரியாது.

ஆனால் இப்போது நான் செய்த அந்தத் தவறைத் தெரிந்து கொண்டு விட்டேன்.

பின்புத்திக் கிலக்காவது பெண்களுக்கு இயற்கை. அவருடைய அந்தரங்கத்தைத் தெரிந்துகொள்ள நான் காட்டிய அக்கரையைப் போல் என்னுடைய அந்தரங்கத்தை அறிவிப்பதில் நான் அக்கரைகாட்டவில்லை. ஆனால் நான் ஒரு தவறுக்குத் துணையாக இரண்டாவது தவறும் செய்யத் துணிந்தது ஏன்?

முதலில் முக்கியமான உண்மையை மறந்தேன். இரண்டாவது அவருடைய அந்தரங்கம் தான் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்பினேன்.

முதல் தவறுக்குச் சமாதானம் கூறமுடியும். அவரும் நம்புவார். ஆனால் இரண்டாவது...எனக்கு முன்கூட்டியே அவர் மனதிலுள்ளது தெரியாமலில்லை. அவர் இன்னதைத்தான் எழுதப் போகிறார் என்று நான் ஊகித்துக் கொண்டேன். இருந்தாலும் அவராகத்தான் எழுதட்டுமே. என் ஊகம் சரிதானா என்று திடப்படுத்திக் கொண்டு பிறகு அவருக்கு எழுதலாம் என்றுதான் முதல் உண்மையை மறைத்தேன்.

ஆனால் அவர்தம் அந்தரங்கத்தை எழுதியதும் நான் முன் கூட்டி ஊகித்ததை ஊர்ஜிதம் செய்யும் மாதிரியிருந்தது. அவர் என் மீது காட்டிய அன்புணர்ச்சியை நான் எந்த ரீதியில் வரையறுத்

துக் கொள்வது? கடிதங்கள் கை மாறின. நாலைந்து மாறி ஆரு வதும் வந்தது. ஒரு தெளிவான நிலைமை. அவர் 'உள்ளத்தை' இப்போது ஓரளவு என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இரங்குவதா? வெறுப்பதா? அல்லது ஏற்றுக் கொள்வதா? எவ்வழியும் போக முடியாது. அதாவது ஏற்றுக்கொள்வதற்கு இடம் இல்லை. வெறுத்துவிட வகையில்லை. ஆனால் இரங்கி விட்டுக் கொடுக்கவும் இயல வில்லை! அவரிடம் நான் கொண்ட கவர்ச்சிக்கோ, அல் லது மதிப்புக்கோ குறைவில்லை. ஆனாலும் 'உண்மை' யைப் பற்றி புரிந்து கொண்ட பிறகும் அவரை இப்படி எழுதும்படி விட்டுவிட மனம் இல்லை.

'கொண்ட மனைவி இருக்கிறாள். குஞ்சலம் போல் குழந்தையும் இருக்கிறது. என்னைவிட அவர் மனைவி எவ்விதத்திலும் தாழ்ந்த வளாயிருக்க முடியாது. அழ கிலோ, அறிவிலோ, பணங் காசிலோ அவள் என்னைவிட ஒரு படி மேல்தான். அவருக்கு இதெல்லாம் தெரியாதா? என்னை விடச் சிறந்த பெண்களை அவர் சந்திக்கலாம். சம்பாஷித்திருக் கலாம். நெருங்கிப் பழகி யிருக் கலாம். நட்பு முறையிலே ஆனால் என்னிடம் அவருக்கு உண்டான கவர்ச்சி வளர்ந்து விட்டதன் காரணம் என்ன? இந்தக் கார ணம் கொஞ்சம் அதிசயமானது தான்.

நான் அவர் கற்பனையின் 'சிருஷ்டி!' விசித்திரமான கார ணம். ஆமாம். அதாவது அவர் என்னை ஏற்கனவே கற்பனையில் —கதையில் உருவகப்படுத்தி யிருந்தார். உயிருடன் என்னைக் கண்டதும் ரத்தமும், நரம்பும், சதையும் கொண்ட உண்மை உருவைக் கண்டதும் பிரமித் திருக்க வேண்டும். கற்பனை பிர மிப்பின் முகவாயில். அந்தப் பிர மிப்பின் வளர்ச்சி, கவர்ச்சியும் களங்கமற்ற அன்பும். இப்போது கவர்ச்சி எல்லையற்ற, வரையறை யற்ற அன்பில் லயித்து விட்டதில் ஆச்சரியமில்லை.

ஓரளவு நானும், என்னுடைய வாழ்க்கையும்தான் இதற்குக் காரணம். என்னைப் பற்றி நான் —முக்கியமான சிலவற்றைத் தவிர—அவருக்கு எழுதி யிருந் தேன். மனம் விட்டு எழுதியிருந் தேன்.

எனக்கு அவரிடம் இப்படி மனம்விட்டு நடந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது ஏன் என்று இப்போதுகூற முடி யாது. ஆனால் சகோதரப்பான் மையில் பேசவோ, எழுதவோ, தயக்கமோ, களங்கமோ ஏன்?

"ஏற்கனவே என் இதயத்தில் ஒருவர் அமர்ந்துவிட்டார். அவ ரைத் தவிர இன்னொருவருக்கு இடமில்லை. உங்களுக்கு மனைவி யிருக்கிறாள். நீங்கள் இப்படி உள்ளக் கவர்ச்சி கொள்வது தவறு. உங்கள் மனைவிக்குத் துரோகம் செய்வது தகாது. நான் அவளைப் போல் ஒரு பெண். எனக்கு அவள் உள்ளம் தெரியும். அவள் அறிந்தால் தவிப்பாள். அவளைத் தவிக்க விடுவது உமக்கு அழகல்ல."

இப்படி நான் எழுதினேன். எப்படியோ அவசரத்துடன் எழுதினேன். எழுதின பிறகு தான் ஓரளவு நிம்மதி பெற்றேன். ஒரு நல்ல காரியம் செய்து விட்ட தாகவும் நினைத்தது என் மனம். ஆனால் இதனால் அவர் நட்பு

தகர்ந்து விடுமோ என்ற அச்சமும் இல்லாமல் இல்லை.

'இவருடன் ஏன் பரிச்சயம் செய்து கொள்ள வேண்டும்? பிறகு இப்படியெல்லாம் தவிக்க வேண்டும்? என்று மீண்டும் நினைத்தேன். தவறு. இக் கடித மூலம் அவர் மனம் வேறுபடக் கூடாது, மாற வேண்டும். ஆனால் நட்பு முறையில் பழக அவர் தயங்கினால் மனிதத் தன்மைக் குத் தகுதியற்றவர் என்று கருதினேன். "ஒரு பெண்ணைக் காதலிக்கலாம். காதலித்து ஆனந்திக்கலாம். ஆக்ஷேபணையில்லை. ஆனால் அவள் உன்னைக் காதலிக்கிறாளா? என்று தெரிந்துகொள். இல்லாவிட்டால் பயனில்லை என்று விட்டு விடுவதுதான் மனிதத் தன்மை" என்று ஒரு அறிஞர் எழுதி யிருப்பது அவருக்குத் தெரியாமலிருக்காது.

ஆனால் அவருடைய கடிதத்தில் இருந்த ஒரு வாக்கியத்தை மட்டும் நான் மறக்க முடியாது. "உனக்கு நான் இப்படி எழுதுவது ஆச்சரியமா யிருக்கும். ஆனால் நான் உன்னிடம் கொண்ட கவர்ச்சியை மறந்து விட உன்னுடைய மனங்கவர்ந்தவரிடம் நீ சேர்ந்துவிட வேண்டும்" என்று எழுதி யிருந்தார். ஆமாம். இது உண்மையிலும் உண்மை. எவ்வளவு ஆழ்ந்த யோசனையுடன் அவர் இப்படி எழுதி யிருக்க வேண்டும்!

இருந்தாலும் ஏனோ என்னால் இவ்வாக்கியத்தின் உட்கருத்தைப் புரிந்துகொள்ள அப்பொழுதே முடியவில்லை. இதைத்தான் பெண்சுபாவம் என்று சொல்லுகிறார்களோ? இதற்கு முன்னால் இப்படி யாராவது சொன்னால் கேவலப்படுத்துவதாக நினைப்பதுண்டு. இப்போதுதானே சொல்லிக் கொள்கிறேன்! அவர் மனதில் உள்ளதை சொல்லிவிட்டார். ஏற்கனவே நான் என் அந்தரங்கத்தை மறைக்காதிருந்தால் அவர் இதை மறைத்து விடுவார் என்று அஞ்சினேன். இப்படி நான் அஞ்சி மறைத்ததை அவர் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார். தம் மனதைத் திறந்து காட்டி விட்டார், ஆகவே அவர் மீது நான் தவறைச் சுமத்தும் முன்னர் என் மீதும் சுமத்திக் கொள்ள வேண்டியவளா யிருக்கிறேன்! இடையிலே என் கல்யாண தினம் நெருங்கி விட்டது. அவரை வரும்படி எழுதினேன்! அவரைச் சோதனை செய்வதற்கும் இது ஒரு சந்தர்ப்பமில்லையா? வர மறுப்பார். அல்லது வந்தாலும்—ஆனால் அவர் மறுக்கவில்லை. வந்துவிட்டார். சர்வ சாதாரண முறையில், சகோதரப் பான்மையில் வெகு சஹஜமாக உரிமையுடன் வந்தார். என் உள்ளத்தில் ஒரு திகைப்பும் பிரமையும் தட்டியதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. அவரிடம்தான் எவ்வளவு களங்கமற்ற பாவனை!

அவருடன் தனியாகப் பேச வேண்டு மென்று என் மனம் விழைந்தது. ஆனால் அவர் நடந்து கொண்ட விதம்—எங்களிடையே நடந்த கடிதப் போக்குவரத்தின் போது அவர் மீண்டும் நேரில் சந்திக்கும்போது எப்படி யெல்லாம் நடந்து கொள்ளுவார் என்று நினைத்தேனோ அப்படி அவர் நடந்து கொள்ளவில்லை. என் நினைவை அவர் சிதறடித்து விட்டார்.

கடிதங்களில் மனம் விட்டு என்னவெல்லாமோ எழுதிய அவர், செயல் முறையில், நேரில் அதை யெல்லாம் மறந்தவர்

போல் நெடு நாளைக்குப் பிறகு ஒரு தங்கையைச் சந்திக்க வரும் தமையனைப் போல் நடந்து கொண்டதுதான் விந்தையிலும் விந்தை!

ஆமாம்! இது விந்தையிலும் விந்தைதான். தனக்குக் கிட்டாத பொருள் என்று தெரிந்ததும் அவர் ஒதுங்கி அலட்சியப்படுத்தி விடவில்லை. ஏனென்றால் அவர் உள்ளூர இப் பொருள் தனக்குரியதல்ல என்று தீர்மானித்திருக்கவேண்டும்.

தன்னால் கவர்ச்சிக்கப் பெற்ற பொருள் இன்று வேறொருவருக்கு உரிமையாகிறது. இது பற்றி ஒரு சலனமும் இல்லை. உரிய பொருள் உடையவனிடம் சேர வேண்டியதுதானே என்று எண்ணுகிறது அவர் நெஞ்சம்.

மனதிலும் மாசு இல்லை. நடைமுறைச் செயலிலும் மாசில்லை.

இப்படியும் ஒருவர் இருக்க முடியுமா?

ஸ்திரீகள்தான் மனதிலே குமுறி யெழும் உணர்ச்சிகளை, ஆசை அபிலாஷைகளை வெளிக் காட்டாமல் சாகும்வரை இருப்பார்கள் என்று சொல்வதுண்டு.

ஆனால் ஆண்களிலும் இப்படி ஒரு சிலர் இருக்கத்தான் இருக்கிறார்கள். இப்போது சொல்லுகிறேன்; அவர் நீறு பூத்த நெருப்புக்குச் சமானம்.

அன்று ரயில் பிரயாணத்தின் போது அவர் நடந்து கொண்ட முறையைவிட அமரிக்கையாகவும், அன்பாகவும் நடந்து கொண்டார். என்னிடம் மட்டும் அல்ல. என்னுடைய பெற்றோரிடமும் மற்றவர்களிடமும் அப்படியேதான்.

இந்தத் தடவைதான் நான் ஓரளவு அவரைச் சரியாகத் தெரிந்துகொண்டேன். ஓரளவுதான். இனி என்றாவது ஒருநாள் அவரைப் பூரணமாகத் தெரிந்து கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

“நீங்கள் வரமாட்டீர்கள் என்று நினைத்தேன்” என்று சொல்ல விரும்பினேன். ‘ஏன் வரக்கூடாது?’ என்று கேட்டு விட்டால்...‘ஐயையோ! நீங்கள் வந்தது பற்றி எனக்கு எவ்வளவோ சந்தோஷம். ஆனால் உங்கள் மனங்கவர்ந்தவள் இன்று வேறு ஒருவரின் வாழ்க்கையில்...’என்று நான் சொன்னால்—‘இதெல்லாம் சஹஜம். சர்வ சாதாரணமாக நடக்கக் கூடியதுதான்!’ என்று பட்டவர்த்தனமாகப் பதில் சொல்லுவார். பிறகு நான் என்ன பேச முடியும்?

இப்படி யெல்லாம் நானே அவருக்கும் எனக்கும் சம்பாஷணை நடப்பதாகக் கற்பனை செய்து கொண்டேனே ஒழிய சம்பாஷித்துவிடவில்லை!

அவர் என்னுடைய தந்தையிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

அவருடன் தனியே பேச வேண்டுமென்று என் மனம் நினைத்தாலும் ஒரு தயக்கமும் உண்டாகாமலில்லை. மாடிக்கும் உள்ளுக்குமாக பலமுறை நடந்தேன்.

காப்பி கொண்டு தரும்படி பரிசாரகனிடம் சொன்னேன். பலகாரம் அனுப்பும்படி அவசரப் படுத்தினேன். ‘ஒரு டம்ளர் நல்ல தண்ணீராகக் கொடுத்தால் போதும்’ என்றார் அவர்.

எனக்கு அவ் வார்த்தை பரிகசிப்பதுபோலிருந்தது. சே! அவசரப் புத்தி ஆகாது. என் தகப்பனுர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவரோ எதிரில் ஒரு பாயில் உட்கார்ந்திருந்தார்.

சாதாரண எளிய கதர் சட்டையணிந்திருந்தார். தோள் மீது அலட்சியமாகக் கிடந்தது அங்கவஸ்திரம். முன்னேப் பார்த்தபோது இருந்ததைவிட இப்போது மாறி யிருந்தார். ஆனல் எந்தவித மாறுதல் என்று என்னுல் நிர்ணயிக்க முடியவில்லே. மாறுதலில் ஒரு கவர்ச்சியும் இருந்ததை மறைக்க முடியாது. மீண்டும் நினைத்தேன், தனியே பேச வேண்டுமென்று. ஆனல், அவர் ஏதோ பேசிவிட்டுப் புறப்பட்டார். என் மனம் துணுக்குற்றது.

வாசற்படி யண்டை வந்தேன். அவரும் புறப்படட்டுமா? என்று கேட்டபடி என்னே நிதானமாகப் பார்த்தார்.

அடுத்த வீட்டிலே நாளை என் கழுத்தில் மாங்கலியத்தைச் சூட்டும் உரிமை படைத்தவர் இருக்கிருர். மூன்று வருஷகாலமாக அவருக்காக நானும், எனக்காக அவரும் காத்திருந்தோம். பொழுது விடிந்தால் நான் அவர் மனேவி. உலகம் என்னேக் கன்னிப் பெண்ணுக மதிக்காது. சுமங்கிலியாக மதித்துப் போற்றும். ஆனல்.........

இவர் மனம் என்ன நினைக்கும்? அறிந்துகொள்ள ஆசைப்பட்டது என் மனம்.

'நாளை முகூர்த்தத்திற்கு வருகிறேன்,' என்று புன் சிரிப்புடன் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். என் மனதிலே ஒரு கொந்தளிப்பு. ஆனந்தத்தாலா அல்லது வருத்தத்தாலா? இன்னதென்று விவரிக்க இயலாத குழப்பம். எதனுல்? நாளைய இன்ப நிலையை இன்றே நினைத்து குதூகலம் அடைய வேண்டியவள் குழம்புவானேன்?

முன்பு என் கல்யாணத்தின் போது அவர் வராமலிருந்தால் ஒரு பெருங் குறை என்று நினைத்தேன். இப்போது அவர் வந்துவிட்டார். நான் ஏன் கலக்கமடைய வேண்டும் என்று எனக்கே புரியவில்லே. ஏன்? மறுநாள் முகூர்த்தத்தின்போது வந்தார். ஆனல், மாங்கலிய தாரணம் முடிந்த பிறகுதான் வந்தார். எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்தார். ஐந்து நிமிஷம் இருந்திருப்பார். அப்புறம் புறப்பட்டு விட்டார்.

அவர் வந்தபோது பார்த்தேன். ஆனல் அவர் நான் பார்த்ததைக் கவனித்தாரோ இல்லேயோ. வந்த வழியே திரும்பிவிட்டார்.

அவர் புறப்பட்ட பின்னர்... என்னைத் 'தீர்க்க சுமங்கிலி பவ' என்று வாழ்த்துபவர்களின் மங்களகரமான வேளையில் அவரைப் பற்றிய நினைவு இல்லாமலில்லே. இப்போது என் மன வெளியில் நடமாடிய சிந்தனைச் சிதறலைப் பற்றிக் கொஞ்சம் சொல்லத்தான்வேண்டும். மனச்சாட்சியை மதிக்காமலிருக்க முடியாதல்லவா? அவர் இதயத்திலே எனக்குத் தனித்ததொரு ஸ்தானம் கொடுத்திருக்கிருர். நானும் வேறு ஒரு வகையில் அவருக்கு இந்த ஸ்தானத்தை அளித்திருக்கிறேன். ஆனல் அவர் என் உடன்பிறந்த சகோதரர் கூட இல்லேயே. ஏன் அவரிடம் நான் அன்பும் மதிப்பும் கொள்ள வேண்டும்?

'ஏன் செய்யக்கூடாது? எனக்குச் சகோதரன் இல்லாத குறையை அவரைக் கொண்டு தீர்த்துக்கொள்ளக் கூடாதா?

'யாரோ ஒருவன் எப்படிச் சகோதர முறை பாராட்ட முடியும் என்பதை மறந்து விடாதே.

மனம் விரும்பியது. யாரோ ஒருவர் நெருக்கமானவராகி விட்டார். இப்போது அவர் யாரோ ஒருவர் அல்ல.

'விசித்திரமான பாந்தவ்யம்.'

'விசித்திரம் ஒன்றும் இல்லையே இதில். அவர் என்னிடம் சகோதர முறை பாராட்ட வேண்டும் என்று சொல்லி விட்டேன். என்னுடைய சகோதரனுக்கு நான் அன்பு செலுத்தக் கடமைப்பட்டவ ளில்லையா? 'கடமையைப் பற்றியா பேசுகிறாய்? உன் கணவர் இருக்கிறார். கடமையும் காத்திருக்கிறது.

'என்ன முட்டாள்தனமான வாதம். என் கணவருக்கும் ஒரு சகோதரியின் கடமைக்கும் என்ன சம்பந்தம்?

'சம்பந்தம் இல்லை. ஆனால் கடமை யிருக்கிறது. கணவருக் குச்செய்யவேண்டிய'—ே த்தல் என் கணவரைப் பற்றி விபரீத சர்ச்சை செய்யவேண்டாம். அவர் இவ் விவாதத்துக்கு அப்பாற்பட்டவர்.

'அப்படியென்றால்?

'என் கணவர் என்னுடைய கண் கண்ட தெய்வம். தெய்வத் தின் மதிப்பைப் பற்றிப் பேசுவ தற்கு அவசியம் இல்லை யல்லவா?

'வாஸ்தவம், ஆனால் தெய்வத் தின் உலகத்தைப் பற்றிக் கூடவா சர்ச்சை செய்யக்கூடாது.

'இதென்ன புரியாத கேள்வி?

'உன்னுடைய கணவரும், அவரும் இந்த உலகத்தைச் சேர்ந்தவர்கள்தானே?

'ஆமாம், நானும்தான்.

'உன்னுடைய கணவரைப் பற்றி அவருக்கு என்ன அபிப் பிராயம் என்பதை—நான் அறிவேன். என் மனம் விரும்பிய வர் எனக்கேற்றவர் என்பது தான், என் கணவர் என்பது தான் அவர் அபிப்பிராயம்.

'பேஷ். இந்த அபிப்பிராயத் தின் உள் நிலை உனக்குப் புரிகிறதா?

'உள் நிலை யென்றால் கருத்தா?

'ஆமாம். உன் கணவரிடம் உன்னைச் சேர்க்க விரும்பினார் அவர். நீங்கள் இப்போது கணவனும் மனைவியுமாகிவிட்டீர் கள். அவர் தனியாகப் போய் விட்டார். நீ அவரை சகோதர னாகப் பாவிக்கலாம். அவரும் சகோதரியாகப் பாவிக்கலாம். ஆனால்......

'ஆனால் என்ன? அவர் தனியாகி விடவில்லை. ஆயிரங்கா லப் பயிராக வாழக் கூடியவர். மனைவியும் குழந்தையும், சுற்ற மும் உடையவர். என்னைப் பெறுவதில் அவர் தோல்வி யடைந்தது நியாயமே. என்னைப் பெற அவருக்கு உரிமையும் இல்லை. என்னை உரிமையுடையவ ரிடம் சேர்ப்பித்த பிறகு அவர் நிம்மதி பெறவேண்டியது தானே?

'நிம்மதியா? அவர் வாழ்க்கை யில் ஏதாவது ஒரு பகுதி உனக் குத் தெரியும் அல்லவா?

தெரியும், அதற்கும் இதற்கும்-

'சம்பந்தமுண்டு. திம்மதியை அவர் என்றுமே கண்டதில்லை. அவர் பூகம்பத்தின் மத்தியிலிருக்கிறார். ஆகவே கலங்குவதும் இல்லை. அப்படிக் கலங்கினாலும் காட்டிக்கொள்ளுவதில்லை.

அவரைத் தாங்க அவருடைய உற்றார் உறவினர்கள் இருக்கிறார்கள்.

அது அவர் மனதுக்கு ஆறுதல் அளிக்குமா?

அவர் மனைவியிருக்கிறாள்.

ஆமாம் அவள் ஒருத்திதான் இன்று அவருடைய வறண்ட பாலைவனத்தின் ஜீவஊற்று. அவளுடைய அன்பும் ஆதரவும்தான் இன்று அவரை ஒரு 'மனிதன்' என்ற நிலைக்குத் தகுதியாக்கியிருக்கிறது'.

'நானும் என் கணவர் வாழ்வில் இப்படித்தான் பங்கு பெற வேண்டும். இதற்குக் காலமும் சூழ்நிலையும் துணை செய்ய வேண்டும்.

'வேண்டியதுதான். ஆனால் கால வேகத்தில் நீங்கள் எல்லாம்—அதாவது அவரைத் தவிர—சந்தோஷமும் சுகமும் அனுபவிக்க உரிமையுள்ளவர்கள்.

—ஏன். அவருக்கு மட்டும் இல்லையா?

இது அவரால் விளக்கப்பட வேண்டிய பிரச்னை. நீயும் நானும் தீர்த்து விடக்கூடிய பிரச்னை அல்ல.

எனக்கும், என் மனச்சாட்சிக்கும் நடந்த இந்த விவாவதம் ஆசீர்வாதத்துடன் முடிந்தது.

'தீர்க்க சுமங்கிலி பவ' என்று அத்தனை பேர் வாய்களும் ஆசீர்வதித்தன. உள்ளப் பூரிப்புடன் என் கணவரை அள்ளி விழுங்கி விடுவதுபோல ஒரு முறை உச்சி முதல் உள்ளங்கால்வரை உற்றுப் பார்த்தேன்.

இதே சமயம் என் மனதிலே அவருடைய நினைவும் வந்தது. 'தீர்க்க சுமங்கிலி பவ' என்று அவரும் என்னை ஆசீர்வதித்துக் கொண்டுதான் புறப்பட்டிருப்பார். மற்றவர்களைவிட அவருக்குத்தான் நான் இல்லற வாழ்வை இன்பத்துடன் நடத்த வேண்டும் என்ற ஆசை உண்மையிலிருக்கமுடியும். எனக்கு மற்றவர்களின் ஆசீர்வாதத்தைவிட அவருடையதுதான் அவசியமானது.

(தொடரும்)



என்னதான் கஷ்ட நஷ்டங்களுக்கு உட்பட்டாலும் உண்மையைக் கண்டுபிடித்து அதைக் கடைபிடிக்க நாம் கடுமையாக உழைக்க வேண்டும். அவ்விதம் உழைக்காவிட்டால் நாட்டுக்கும், நாட்டு விடுதலைக்குமே நாம் நிச்சயமாகத் திங்கிழைத்தவர்களாவோம்.

—காந்தியடிகள்

அஞ்ஞான இருள் நீக்கி, மெய்ஞ்ஞான ஒளியைக் காட்டி எங்களை நடத்தி செல்லுவாய் என்று இறைவனிடம் மன்ருடிய மஹான்களின் வாக்குகளை இக் கட்டுரை தத்துவார்த்த ரீதியில் விளக்குகிறது.

பட்டினத்தார் காதல்

○

திருப்புகழ் மணி

"உலகம் யாவையும்
தாமுள வாக்கலும்
நிலைநிறுத்தலும்
நீக்கலும்—நீங்கலா
அலகிலா விளையாட்
டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்
கேசரண் நாங்களே"

நதியின் பிழையன்று
நறும்புன லின்மையற்றே
பதியின் பிழையன்று,
பயந்து நம்மைப் புரந்தான்
மதியின் பிழையன்று;
மகன் பிழையன்று மைந்த
விதியின் பிழை இதற்கு
என்னை நீ வெகுண்டது

உலகங்களை உண்டுபண்ணி ரக்ஷித்து, கடையில் அழித்தும் ஓயாத விளையாட்டாய் விளைவிப்பது தெய்வ சங்கல்பம் என்பர். மானிடன் அறிவு பெற்றிருப்பதால் தெய்வ சங்கல்பம் ஈதென்றுணர்ந்து அதன் வழியே தன் சங்கல்பங்களையும் ஒருமைப் பட வைத்துக்கொள்ள கடன் பட்டவன். இந்தத் தத்துவத்தை ராமன் லக்ஷ்மணனுக்கு நன்கு உபதேசிக்கின்றுர். நாடு நகரம் ராஜ்யம் யாவையும் துறந்து காட்டுக்குச் செல்லும்போது லக்ஷ்மணன் வெகு கோபத்தை யடைந்தவனய், மறுதளிக்கும் எவரையும் தன் அம்புக்கு இரையாக்கி ஸ்ரீ ராமனுக்கு பட்டாபிஷேகம் தானே முடிப்பன் என்று கர்ஜித்தான். அவனை அடக்கி பிரம்ம சங்கல்பம் என்றும்; விதியெனவும் சொல்லப்படும் விஷயத்தை எடுத்துச்சொல்லி அவன் கோபத்தை ஆற்றினர். கம்பர் சொல்வார்,

ஒளவையார் சொல்லுவதும் அதுவே

தாந்தா முன் செய்த வினை
தாமே அனுபவிப்பார்
பூந்தாமரையோன்
பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம்
ஊரெல்லாம் ஒன்று
வெறுத்தாலும்
போமே விதி

உலகின் கண் விதியின் செயலை எவ்வளவோ காரியங்களிலும் நிகழ்ச்சிகளிலும் பார்க்கின்றேம். மானிட முயற்சியெலாம் துரும்புக்குச் சமானமாக மேல் வெள்ளம்போல் அடித்துப் போவது பிரம்ம சங்கல்பம். மறைந்து நின்று அடிக்கும். எனெனின் விதிக்கு ரூபமில்லை. நமது மஹாத்மா காந்தி அவர்களின் முடிவை விதியென்று சொல்லுவதன்றி எவர் காரணம் கூற முடியும். பயித்தியக்காரன் செயல் என்றுர் நேரு அவர்கள். இந்த

விதியின் இன்றியமையாத ஒரு பாகம் உண்டு. அது எவர்க்கும் பொது. அதாவது எல்லா ஜீவ ராசிகளும் என்னென்ன அவஸ்தைப் பட்டாலும் என்னென்ன பதவி பெற்ருலும் எல்லோரும் தன் அருளைவிட்டு நீங்காது தன் அருளிலே கலந்திடுவது தான். நாம் அவன் அருளை வேண்டாதிருந்தாலும் அவனருள் நம்மை நாடித் தேடி ஆளாக்கிக் கொள்ளும். இவ்விதம் கருதப்பட்ட ஆண்டவன் அருளை நாடி நின்ருர் பட்டினத்தார்.

முதலில் குருவாய் நின்று உபதேசித்து கடைசியில் அருள் வடிவாய் வந்து கலந்தாராம். இது கோபியர் கதையாய்த்தான் இருக்கிறது. அவர் உபதேசித்த வாறு தான் புருஷனுய்ப் பிறந்தும் ஓர் மங்கையானுராம் 'தன்னைத் தெரிந்து கொள்' என்ருராம்.

'என்னையே யானறிய
இருவினையு மீடழித்து
தன்னை யறியவே
தலமெனக்குச் சொன்னுண்டி
தன்னையறிந்தேண்டி
தனிக்குமரி யானேண்டி
தன்னந்தனியே
தனிபிருக்கும் பக்குவமே,

கன்யாகுமரியில் தரிசனம் செய்தால் பட்டினத்தார் போதித்த இந்த நிலை விளங்கும்.

"வீட்டில் ஒருவரில்லை
வெட்டவெளி ஆனேண்டி"

என்ருர்.

உலகப் பற்றுகள் எல்லாம் துறந்து ஆணவத்தையும் கைவிட்டால் வெட்டவெளிதான். இவைகளையெல்லாம் எப்படித் துறந்தார்? ஆண்டவன் மேல் ஏற்பட்ட காதல் காரணமாகத்தான்.

காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை
நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினும்
மெய்ப்பொருளாவது
நாத நாமம் நமச்சிவாயவே

"தெய்வத்தின் மேல் காதல் கொண்மின்" என்ருர் ஞானசம்பந்தர். குலசேகரப் பெருமான் பெருந் தொண்டர்களை "தூராத மனக் காதல் தொண்டர் தம் குழாம் குழுமி திருப்புகழ்கள் பலவும் பாடி" என்ருர். தெய்வத்தினிடத்தில் காதல் கொண்ட கன்னியாய் விட்டாராம் பட்டினத்தார்.

எவரிடம் காதல் கொண்டார்? ஊமை, செவிடு இந்த இரண்டு குணங்களையும் உடையவரிடத்திலா?

பேசாப் பிரம்மமடி
பேச்சிறந்த பேரொளிகாண்
ஆசாபாசங்கள்
அணுகாத பேரொளிகாண்.

தான் காதல் கொண்ட புருஷன் பேசமாட்டானும், கை காட்டுவானும். ஊமையோவென்ருல் பட்டினத்தார் சொல்லுவார்:

கல்வியல்ல! கேள்வியல்ல!
கைகாட்டும் காரணங்காண்
கள்ளப்புலனறுக்க
காரணமாய் வந்தாண்டி.

அகப்பொருள் உபதேசம் பேச்சால் முடியாதாகையால் கைகாட்டி உபதேசிக்கின்ருர். தக்ஷிணுமூர்த்தியின் நிலையை சுட்டிக் காட்டுகின்ருர். பேசிப் பார்த்தால் ஐயனை எட்ட முடியவில்லை. ஆகவே,

வாசாம கோசரத்து
மருவி இருந்தாண்டி

என்ருர். மௌனத்தை வியாக்யானம் செய்யும் பிரம்மம் சொல்லாய் எட்ட முடியாத பிரம்மம். ஆமாம்! அந்த ஊமையன் மேல் காதல் கொண்டேன் என்ருர்.

காதலியை விட்டுவிட்டு ஓடிப் போய் விடுகிருர்களே! அது

மாதிரியல்லாது உடனிருந்து வாழ்கின்ருனு என்று கேட்டால் பட்டினத்தார் சொல்வார்

பற்றற்ருர் பற்ருது
பற்றி யிருந்தாண்டி
குற்ற மறுத்தாண்டி
கூடியிருந்தாண்டி

கூடத்தான் காதலன் இருக்கின் ருன். ஆனல் குற்றமும் குறை களும் சேர்ந்து கட்டுப்பட்ட என் சரீரத்தை அறுத்து அறுத்து தள்ளி விடுகிருன் என்ருர். வெகு துககமாய் இருக்குமே வென்ருல் அப்படியல்ல, அறுத்து எறியும் போது பரம கஷ்டமாய் இருந் தாலும் சுகமுண்டு என்பர்.

கன்னெஞ்சினுள்ளே
கழுநீலம் பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே
இணையடிகள் வைத்தாண்டி

செங்கழுநீர்பூப்போல மிருதுவாக வும் வாசனையாகவும் உள்ள தன் பாதங்களை என் காதலன் நெஞ் சில் வைத்தான். யான் அறிந் தேன் இல்லை. உடனே என் கல் நெஞ்சு அன்பாய் உருகிப் பெரும் தடாகமாயிற்று என்ருர். இந்த அனுபவம் மிகவும் சுகம் என்ருர். இது மாத்திரமா!

சின்மய நன்னேக்கால்
சித்ஸ்வரூபம் காட்டியெனை
தன்மயமாக்கியே
தானவனுய் நின்ருண்டி

என்ருர். அவன் அருட் பார்வை வீழ்ந்ததும் சித்தின் ஸ்வரூப தரி சனம் அடைந்தேன். என்னை தன் மயமாக்கிக் கொண்டான். அவன் ஞான ஸ்வரூப மூர்த்தியாக காட்சி கொடுத்தான். இந்த சுகம் சுகாதீத அனுபவம்தான் என் ருர். பிறகு காதலன் என்னை ஆலிங்கனம் செய்து கொள்ள வந்தான் என்ருர். எங்கேயோ எக்காலத்திலோ வென்ருல் சொல் லுவார்.

வெட்ட வெளியில் ஒருவருமில் லாத தனியிடத்தில் தனிக்குமரி யாய் நின்றேனே. அப்போது அந்தக் காலம் காலையன்று, மாலை யன்று, இரவு அன்று, பகல் அன்று.

கங்குல் பகல் அற்றிடத்தை
காட்டிக் கொடுத்தாண்டி
பார்த்தவிடமெலாம்
பரமாகக் கண்டேண்டி

என்ருர்.

கங்குல் பகல் அற்ற இடம் எதுவோ? கந்தரலங்காரத்தில் அருணகிரியார் சொல்லுவார் :

அராம்புனே வேணியன் செய்
அருள்பெறல் வேண்டும்
அவிழ்ந்த அன்பால்,
குராப்புனேயும் தண்டையம்
தாள் தொழல் வேண்டும்,
கொடிய ஐவர்
பராக்கு அறல் வேண்டும்
என்ருல் அந்த இராப்பகல்
அற்றயடத்தேயருக்கை
எளிதல்லாவே.

ஐம்புலனடக்கி முருகன் சர ணத்திலே நினைவை நிறுத்தும் பெரியோர்களுக்குத்தான் அந்த இடம் தெரியும். காலமும் தெரி யும். அப்போது எங்கும் நிறைந்து நிற்கும் முருகன் கண் ணுக்குப் புலப்படுவான். பட்டி னத்தாரோ பரமாய் நின்ற பேரொளியாம் பரமனிடம் காதல் கொண்டீரே! எங்கும் பர மாய் கண்டீரானுல், உமது காதல் என்ன ஆயிற்று?

பரமனிடம் கொண்ட காதல் பதினுன்கு உலகமும் பரவி நிற் கின்றது. என் காதலன் எங் கிருந்து வருவானே, எப்படித் தான் வருவானே என்று தயங்கி கின்றேன் என்ருர் பட்டினத்தார்.

இந்நிலைமை கண்டாண்டி
எங்கும் நிறைந்தாண்டி

கன்னியழித்தாண்டி
கற்பைக் குலைத்தாண்டி

கன்னித் தன்மையை கல்யாணம் செய்து அகற்றுகின்றனர் பரஞ்ஜோதியும் தானும், முருகனும் வள்ளியும்போல் கல்யாணத்தில் கலந்தார் பட்டினத்தார். அவர் கன்னித் தன்மையைப் பிரம்மம் அழித்துவிட்டது.

எங்கும் பிரம்மமாகவே கண்டார். கற்பெனும் பண்பு நிற்க இடமில்லை. உலக மாயையுடன் காமாதி விகாரங்க ளெல்லாம் அகன்று நிற்க கன்னிப் பெண் அம்மையப்பனுடன் தன்மயமாய் நிற்க, கற்பெனும் பேச்சு இறந்தது என்றார் போலும். பரம்பொருள் தன்னை ஆலிங்கனம் செய்து கொண்டதாம். அதெப்படியோ வெனில் பட்டினத்தார் கூறுவார்.

பாலின்கண் நெய்யிருந்தால்
போல பரஞ்ஜோதி
ஆலிங்கனம் செய்து
அறவிழுங்கிக் கொண்டாடீ

இது என்ன ஆச்சரியம். காதலித்த புருஷன் மலைப் பாம்போ வென்றால் மலைப் பாம்பு அல்ல. ஆலிங்கனத்தை கண்டறிந்தால் அதி னின்றும் விலகல் உரூர். இரண்டறக்கலந்தஇடம் என்றார். இரண்டற எப்படிக் கலந்ததோ? பழுக்கப் பழுக்க காய்ச்சின இரும்பை நீர் தொகுதியில் புகுத்தினால் நீரை எப்படி இரும்பு உறிஞ்சி விடுமோ, அதுபோல் நீராகிய என்னை அழலின் திருமேனி உடைய சிவம் உறிஞ்சிக் கலந்துவிட்டது என்றார். இரும்பு நிறை நீர்போல் என்னை விழுங்கிக் கொண்டாண்டி.

அரும்பு நிறை வாசனைபோல்
அமர்ந்தே யிருந்தாண்டி.

ஞான வாசனையாக இருவரும் கலந்துய்ந்தோம் என்றார். "மிக உம்மை சுட்டிருக்குமே! நீர் செத்துப்போய் இருப்பீரே! என்றால் சொல்லுவார் "சுட்டிறந்த பாழ் அதனில் அனித்திருக்க வேணுமென்றான் சுட்டதுதான். இறந்தேன். உண்மைதான். இனி இனி இறவேன் என்றார். மேலும் சொல்லுவார்

செத்தாரை ஒத்தேண்டி
சிந்தை தெளிந்தேண்டி
மற்றொரு மில்லையடி
மறுமாற்றங் காணேண்டி

மற்றொரு சித்தர் சொல்லிய புலம்பல் ஞாபகம் வருகின்றது.

ஊன் நிறைந்த பாண்டம்
உயிரிழந்து போகுமுன்னர்
நான் இறந்துபோக இனி
நாள் வருவதெக்காலம்

நான் என்ற பாவம் இறந்துவிட்டால் பிணம்போல் கிடக்கலாம். உயிர் இழப்பதின்முன் நான் இறந்துவிட்டால் மறுபடியும் இறப்பில்லை. ஆகவே பிறப்பும் இல்லையாம். கலந்த நாதன் இயல்பு எப்படியோ எனச் சொல்லுவார்.

ஆர்ந்தவிடம் அத்தனையும்
அருளா யிருக்குமடி
சார்ந்தவிடமெலாம்
ஜவ்வாது மணக்குமடி
இந்த மணம் எங்கும்
இயற்கை மணமென்றறிந்தே
அந்த சுகாதீதத்து
அருட் கடலுள் மூழ்கினேண்டி

ஆண்டவன் இயல்பு ருசி போலும் மணம்போலும் அருணகிரியார் கலக்க விரும்பினர், எப்படி?

"ஆறுமுக மொடுகலந்து பேதமிலையென இரண்டு பேரும்" என்றார். உதாரணமாகச் சொல்வது பாருங்கள்.

அழகான பரிமள சுகந்த
வீத மயமென

என்றார். இவ்விதம் பரிமளமாய் கலந்தானும்; பட்டினத்தார் கலந்து வாழ்வு பெற்றார்.

வாழ்வான வாழ்வெனக்கு
வந்ததடி வாழாமல்
தாழாமல் தாழ்ந்தேண்டி
சற்றும்குறையாமல்

தாழ்ந்தேன் என்றார்.

தலையால் தாழும் தவத்தோர்க்கு
என்றும் தொலையாச் செல்வர்
சோற்றுத் துரையே

என்பது தேவாரம். பரத்தைப் பார்த்து தாழ்ந்தார். குறைவின்றியும் தாழ்வின்றியும் தாழ்வது, ஆண்டவனுக்கும், அவன் அடியார்க்கும்தான் இவ்வகை தாழ முடியும். இவ்வகை தாழ்ந்து என்ன பெற்றேன். உலகத்தில் நிலையா வாழ்வை நீத்து நிலைத்து நிற்கும் பெரு வாழ்வைப் பெற்றேன் என்றார்.

கன்னியழித்தவனை
கண்ணாரக் கண்டேண்டி
என் இயல்பு யானறியேன்
ஈதென்ன மாயமடி

நான் ஒழிந்து விட்டபடியால் தன்னியல்பு ஆண்டவன் இயல்பாயிற்று.

சும்மா இருக்க வைத்தான்
சூத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென
அதை யடைய விழுங்கினேனண்டி

அருணகிரியார் அனுபூதியில்

சும்மா இரு
சொல்லற என்றலுமே
அம்மா பொருள்
ஒன்றும் அறிந்திலேனே

என்ற பாவத்தோடு அனுபவிக்க வேண்டும். ஆண்டவன் உத்திரவால் பஞ்சேந்திரியங்கள் அடங்கப் பெற்றன. 'சும்மா இரு' என்ற உத்திரவு பிறந்ததும் ஐம்புலன் அடங்கப் பெற்றதும் பொருள் உணர்ச்சியில் ஒன்றியதாம்.

மற்றும் பரத்தின் இயல்பை விவரிப்பார்.

அணுவுக்கும் மேருவுக்கும்
அகம்புறமாய் நின்றான் காண்
கணுமுற்றும் ஞானக் கரும்பின்
தெளிவான்காண்
காட்சிக் கெளியான் காண்
கண்டாலும் காணான் காண்
மாட்சி மனம் வைத்தர்க்கு
மாணிக்கத் துள்ளொளி காண்
தித்திக்க ஊறுமடி
சித்தம் உடையவர்க்கு
பத்துக் கடலுள் பதித்த
பரஞ் ஜோதியடி
உள்ளுணர்வாய் நின்றவர் தம்
உணர்வுக் குணர்வாண்டி
எள்ளளவும் உள்ளத்திலே
ஏறிக் குறையாண்டி
பேதமற எங்கும் விளங்கும்
பெருமையன் காண்
விளக்குச் சுடரொளிபோல்
மேவி யிருந்தாண்டி
பொன்னும் உரை மாற்றுப்போல்
பொருவரிய பூரணன் காண்
மன்னும் அனுபூதியடி
மாணிக்கத் துள்ளொளி காண்
பொற்பூவும் வாசனைபோல்
போதம் பிறந்தவர்க்கு
கற்பூர வாசனைபோல்
காணக்கய வருக்கு
நாட்டில் நரிகளெல்லாம்
நற்புரவி செய்தாண்டி
ஏட்டில் அடங்காண்டி
எழுத்தில் பிறவாண்டி
ஐயம் அறுத்தவனை
ஆராய்வார் உண்டானால்
வையகத்தே வந்து
மலர்ப்பதம் வைத்திடுவான்

பட்டினத்தார் காதலை ஆராய்ச்சி செய்து பேரொளியின் அனுபூதி எய்துவாராக.

✽

உடலோம்புதல்

டாக்டர் நாமகிரி

வெய்யில் கால உபத்திரவங்கள்

கோடைகாலம் வந்துவிட்டது. இந்த வருஷம் சென்ற ஆண்டுகளைவிட கோடை இன்னும் அதிகக் கடுமையாக இருக்குமென எதிர்பார்க்கலாம். சரியான மழை பெய்திருந்தால் பூமி குளிர்ந்திருக்கும். வெய்யிலும் அதிகக் கடுமையாக இராது.

கோடை காலத்தில் நமது இயற்கையான நோய் எதிர்க்கும் சக்தி குறைகிறது. அதனால் நோய்கள் மலிகின்றன. மேலும் காற்றில் தூசி அதிகமாயிருப்பதோடு பலவகைக் கிருமிகளும் நிறைந்திருக்கும். இக்காரணங்களால் வேனிற் காலத்தில் சற்று அதிக ஜாக்கிரதையாக தேக சுகத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஒரு அதிசயம்

குளிர்காலத்தை விட வெய்யில் காலத்தில் ஜலதோஷமும், இருமலும் அதிக எளிதில் வந்துவிடுகின்றன. ஆனால் சீக்கிரத்தில் விடுவதில்லை. காற்றிலுள்ள தூசியும் கிருமிகளும் சுவாசிக்கும்போது தொண்டையில் சேர்ந்து தொண்டையைப் புண்ணாக்கி விடுகின்றன. வேனிற்காலத்தில் பட்டணங்களில் வசிப்பவர்கள் ஒரு சிறு முன்னெச்சரிக்கையால் பல வியாதிகளை அணுக ஒட்டாமல் தடுக்கலாம். முதலாவதாக மோட்டார் வண்டிகள் தூசியை எழுப்பும்போது ஒரு சுத்தமான கைக்குட்டையால் வாயையும் நாசியையும் சேர்த்து மூடிக் கொள்வது. அடுத்தபடியாக வெளியிலிருந்து வீடு சேர்ந்ததும் வெந்நீரில் சிறிது சோற்றுப்பைக் கரைத்து கொப்பளிப்பது. முகத்தையும் கைகால்களையும் குளிர்ந்த ஜலத்தில் சுத்தம் செய்துகொள்வது.

இம் மூன்று நியமங்களையும் விடாது அனுஷ்டிப்பவரைப் பல நோய்கள் அணுகவே அணுகா.

தினசரி இருமுறை குளிப்பது மிகவும் நல்ல பழக்கம். குளித்த பிறகு துவைத்த ஆடைகளை அணியவேண்டும். "கஞ்சி போடவேண்டாம்" என்று வண்ணானுக்கு உத்தரவு போட்டால் கெட்ட நாற்றம் ஆடைகளில் ஏற்படாது.

வேர்க்குரு

இது மிகவும் சாதாரணமாக ஏற்படும் உபத்திரவமாகையால் அதிகமாகக் கவனிக்கப்படுவதில்லை. வேர்க்குருவின் அரிப்பு சகிக்க முடியாமல் சொறிந்து கொள்ளும்பொழுது நகங்களிலிருந்தோ காற்றிலிருந்தோ சில கிருமிகள் [ஸ்ட்ரெப்டோகோகை அல்லது ஸ்டெபிலோகோகை சேர்ந்து விடுவதால் மிகவும் அதிகமாக நோகும் சிவந்த இரத்தக் கட்டிகள் உண்டாகும். இந்தக் கட்டிகளுக்கும் மாம்பழங்களுக்கும் சம்பந்தமே இடையாது. மாம்பழங்கள் வேனிற்காலத்தில் பழுக்கின்றன. இக் கட்டிகளும் அதே காலத்தில் விசேஷமாக

மனித சரீரங்களில் பழுக்கின்றன. ஆகையால் ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டு இருக்க வேண்டுமென்று பலர் இக்கட்டிகளை மாம்பழச் சிரங்குகள் என்று சொல்கிறார்கள். இது தவறு. நல்ல மாம்பழங்களைச் சாப்பிட்டு பால் குடிப்பதால் இக்கட்டிகள் வந்தால் எதிர்த்துப் போராட இரத்தத்தில் சத்து ஏற்படும்.

வேர்க்குரு வராமல் தடுக்க குளிர்ந்த ஜலத்தில் குளித்து வர வேண்டும். உபத்திரவம் அதிகமாயிருந்தால் வெந்நீரில் வெட்டிவேரைப் போட்டு மூடிவைத்து நன்றாக ஆறிய பிறகு ஸ்நானம் செய்யவேண்டும். கோரைக் கிழங்கு, மரமஞ்சள் இரண்டையும் வகைக்கு ஐந்துபலம் எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து பச்சைப் பயறு மாவில் கலந்து உடம்பு தேய்த்துக் குளிக்க உபயோகிக்க வேண்டும். சோப்பைவிட இது மிகவும் நல்லது.

அரிப்பும் எரிச்சலும் மிகவும் அதிகமாயிருந்தால் அரை டம்ளர் ஜலத்தில் இரண்டு ஸ்பூன் சோடாமாவை [பருப்பு வேக வைக்க உபயோகிப்பது] கரைத்து அதில் 10 அல்லது 15 துளிகள் கார்பாலிக் ஆஸிட் விட்டு ஒரு கைக்குட்டையை அந்த திரவத்தில் நனைத்து சருமத்தை ஒத்த வேண்டும்.

உபத்திரவம் சகிக்க முடியாத அளவுக்கு ஏற்பட்டால் பசலைக் கீரையை அரைத்து தேங்காய்ப் பால் கலந்து உடம்பில் தடவிக் கொண்டு பிறகு பயறுமாவு தேய்த்துக் குளிக்க குணமுண்டாகும்.

வைசூரி

ஏப்ரல் மாதத்திற்குள் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் வைசூரி வராமல் தடுக்க மருந்து குத்திக்கொள்ள வேண்டும் [Vaccination] பிரதி தினமும் பல் துலக்க வேப்பங் குச்சி உபயோகிப்பது உசிதம். மலச்சிக்கல் ஏற்படாமல் கீரைகளை தினசரி ஆகாரத் திட்டத்தில் சேர்க்க வேண்டும். விசேஷமாக மோரும் சேர்த்துக் கொள்வது நலம். தினந்தோறும் பகலில் இளநீர் சாப்பிட்டு வருவதனல் அதிக நன்மை ஏற்படும்.



கலியாணம் செய்துகொள்ளும் பருவம் வரும்போது, அதாவது வாழ்க்கையில் துணைவன் ஒருவன் இருக்க வேண்டும் என்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும்போது பணம், புகழ், அழகு இவற்றைத் தேடி அலையாமல் நல்லொழுக்கத்திற்கு ஒப்பற்ற உறுதுணையாய் விளங்கும் குணங்கள் படைத்தவனையே நீங்கள் தேடவேண்டும்.

—காந்தியடிகள்

வழியில் கண்ட வினோதம்

விந்வான் ஏ. கே. பாலாம்பிகையம்மாள்

கடுங்கோடைகாலப், நடுப்பகல் நேரம். ஒரு கிராமத்திற்குப் போய்க்கொண்டிருந்தேன். மாலைக்குள் போய்ச் சேர வேண்டுமாகையால், வெய்யிலைக் கூடப் பாராமல், நடந்தேன். கதிரவன் வெப்பமோ மிகக்கொடுமையாயிருந்தது. வியர்வை ஆறாய்ப் பெருகியது. தங்க நிழலகப்படுமோ வென்று தேடினேன். பனைமரமும், கள்ளிச்செடியையும் தவிர வேறொன்றையும், காணவில்லை.

சிவனே, யென்று சற்றுதூரம் போனேன் பாதையோரத்தில், பெரிய ஆலமரமொன்றிருந்தது. அப்பாடாவென்று அதனடியில் உட்கார்ந்தேன். பொத்தென்று என்தலையிலேதோ விழுந்தது. கையால் தள்ளினேன். ஒருசிறு ஆலம்பழம் கீழே விழுந்தது. "பூ! இதுதானா வென்றேன். கலுக்கென்ற சிரிப்பொலி கேட்டது. அது பெண்ணின் குரலாகவுமிருந்தது. சுற்றிப்பார்த்தேன். ஒருவருமில்லை. மரத்தின்மேலே நோக்கினேன், பறவைகளைத் தவிர வேறொன்றையும் காணவில்லை. பிரமையாயிருக்குமென்று சும்மாவிருந்தேன்.

'அட, மடையா! அறிவில் சிறந்தவனென்று பறைபடித்துக் கொள்ளுர் நீ, அற்பமாகிய என்னையறியவில்லையா?' என்ற பேச்சரவம் கேட்டது.

பேயோ, பிசாசோ வென்று பயந்தேன், போய்விடலாமென்றெழுந்தேன்.

'போகாதே! நில்; நில்; நான் பேயுமல்ல, பிசாசுமல்ல. அப்படியே யுட்கார்ந்து, கீழே குனிந்துபார். நான் பேசுவது தெரியும் என்றது.

உட்கார்ந்து கீழே பார்த்தேன். என்தலையில் விழுந்த, ஆலம்பழந்தானிருந்தது. அப் பழம் வெடித்திருந்தது விதையொன்று அதன்மேல் நின்றது. அவ்விதையின் மேல்புறம், சிறிது திறந்திருந்ததுபோல் காணப்பட்டது. அதனுள்ளிருந்து 'அப்பனே அஞ்சாதே. நான்தான் பேசினேன்' என்ற குரல் கேட்டது.

'இஃதென்ன விர்தை; ஆலம் விதை பேசுமோ? என்று கூவினேன்.

'நீங்கள் தான் எல்லாவற்றிலும் வல்லவரென்று, எண்ணவேண்டாம். எங்களுக்கும் உணர்ச்சியுண்டு. உங்களைப் போலவே உண்போம், உறங்குவோம், குழந்தைகளைப்பெறுவோம் என்பதை நீ தாவர நூலில் படித்ததில்லையா?

பழைய பாடல்கள் தான், பாட்புத்தகங்களில் படித்து நெட்டுருப் போட்டவை தான் ஆனாலும் இங்கே சுவாரஸ்யமான சம்பாஷணையில் அவைகளைப் பற்றி விமரிசனம் செய்யப்படுகிறது. படித்துப் பாருங்கள்.

'அவைகளெல்லா முண்டென்பது உண்மைதான், பேசுவது தான் புதுமையா யிருக்கிறது.' 'புதுமை யொன்றுமில்லை. நீங்கள் எங்களை மதித்துக் கவனிப்ப தில்லை. அற்பர்களென்று இகழ்ந்து விடுகிறீர்கள். விலங்குகளும், பறவைகளும், ஒலிக்குறிப்பினால் தங்களுணர்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றன வென்பதை நீ அறிந்திலையோ? அவ்விதமே நாங்களும், அசைவினால், எங்களுணர்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எங்களுக்குச் சிறுகுரலும் உண்டு. ஆனால், உங்களினத்தவரைப் போல், அகந்தை எங்களுக்குக் கிடையாது. எல்லாம், எனக்கே என்றும், எண்ணமாட்டோம். உயிரைக் கொடுத்தாவது, பிறருக்கு தவி செய்வதுதான் எங்களியல்பு. யாராவது, உங்களைத் துன்புறுத்தினால். சும்மா விருப்பீர்களா? சண்டை போடுவீர்களல்லவா? நாங்கள், எங்களை வெட்டுபவருக்கும் நிழல் தருவோம், வெட்டிய பிறகும் விறகாவோம். உங்களைப்போல் "தனக்கு மிஞ்சியல்லவா, தானதருமம்," என்ற நீதி எங்களகராதியில் கிடையாது. நீங்கள் அற்பமென்றிகழ்ந்து, காலினால், மிதிக்கும் சிறுவிதையாகிய நாங்கள்தான், இப்போதுனக்கு நிழல் கொடுத்துதவுவது. இனியாவது "உருவு கண்டெள்ளேல்" என்ற முதுமொழியை யுங்கள் நடத்தையில், பயன்படுத்திக் கொள்வாயாக, என்றது.

பக்கத்திலிருந்து பெருஞ்சிரிப்பொலி யொன்று கேட்டது. ஒரு பனம்பழம், உருண்டு கொண்டே வந்து, ஆலம்பழத்தினருகில் நின்றது. அதனுள்ளிருந்த நுங்கு குதித்தெழுந்து பழத்தின்மேலுட்கார்ந்தது.

'நிறுத்தடீ யுன் பேச்சை, நானருகிலிருக்கிறேன் என்பதை அறவே மறந்துவிட்டாய் போலும், சூரியன்முன் மின்மினி யாடுவதைப் போலிருக்கிறது, நீ பெருமை பேசிக்கொள்ளுவது,' என்ற பேச்சொலி, அந்நுங்கினின்று எழும்பியது.

'பார்த்துப்பேசடீ! எந்த வகையில், நானுன்னைவிடக் குறைந்தவள் சொல்பார்ப்போம்.

"தேன்படுபனையின்
திரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி
வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க
நிழலாகாதே"
தெள்ளியவாலின்
சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச்
சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும்,
அண்ணல்யானை
அணிதேர்ப் புரவி ஆள் பெரும்
படையொடு மன்னர்க் கிருக்க
நிழலாகும்மே

என்று, அதிவீரராம பாண்டியர் சிறப்பித்துக் கூறுவது எங்களையா? உங்களையா? உருவப் பெருமையே தவிர ஒருவர்க்கும், நீ உதவமாட்டாய்,'

'ஆமாம், மனிதர்கள் கூறுவதற் கென்ன? நன்றி கெட்டவர்கள்-கதிரவன் வெப்பத்தினால் களைத்து வருபவர்க்குப் பசியையும், தாகத்தையும் தவிர்ப்பது நீயா, நானா?

"என்னன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு"

என்ற திருவள்ளுவர் உரையை, அதிவீரராம பாண்டியர் ஏட்டுச் சுரைக்காயாக்கி விட்டார். எங்களிடமே, எல்லா உதவியையும் பெற்றுக் கொண்டு, எங்களை இழித்துக் கூறுபவரின் வார்த்

தையைப் பெரிதாய்ச் சொல்ல வந்து விட்டாய்.

'நீ, நிற்கக்கூட நிழல் தரமாட்டாய், உணவைத் தந்து, போ போ வென்று விரட்டுவதுதான் நீ செய்யும் உதவிபோ லிருக்கிறது. என் நிழலி லுட்கார்ந்தல்லவோ நீ தந்த உணவைப் புசிக்கவேண்டும்.'

'உனக்குத் தெரிந்ததவ்வளவு தான். உன்னடியில், சற்று நேரந்தான் தங்கமுடியும். என் ஓலையால், செய்த குடிசையில், எப்பொழுதும், தங்கலா மென்பதை மறந்தனையோ?

'நீ, என்னதான் கூறினும், கவிகளின் வருணனைக்கு இலக்கா யிருப்பவள், நான்தான். "ஆலும் வேலும், பல்லுக்குறுதி" என்று நாலடியார் கூட என் பெருமையை யல்லவோ கூறுகிறது.

'போதுமே, உன் பெருமை, நீ பல்லுக் குறுதி தந்தால், நான் உடலுக் குறுதி தருகிறேன். என் ஓலையினால் செய்த விசிறியினாலல்லவோ மனிதர் வெக்கையைத் தணித்துக் கொள்ளுகின்றனர்.'

'உணவில்லாமல், உடலுக் குறுதி யுண்டாகுமோ? அடுப்பு விசிறுவதற்கு நான் உதவாவிட்டால், சமையல் செய்யமுடியுமா? சமைத்து உண்டபிறகல்லவோ உன் நிழலில் இளைப்பாறலாம். மழையில் நனையாதபடி சம்பங் குடையா யிருந்து காப்பதும், நான்தா னென்பது நினைவிருக்கட்டும்.

'என்ன விருந்தாலும், என் பெருமை யுனக்கில்லைதான். சிவ பெருமான் நால்வர்க்கு ஞான முரைத்தது, என் னிழலிலமர்ந்தல்லவோ? ஊழிக் காலத்தில், நாராயண னுறங்குவது என் இலையில் தானே. ஆகா! நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

"இருந்தோம்பி இல் வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று வள்ளுவர் சொல்லை, நானென்றோ நிறை வேற்றுகிறேன். 'உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர் என்பதை நீ யறியாயோ?

நுங்கையும், பதநீரையும், தந்து, உடலையே வளர்க்கும் எனக்குச் சமம், நீ எப்படி ஆவாய்? ஆதலால் என்னை நீ வணங்கவும் வேண்டும்.

'எதற்காகவடீ உன்னை வணங்குவது? அண்டி வந்தவர்க்குக் கள்ளைக் கொடுத்து, அறிவை மயக்குகிறாயே அதற்காகவா? பெரியோர், தாழ்ந்த இனத்தவனென்று, உன்னைத் தீண்டவும் மாட்டார்கள். என்னைதான் நீ வணங்கவேண்டும்.

'நானில்லாவிடில், மனிதர் அறிவைப் பெறுவதேது? பழங்காலத்தில், பனையோலையிலன்றோ எழுதிப் படித்தனர். அவ் வோலைச் சுவடியிலிருந்து எடுத்தெழுதுபவை யல்லவோ, இக்காலத்தில், மக்களறிவைப் பெருக்கும் நூல்கள். இல்லாவிடில், இராமாயண மேது? பாரதமேது?

'புத்தர் பிரான், மெய்யறிவைப் பெற்றது என்னடியில்தா னென்பது நினைவிருக்கட்டும். இன்றும் கயையில், பிண்டம் போடுவது, என் னிழலில்தான்.'

'சீ, அற்பப் பதரே, அணுவிலும் சிறிய உனக்கு, இவ்வளவு பெருமையா? ஒரே நசுக்கில் உருவில்லாமல் செய்துவிடுகி

றேன் பார்; என்றோடி வந்தது நுங்கு.

'சற்றுப் பொறு. இவரைக் கேட்டு, யார் பெரியவரென்று தீர்மானிப்போம், பிறகு நீ என்னை நசுக்கலாம்' என்று ஆலம் விதை கூறியது.

பனம் பழம் என்னைப் பார்த்து, 'ஐயா! எங்களைப்பற்றியவை யனைத்தும், உங்களுக்குத் தெரியும். எங்களிருவரில் யார் உயர்ந்தவரென்பதை நீராராய்ந்து கூறும்,' என்றது.

எனக்குத் தெரிந்த மட்டில், 'உயர்ந்தோர் தாழ்ந்தோரென்பது உலகிலில்லை, ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தி லுயர்ந்தவர்' என்றேன்.

'ஐயா! தாங்களறிவுடையாரென்று தானே கேட்டோம், இப்படிப் பொதுவாய்க் கூறி விட்டால் என்ன செய்வோம்' என்றிரண்டும் இறைஞ்சின.

'நானறிவிற் சிறந்தவனல்ல. நம்மைப் படைத்த ஆண்டவன் தான் பேரறிவாளன், அவனைக் கேட்டு வந்து சொல்லுகிறேன்' என்று கூறி ஓடி வந்து விட்டேன்.

பிறருக்குத் தீங்குசெய்யக் கூடாதென்று உணர்ச்சியும், அஹிம்சா போதனையும் பரவியிருக்கும் இடத்தில் வசிக்கும் பெண் தன்னைச் சுதந்திரமற்றவளாகவோ, பலஹீனமானவளாகவோ, உதவியற்றவளாகவோ எண்ணமாட்டாள். உண்மையாகவே பரிசுத்தமாக இருக்கும் பெண்ணை உதவியற்றவள் என்று சொல்லமுடியாது. அவளது உள்ளத்தூய்மையே அவளுக்குப் பக்கபலம் என்ற எண்ணம் அவளுக்கு இருக்கவே செய்யும்.

—காந்தியடிகள்]

அறுசுவை

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி

ராகி பக்ஷணங்கள்

இக் காலத்தில் அரிசி கிடைப்பதோ அரிதாகி விட்டது. ரேஷன் கார்டுக்குக் கிடைக்கும் அரிசியோ ஒரு விசித்திரமான ரகத்தைச் சேர்ந்தது. ஆனல், சோளம், கேழ்வரகு (ராகி) மட்டும் ஓரளவு கிடைத்து வருவதால் தான் முழுப்பட்டினி கிடக்காமல் அரை வயிறு நிரப்ப முடிகிறது. ராகி மாவால் செய்யக் கூடிய சில பக்ஷணங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். அதன் நிறம் ஒரு மாதிரியா யிருந்தாலும் குணமோ தங்கமானது: உடம்புக்கு ரொம்பக் குளுமை. புஷ்டியான ஆகாரம். ரோக நிவாரணியும் கூட. மூத்திர வியாதி, ஆஸ்த்மா இதற்கெல்லாம் ராகி கைகண்ட மருந்தாகும். (கேழ்வரகு) மைசூர் சீமையில் ஆரோக்கியமானதும், புஷ்டியும், மலிவுமான இதைத்தானே ஏழை எளியவர் தினசரி ஆகாரமாக உண்டு நோயற்று வாழ்கிருர்கள்.

அரிசிக்குப் பதிலாகக் கோதி பத்தியம் சாப்பிடுபவர்களுக்குக் கோதி கிடைக்காத பொழுது அதற்குப் பதில் ராகியை உணவாகக் கொள்ளலாம்.

ராகி மாவு:—ராகியைக் கல்-மண் இல்லாமல், நன்ருக நேப்பிவிட்டு, கொஞ்சம் மோர் விட்டுப்பிசைந்து கொள்ளவேண்டும். பத்து நிமிஷம் பொறுத்து அடுப்பில் வாணலியைப் போட்டு காய்ந்ததும், சேரை சேரையாக வாணலியில் போட்டு துடப்பத்தின் பின்புறமாக வறுத்தால் படபட வென்று நன்ருகப் பொரியும். வெளேரென்று பொரிந்ததும் வாரி எடுத்து தட்டில் அள்ளவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகப் பொரித்தால் தான் நன்ருகப் பொரியும். எல்லாம் பொரித்த பிறகு எந்தரத்தில் பட்டாட்டமா வீசி, சலித்து டப்பாவில் நிறைத்து வைத்துக் கொண்டு வேண்டிய பொழுது கொஞ்சம் மாவு எடுத்துச் சர்க்கரையும், நெய் விழுதும், பாலும் விட்டுப் பிசைந்து கொடுத்தால் குழந்தைகள் நொட்டை போட்டுக் கொண்டு சாப்பிடுவார்கள். தித்திப்பு பிடிக்காதவர்கள் பொரிமாவில் கொஞ்சம் உப்பும் தயிரும் விட்டு, கடுகும், குடைமிளகாய் வற்றலும் தாளித்து, பிசைந்து சாப்பிட்டாலும் நன்ருக விருக்கும். எலுமிச்சம் பழ ஊறுகாய் மண்டியோ, நாரத்தங்காய் ஊறுகாய் மண்டியோ போட்டு, கூட இரண்டு கரண்டி எண்ணெய்யும் விட்டுப் பிசைந்தும் சாப்பிடலாம்.

அலைந்து திரிந்து அலுத்து வந்தவர்களுக்கு ஒரு டம்ளர் மோரில் இரண்டு தேக்கரண்டி ராகி பொரிமாவும் உப்பும் கலந்து தாளித்துக் கொடுத்தால் சாப்பிட ருசியாகவும், சுகமாகவும் இருக்கும். இந்தப் பானம் குளுமை.

மோகன லாடு :—பயத்தம் மாவு மோகனலாடு செய்வது போல் ராகி பொரிமாவு லாடும் ரொம்ப ருசியாக இருக்கும். பூராசர்க்கரையாவது, அல்லது எந்திரத்தில் வீசிப் பொடித்த அஸ்கா சர்க்கரை ஒரு ஆழாக்குக்கு, இரண்டு ஆழாக்கு அல்லது மூன்று ஆழாக்கு ராகிபொரி மாவு, கொஞ்சம் ஏலப் பொடி, நெய் விட்டு வறுத்து துண்டித்த வாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு எல்லாவற்றையும் முதலில் ஒரு ஏனத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும். பிறகு வாணலியில் வெண்ணெய் காய்ச்சின நெய்யை ஒரு ஆழாக்கு விட்டு, நெய் காய்ந்து புகை வரும் பொழுது கலந்தமாவைக் கொட்டி கிளறி கீழே இறக்கி உருண்டைகளாகப் பிடிக்க வேண்டும். மறந்து விட்டேனே, மாவில் கொஞ்சம் கொப்பரைத் தேங்காய் துருவிப் போட்டு குங்குமப்பூவும் திராக்ஷைப் பழமும் சேர்த்தால் கூட நன்றாகத்தான் இருக்கும்.

ராகி அல்வா :—முதல் நாள் இரவே வேண்டும் அளவு ராகியை ஜலத்தில் நினைத்து வைத்துவிட வேண்டும். மறுநாள் ஆட்டுக்கல்லில் அரைத்து பால் பிழிந்து கொள்ள வேண்டும். இரண்டு தடவை பால் எடுத்து மூடி வைத்து விட்டால் சரி. கொஞ்சம் நேரம் கழித்து மேலே தெளிந்த ஜலத்தை வடித்துவிட்டு வாய் அகலமானதும், அடி கட்டியானதுமான ஈயம் பூசின ஏனத்தை அடுப்பில் வைத்து நிழல் எரிச்சல் போட்டு பிழிந்த பாலைக் கொட்டி கை விடாமல் கிளற வேண்டும். ருசிக்கு வேண்டிய சர்க்கரை சேர்த்து, தாராளமாக நெய் விட்டு, ஏலப் பொடி நெய்யில் வறுத்து துண்டித்த வாதம் பருப்பு, முந்திரிப்பருப்பு திராக்ஷை எல்லாம் போட்டு அல்வா கிளற வேண்டும். நன்றாக வெந்து பளபளவென்று கைக்கு ஒட்டாமல் சுருண்டு வரும் பொழுது நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டி வில்லைகளாக நறுக்கி மூடி வைத்து விடவும். ஆறின பிறகு சாப்பிடலாம். பார்க்க சற்று நிறம் மட்டம்தான். ஆனால் ருசியில் குறைவில்லை.

ராகி மாவு ரொட்டி :—எங்கள் வீட்டில் முக்கால் வாசி நாள் டிபனுக்கு ராகிமாவு ரொட்டிதான். ரொட்டி பார்க்க சற்று கறுப்பாகத்தான் இருக்கும். பயந்துவிடாதே ஆனால் ரொம்பவும் ருசியாக இருக்கும். பச்சை ராகியை நன்றாக அரித்து ஜலத்தில் களைந்து வடியப்போட்டு, துணியில் பரப்பி உலர்த்த வேண்டும். பிறகு எந்திரத்தில் பட்டுப் போல் வீசி, சலித்து மாவை டப்பாவில் நிறைத்து வைத்துக் கொள்ளவும். வேண்டியபொழுது புளித்த தயிரில் ருசிக்கு வேண்டிய உப்புடன் மாவையும் கலந்து பிசைந்து, பச்சை மிளகாய், இஞ்சி, கொத்துமலித் தழை எல்லாம் அரிந்து கலந்து கொள்வது, கொஞ்சம் தேங்காய்த்துருவலும், நெய் விழுதும் போட்டு நன்றாக என்றால் அப்பள மாவைவிட கொஞ்சம் நெகிழ்வாகவே பிசைந்து கொள்வது. வாழை இலையில் எண்ணெய் தடவி மெல்லிசாக அப்பளம் தட்டியாவது,

அல்லது அப்பளக் குழவியினல் பலகையில் அப்பளம் இட்டாவது தோசைக் கல்லில் போட்டு சுடுவது. இரண்டு புறமும் நெய் விட்டு நன்ருக திருப்பித் திருப்பி ரொட்டி சுட்டு எடுத்து சாப்பிட்டால் கரகரவென்று இருக்குமே.

ராகி வடாம்: ராகி அல்வாவுக்குப் பால் பிழிவது போலவே, பால் பிழிந்து எடுத்து உப்புப் போட்டு மூடிவைத்துவிட வேண்டும். இரண்டு நாள் புளித்ததும், பச்சை மிளகாய் கொத்துமல்லித் தழை அரிந்து போட்டு உப்பும் பெருங்காயமும் சேர்த்து அடுப்பில் வைத்துக் கூழ் கிளறி வடாம் உருட்டி வைத்தால் ஆச்சு. உலர்ந்த பிறகு பொரித்துச் சாப்பிட்டுப் பாருங்கள். அப்புறம் நீங்கள் எனக்குப் பரிசு வழங்கக் கூட ஆசைப்படுவீர்கள்.



'ஐந்து வயது வரையில் குழந்தையோடு விளையாடு. பத்து வயது அடையும்போது அடித்துப் புத்தி சொல்லு. பதினறு வயதாகும்போது, அவனை உன்னுடைய நண்பனைக நடத்து,

(குஜராத்திப் பழமொழி)

புது வருஷப் பரிசு

மணிக்கு 150 மைல் வேகம் போவதைக் காட்டிலும் மேலான முட்டாள்தனத்தைச் சொல்பவர்களுக்கு 15000 பிராங்குகள் பரிசு கொடுக்கிறேன்.

—பிரெஞ்சு ஞானி லியோன் பிளாய்

மறக்க முடியுமா?

கி. நாகலெக்ஷ்மி

எப்படி மறக்க முடியும்? அவளை மறந்தாலும், அவள் சொன்ன சோகக் கதையை மறக்கவே முடியாது. அந்தக் கதையின் பிரதான பாத்திரமே அவளாக விருக்கும் போது, தான் செய்த கொடுமைக்கு அவள் பிராயச்சித்தம் வேண்டும் போது சோக நாடகம் உருவகமாகிறது:

பச்சைக் கொடி காட்டி ஒரு நிமிஷம் தான் இருக்கும். ரயில் புறப்பட்டு விட்டது அப்பொழுது தான் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்தார்.

'கிரீச்'...என்று, வண்டி புறப்பட்ட வேகத்திலேயே நின்றுவிட்டது.

அழகான சகுனந்தான்!

வண்டி புறப்பட்டதுமே தடை.

அது என் மனதில் 'சுருக்' என்று குத்தி வாட்டியது. பம்பாய்க்குப் புதிதாகக் குடித்தனம் பண்ணப் புறப்படும் எனக்கு சென்னையில் வண்டி புறப்பட்டதும் இன்றால், என் கெட்ட சகுனம் என்று எண்ணத் தோன்றாது.

கிழவர், தன்னுடன் கூட இருந்த ஸ்திரீயிடம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு, கீழே இறங்கினார். அவர் பிரயாணம் செய்யவில்லை போலிருக்கிறது.

'விசில்', கொடி முதலிய எல்லாச் சடங்குகளும் பழைய படி செய்யப்பட்டு பம்பாய் 'எக்ஸ்பிரஸ்' ஸென்ட்ரலை விட்டுக் கிளம்பியது.

'சுக்... சுக்... சுக்' என்ற ஒரே சுருதியில் நாதம் செய்து கொண்டே சென்றது.

* * *

காலைவேளையின் "சில்" லென்ற காற்று பேயிரைச்சலுடன் ரயிலில் புகுந்து கொடும் புயல் போன்று என்னைத் தாக்கியது. 'ஓ' என்ற சப்தம் ரயில் கீதத்திற்குப் பின்னணியாக அமைந்திருந்தது.

வெளியே நீட்டிக் கொண்டிருந்த தலையை உள்ளே இழுத்துக் கொண்டு "நாவல்" படிக்க ஆரம்பித்தேன். கொஞ்ச நேரம் சென்றது.

"மாமி" என்று டளிச்சென்று யாரோ பக்கத்திலிருந்து கூப்பிட்டது, என் 'நாவல்' படிப்பை நிறுத்திவிட்டது.

உடனே, அருகிலிருந்த குழந்தைதான் கூப்பிட்டு இருக்க வேண்டுமென்று எண்ணி, குழந்தையைப் பார்த்து,

"என்னப்பா! வேணும்" என்று பரிவுடன் கேட்டேன்.

குழந்தை மௌனம் சாதித்தது. என்னைக் கூப்பிட்ட அவன், பேசுவதற்கு ஏனோ வெட்கப்

பட்டான், காரணம் அவனுக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. அது குழந்தைகளின் குண சௌந்தரியம்.

"என்னப்மா வேணும்! சும்மா சொல்லு." என்று மறுபடியும் கேட்டேன்.

"உங்கள்ட்ட வைச்சிண்டிருக்கேளே அந்த 'மங்கை'யைத் தரேளா?" என்று தன்னுடைய கோமள வாயினால் கெஞ்சிக் கேட்கும் பாவத்தில் கெஞ்சிக் கேட்டான்.

"உனக்குப் படிக்கத் தெரியுமா" என்று கேட்டேன். அவன் தன் பக்கத்திலிருக்கும் ஸ்திரியின் புடவைத் தலைப்பை இழுத்து மூஞ்சியை மூடிக் கொண்டே ஒரு கள்ளச் சிரிப்பு சிரித்தான்.

எனக்கு அர்த்தம் விளங்கி விட்டது.

"உனக்கும் படிக்கத் தெரியாதுன்னு 'மங்கை' என்னத்துக்குக் கிழிக்கவா!" என்று குறும்பாகக் கேட்டேன்.

"எனக்கில்லே மாமி, எங்கம்மாவுக்கு. அவ படிப்பா, எனக்கு பாப்பா கதை எல்லாம் சொல்லுவா. தரேளா!" என்று கெஞ்சிக் கேட்டான்.

பின்னர் கொடுத்தேன்.

ரயில் அரக்கோணம் தாண்டி குண்டக்கல்லை நெருங்கிக் கொண்டிருந்தது.

நான் கொண்டு வந்த டிபன் ஸெட்டிலிருந்து இட்லி, தோசை முதலியவைகளை கண்ணனுக்கும் அந்த மாமிக்கும் கொடுத்து நானும் சாப்பிட்டேன்.

சாப்பிட்டு முடிந்தவுடன் அந்த மாமி "நீங்க பம்பாய்க்கா போறேள்"? என்று கேட்டாள்

"ஆமாம்" என்று பதில் சொன்னேன்.

"மாத்துங்காவிலே எங்கே இருக்கேள்."

'எனக்குத் தெரியாது, புதசா இப்போதான் போறேன்.'

"அப்படின்னு! நீ தனியாகவா போறே உங்க அம்மா கூட வரலையா!"

"எனக்கு அம்மா இல்லே. எங்க சித்திதான் இருக்காள். அவளுக்கு என்மேல் பிரியமே கிடையாது. நான் வீட்டை விட்டுப் போனாப் போரும்னு நினைச்சிண்டிருந்தாள். காலம் வரணும் என்று எதிர் பார்த்திருந்தேன். இப்போதுதான் கல்யாணமாச்சு. எங்க ஆத்துக்காரர் வரச்சொல்லி இப்போ போறேன்." என்று வெறுப்புக் கலந்த குரலில் அழுகை பொங்க பதில் சொன்னேன்.

பேச்சு உயர்ந்து அதன் சுவாரஸ்யத்தில் கடப்பை கடந்து ரெய்ச்சூர் வந்தது கூடத் தெரியவில்லை.

* * *

இருள் கவிந்து கொண்டு வெளியுலகத்தைப் பயங்கரமாகக் காட்டியது.

எங்கள் வண்டியில் எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். எனக்குத் தூக்கமே வரவில்லை

எதிரே இருந்த மாமியும் கூடத் தூங்காமல் என்னையே பார்த்துக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

"மாமி! ஏன் அழறேள்" என்று எங்கள் மௌனத்தை கலைத்துக் கொண்டு கேட்டேன்.

அவள் பதில் பேசவில்லை.

ஆனால் அவள் கண்கள் இரக்கப் பார்வையுடன் மிகுந்த கண்ணீரைக் கொட்டிக் கொண்டிருந்தன.

'பாவம், என்ன துக்கமோ!

நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே அந்த மாமி ஏதோ சொல்ல வாயெடுத்தாள். தொண்டைக் குள்ளேயே அமுங்கிக் கொண்டிருந்தது. இருந்தாலும் விட்டு விட்டு ஏதோ பேசினாள்.

"பாவம், உன்னை நினைச்சா எனக்கு அழுகை மீறிக் கொண்டு வருகிறது. நான் கூட இளையாளாகத்தான் என் ஆத்துக் காரருக்கு வாழ்க்கைப் பட்டேன். அவருடைய—(என் என்னுடைய) பெண் புஷ்பாவை நான் அநியாயமாக எவ்வளவு கஷ்டப்படுத்தியிருக்கிறேன், என்பதை நினைக்கும் பொழுது ஏன் இந்தப் பெண் ஜென்மம் எடுத்தேன் என்று என்னையே நிந்திச்சுக்கிறேன்".

"என்ன மாமி சொல்றேள்! எனக்கு ஒண்ணுமே புரியலையே."

"இல்லையம்மா பொண்ணு, அது எல்லாம் என் கதை"

"அப்படியா மாமி! உங்களுடைய மனசுக்குக் கஷ்டமாக இருந்தால் எங்கிட்டே சொல்லி கஷ்டத்தைக்குறைச்சுக்குங்கோ. துக்கத்தை இன்னொருத்தருட்டச் சொல்லிப் பங்கு போட்டுண்டாத்தான் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் குறையும்னு சொல்லுவா, உங்களுக்கு இஷ்டமானல் சொல்லுங்கள்" என்றேன்.

அவளும் சொன்னாள்.

* * *

பத்து வருஷத்துக்கு முந்தி எனக்குப் பதினேழுவயசுதான் ஆயிருந்தது. கலியாணம் ஆகாமல் 'குதிர்' மாதிரி வளர்ந்திருந்தேன். எல்லோரும் என்னைக் கேலி பண்ணிக் கொண்டிருப்பார்கள்.

அப்பொழுது பம்பாயிலிருந்து ஒருவர் எங்காத்துக்கு வந்திருந்தார். அவர் எங்கப்பாவின் சிநேகிதருடைய தம்பியாம்.

அவர் என்னுடைய அழகையும் வனப்பையும் பார்த்துவிட்டு என்னை இளையாளாக கலியாணம் பண்ணிக்கொள்ளுவதாக எங்கப்பாவிடம் சொன்னார்.

விருந்தாளியாக வந்து எங்காத்து மாப்பிள்ளையாக ஆகிவிட என்ன ஆசை அவருக்கு.

நாங்கள் ஏழையானதால் நான் அவருக்கு வாழ்க்கைப்பட இசைந்தேன்.

* * *

வாழ்க்கையில் பெண்களுக்கு ஏற்படும் புதிய சகாப்தம் அல்லவா மணம் என்பது!

மாமிக்கு விதி வேறு விதமாக விளையாடி அவளுக்கு அவ்வளவாக சுகத்தைக் கொடுக்கவில்லை. விதி. மேலும் சொன்னாள்.

* * *

பின்னர் என் வாழ்க்கை பம்பாயை நோக்கிச் சென்றது.

என் ஆத்துக்காரருக்கு பம்பாயில் பெரிய வேலை, கை நிறையச் சம்பளம்.

நாங்கள் மாத்துங்காவில் ஒரு மூணு ரூம் 'பிளாக்கில்' குடித்தனம் ஆரம்பித்தோம். எங்கள் வாழ்க்கை அழகாகத் தொடங்கியது.

அவருடைய மூத்தாள் குழந்தைகள் இரண்டும் எப்பொழுதும் என்னையே 'சித்தி'

'சித்தி' என்று சதா சுற்றிக் கொண்டே இருக்கும், அழகில் சிறந்த இரு குழந்தைகளின் நடுவே ஒரு வருஷம் உருண்டோடியது. புஷ்பாவின் புன்னகையிலும் விஜயத்தின் விளையாட்டிலும் இன்பமான நாட்கள் சென்றன.

வருஷம் ஒன்ருகிவிட்டதால் என்னைப் பிறந்தகத்துக்கு அவர் அனுப்பி வைத்தார். என்னுடன் புஷ்பாவும் வந்திருந்தாள்.

எங்காத்தில் எங்க பாட்டி ஒருத்தி இருந்தாள். அவளைக் என்று சொன்னாலும் குற்றமில்லை, சகுனி என்று சொன்னாலும் சரியாத்தான் இருக்கும்.

இராமருக்குப் பட்டம் கிடைக்காமல் இருக்கவும், பாண்டவர்களைக் காட்டிற்கு விரட்டவும், எப்படி கைகேயிக்கும், துரியோதனனுக்கும், கூனியும், சகுனியும் உபதேசித்தார்களோ, அப்படியே புஷ்பா, விஜயன் இவர்களிடம் வெறுப்பு ஏற்பட எனக்கு எங்கள் பாட்டி துவேஷம் என்ற விதைதூவினாள்.

* * *

பம்பாய்க்குத் திரும்பினேன். பழையபடி குழந்தைகளின் நடுவே வாழ்க்கை ஆரம்பமாயிற்று. ஆனால் சுயநலம் சுருதி இழைத்தது. துவேஷம் தாளம் போட்டது. வெறுப்பு என்ற பாவம்தான் வாழ்க்கை என்ற கீதத்தில் பரவி இருந்தது. விளைவு, கொடுமை என்ற அந்த காரத்தில் இழுத்துச் சென்றது. கல் நெஞ்சம் என்ற மனம் ரசிகனுய் விட்டது.

ரசிகனுக்கு வெறி ஏறியது.

அழகிற் சிறந்த குழந்தைகள் அழகற்றதாய்விட்டது.

கிளிகள் போல் கொஞ்சும் குழந்தைகள் நாய்கள் போல் குரைக்க ஆரம்பித்தன.

காலம், கொடுமை என்ற கரடு முரடான கல்ரோட்டில் விரைந்து சென்றது.

காலப் போக்கில் என் கண்ணன் பிறந்தான்.

அதனல் அவர்கள் இப்பொழுது முள் நிறைந்த பயங்கரக் கொடுமை என்னும் பாதையில், தன்னந் தனியாக ரத்தம் சிந்த நடக்க வேண்டி யிருந்தது.

கொடுமையின் உச்சநிலை போன வருஷம் தாண்டவமாடியது.

புஷ்பாவிற்கு வயது பதினறு. செடியில் மொட்டு மலர்ந்தது போல் அவள் வாழ்க்கையில் பருவமொட்டு வளர்ந்தது.

பருவ கன்னிகையின் இளங்கால எண்ணங்கள் புஷ்பாவின் மனத்திலும் அலைகள் போல் மாறி, மாறித் தொடர்ந்து எழுந்தன. ஆனல், என்னுடைய பிடிவாதக் கரையில் மோதி, சிதறுண்டு அழிந்தன.

மனவெழுச்சிகளை அடக்க— திருப்திப்படுத்திக்கொள்ள—அவளுக்கு சுதந்திரம் கிடையாது. சுகமும் கிடையாது.

அழகு படுத்தி ஆசையைத் தணித்துக்கொள்ள அவளுக்கு ஒரு நல்ல நகையோ, நட்டோ, அல்லது புடவையோ, பூவோ கிடையாது.

எண்ண அலைகளை எழுப்பி மனக் கொதிப்பைத் தணித்துக் கொள்ள அவளுக்கு நேரம் கூடக் கிடையாது.

மலர்ந்து மணம் வீசாமலே மொட்டுக் கருகி வாடி வதங்கி

யது. கருகிய மொட்டுப் போல் உதிர்ந்து மறையாமல், அவள் தெய்வ நம்பிக்கை என்ற நூலில் அங்கத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தாள்.

தெய்வத்தை நம்பினவர் எவர் தாழ்ந்தார்!

காலம் மாறியது.

விஜயன் வேலை பார்த்துக் கொண்டு அயலூருக்குச் சென்றுவிட்டான்.

என் கொடுமைக் கோடு அவனைக் கட்டுபடுத்த முடியாது. அவன் தனக்கென வாழ்வை வெகு தூரம் பிரிந்து சென்று, லாகூரில் ஆரம்பித்தான்.

சென்ற சில தினங்களிலேயே, வர்ணிக்க முடியாத வஞ்சகக் கொடுமையிலிருந்து புஷ்பாவை விடுதலை பண்ணி, தன்னுடன் லாகூருக்கு அழைத்துச் செல்ல வந்திருந்தான். ரத்தபாசம் கொண்டவர்கள் அல்லவா!

நானும் இந்தச் சனியன் தொலைந்தால் சரியென்று அவளை வீட்டை விட்டு விரட்டி விட்டேன்.

இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சு குமுறுகிறது. அனற் காற்று வீசுகிறது.

அவர்கள் போகும்பொழுது என் கண்ணனை வாழ்த்திச் சென்றார்கள்- எவ்வளவு பரந்த நோக்கமுடைய பச்சிளம் பாலர்கள்!

பிரிந்து சென்று சில நாட்கள் ஆயின. கொடுமையும், வஞ்சகமும், சுயநலமும் நிறைந்த என் ஆட்சியிலிருந்து விடுதலைபெற்ற அவ்விரு புருக்களும் அடக்குமுறை, அதிகாரவெறி, பகைமை ஆகியவைகள் நிறைந்த இவ்வுலகென்னும் கூண்டிலிருந்து பறந்து சென்று விடுதலை பெற்றார்கள்.

ஆம்! சென்றமாதம் பஞ்சாபில் நடந்த வகுப்புவாத வெறி கொண்ட கொடும் கொலைகளில் உயிர் துறந்த எண்ணற்ற மனிதர்களில் விஜயனும், புஷ்பாவும் இடம் பெற்றார்கள்.

என் கொடுமைக் கோட்டின் கடைசி எல்லை அவர்களுடைய உயிரையே பலி கொண்டு விட்டது.

நான் மகா பாவி! பெரும் கொடுமைக்காரி, இரக்கமற்ற பேய்; தன்னையே தியாகம் பண்ணி எனக்கு வாழ்வைத் தந்த உத்தமியின் கண்மணிகளையும் கொடுமைக் கோலால் குத்தி அவித்துவிட்டேன்.

என் ஜென்மம் கடைத்தேறுமா?

என் கண்ணன் நன்றாக வாழ்வானா? என்றெல்லாம் இப்பொழுது, நான் பண்ணிய பாவங்களையெல்லாம் நினைத்து பிராயச்சித்தம் வேண்டி அழுகின்றேன்.

கண் கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்!

* * *

நிறுத்திவிட்டாள். அவளுடைய கண்களிலிருந்து ஆறாகப் பெருகிய கண்ணீர், அவள் உண்மையிலேயே வருத்தப்படுகிறாள் என்று, சோகரச நாடகத்தைச் சித்தரித்துக் காட்டியது. பண்ணின பாவத்தை ஒப்புத்துக்கொண்டுப் பிராயச்சித்தம் அடைய எண்ணும் மனிதர்கள் மிகக் குறைவு.

அழகுக் குறிப்பு

ஸ்ரீமதி ஆத்மநாதன்

உலகம் தோன்றிய நாளிலிருந்தே அழகு, அலங்காரத்தேவைகளும், ஆராய்ச்சிகளும் ஏற்பட்டுவிட்டன. கவிகளின் கற்பனைக்கு அழகு வர்ணனை விருந்தளித்தது. மகாகவி வால்மீகியும், காளிதாசரும் அழகு பற்றி என்ன சொன்னார்கள் என்று இக்கட்டுரை விளக்குகிறது.

சாதாரணமாக வனப்பைக் குறிப்பதற்கு 'அழகு' என்னும் வார்த்தை அமைந்ததே ஒரு அழகுதான். சிலவற்றிற்குப் பெயர் மிருதுவாக இருக்கும். ஆனால் அந்தப் பொருள்களோ காடு முரடாக இருக்கும். அழகின் விஷயத்தில் அப்படியல்ல. அழகு என்னும் சொல் எவ்வளவு மென்மையாக இருக்கிறதோ அவ்விதமே அதனால் குறிப்பிடப்படும் அழகும் மென்மையாக இருக்கிறது.

அழகில் இயற்கை, செயற்கை என்று இரு விதங்களிருக்கின்றன. இயற்கையிலேயே சாமுத்ரிகா லக்ஷணத்தின்படி அமைந்த அவயவங்களைத் தவிர தனி அழகு இருக்கிறது. பெண் மூக்கும் முழியுமாக நன்றாக இருக்கிறது என்று சொல்வது போலவே, பெண் அழகாக இருக்கிறது என்றும் கூறுவதை நாம் கவனித்திருக்கிறோம். ஆனாலும் மூக்கும் முழியுமாகஇருப்பதற்கும் அழகாக இருப்பதற்கும் வித்தியாசமிருக்கத்தான் செய்கிறது.

மூக்கும் முழியுமாக இருக்கிறது என்றால் பெண் அங்கஹீனமில்லாமலிருக்கிறது என்றுதான் அர்த்தம். அழகாக இருக்கிறது என்றால் எல்லா அங்கங்களும் நன்றாகவே இருந்தாலும் அழகென்று தனியாக உள்ள ஒன்றும் பெண்ணுக்குப் பொருந்தியிருக்கிறது என்பதுதான் அர்த்தம்.

நாம் கூட அனுபவத்தில் பார்க்கிறோம். சில மனிதர்களுக்கு அவயவங்கள் நன்றாகவே இருக்கும். வேண்டிய அளவு பருமன், நல்ல நிறம் முதலிய எல்லாம் இருக்கும். வேண்டிய அலங்காரமும் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் பார்ப்பவர்களுக்கு அவர்களிடம் ஏதோ குறை இருப்பதாகவே தோன்றும். அதாவது அழகென்பது துளிக்கூட இருக்காது. சில பெயர்களுக்கு அங்கங்களில் சிறிது குறைவிருந்தாலும் ஒரு கவர்ச்சிகரமான மினு மினுப்பிருக்கும். எப்படி முத்துக்களின் நடுவில் நீரோட்டமிருக்கிறதோ அவ்விதம். இதை வடமொழியில் 'லாவண்ய'மென்று கூறுவார்

கள். இந்த அழகை நாமாக ஏற்படுத்திக் கொண்டுவிட முடியாது. இது நல்ல அவயவங்களால் மாத்திரம் கிடைப்பதல்ல. அவயவங்களின் ஒருவித அமைப்பினால் ஏற்படுவது. அதனால்தான் இந்த அழகு பெண்களுக்கு மாத்திரம் உரிய சொத்தாக விளங்குகிறது.

வேறொரு அழகு, அவயவங்களால் உண்டாவது. முன் கூறியது பெண்களுக்கே தனி உடைமையாகப் போய்விட்டதால் இதற்கும் அதற்கும் ஒன்றும் சம்பந்தமில்லை. பெண்களுக்கும் ஆண்களுக்கும் அவயவ அமைப்பு வேறுபட்டது. நிறமும் வேறுதான். ஆனால் நடை முறையில் சிவப்பே ஆண்களுக்கும்சரியான நிறமாக வழங்கி வருகிறது. முன் காலத்திய நூல்களில் கூறப்படுவதைக் கவனித்தால் நிற வேறுபாடுதான் தெரிகிறது.

ராமபிரான் மனிதர்களைவிட எல்லா விதத்திலும் உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். அவருடைய நிறம் கறுப்பாகத்தான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அவருடைய மனைவி சீதையின் நிறமோ உருக்கிய தங்கத்தின் நிறமாகச் சொல்லப்படுகிறது. இந்த ஜோடி பொருத்தமா என்றால் இக்காலத்திய பழக்க வழக்கங்களின்படி பொருத்த மில்லாததுபோலத் தோன்றும்.

ஆனாலும் கவி கூறுவதிலிருந்து அது பொருத்தமாகத்தானிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஏனென்றால் காட்டில் ராமனைக் கண்ட சூர்ப்பனகை ராமனிடம் மோகங்கொண்டு அவனை மயக்க எண்ணினாளாம்.

அழகை விரும்பாத பிராணிகளே இருக்காது என்று கூடச் சொல்லலாம். கலியாணத்திற்கு நிற்கும் பெண் தன்னைப் பெண் பார்க்கவரும் வரன்கள் உடனே ஒத்துக் கொள்ளவில்லை யானால் தனக்கு அத்தகைய அழகில்லையே என்று ஏங்கும் என்று எவ்வளவோ கதைகளில் படித்திருக்கிறோம். அந்த அழகைப் பெண்கள் தங்களுடைய பிரியர்களின் அன்பைப் பெற உரிய சாதனமாக எண்ணுகிறார்கள்.

அவ்விதமே சூர்ப்பனகையும் ஸ்ரீராமபிரானைத் தன் வசப்படுத்த வேண்டி அழகை விரும்பினாள். அவள் இதுவரை விரும்பாத பொருள் ஏதாவதொன்று இருக்குமேயானால் அது அழகுதான். இதுவரை அவளுக்கு அதனாலாக வேண்டியது ஒன்று மில்லாமலிருந்தது. அவள் செய்து வந்த காரியத்திற்கு அவளுடைய சரீர பலமே போதுமானதாக இருந்தது. ஆனால் இன்றோ அவன் மன்மதனுக்கு இலக்காகி விட்டான்.

அரக்க குலத்தில் பிறந்து அதனால் குரூர ரூபம் படைத்ததைக் குறித்துத் தன்னையே நொந்து கொண்டாள். ஆனாலும் நினைத்த ரூபம் கொள்ளும் சக்தி தனது வமிசத்திற்கு இயற்கையாக அமைந்திருப்பதைக் குறித்துப் பெருமிதங் கொண்டாள். அவள் கொண்ட ரூபத்தை ஆதிகவி இவ்விதமென்று சொல்லவில்லை. ஒருவேளை ஏதாவது ஒருவிதத்தை வர்ணித்து விட்டால் அது சிலருக்குப் பிடித்துச் சிலருக்குப் பிடிக்காமல் போய்விடுமே என்று நினைத்தார் போலும், அதனாலேயே மனதிற்குகந்த ரூபமெடுத்தாள் என்று ஒரே வரியில் கூறிவிட்டார்.

ராமன் கருநிறமுள்ளவனாக இருந்த போதிலும் சூர்ப்பனகை அவனைக் கண்டு மோகித்தாள்.

இதனல் கறுப்பும் அழகுக்கு எடுத்ததாகவே தோன்றுகிறது.

ராமனின் மோகன வடிவத்தைக் கண்டு ஆலிங்கனம் செய்ய ஆவல் கொண்ட மகரிஷிகளே இந்த அவதாரத்தில் அது கூடாமையால் கிருஷ்ணவத்ராரத்தில் கோபிகைகளாகப் பிறந்தார்கள் என்று ஒரு கதை சொல்கிருர்கள். அந்தமோகனவதாரத்தைக் கண்டு சூர்ப்பனகை மோகம் கொண்டதில் ஆச்சரியமில்லையல்லவா!

ஒரு சந்தேகம் வருவது இயற்கை. வீட்டில் கன்னமிட்டுக் கொண்டிருக்கும் திருடனுக்கு விழித்துக் கொள்ளும் வீட்டுக்காரன் அயோக்கியனகத் தோன்றுவதுதான் இயற்கை. திருடன் வீட்டுக்காரனை விரும்பமாட்டான். இனம் இனத்தைத்தானே விரும்பும். அதுபோல எப்பொழுது சூர்ப்பனகை ராமனை விரும்பினளோ அப்பொழுது ராமனின் எழிலைச் சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

ஆனல் நாம் அவ்விதம் சந்தேகிக்க கவி இடம் வைக்கவில்லை. முதலில் எவ்வித ராமனை சூர்ப்பனகை கண்டாள் என்பதைக் கூறுகிருர். ராமன் தேவர்களுக்குச் சமமாக இருந்தான். சிங்கத்தின் மார்பு போன்ற மார்பையும், பெரிய தோள்களையும், தாமரை மலரின் இதழ்போன்ற கண்களையும், முழங்கால்வரை தொங்கும் கைகளையும், பொலிவுடன்கூடிய முகத்தையும், யானை நடப்பதுபோல அழகிய நடையையும், அழகான பார்வையையும், ஜடைகளையும் பெற்றிருந்தான் ராமன். மேலும் அழகாகவுமிருந்தான். இதைக் கூற வேண்டியது அவசியமென்று தோன்றியிருக்கிறது கவிக்கு. சில நாட்களுக்குமுன் ஏதோ ஒரு பத்திரிகையில் சாமுத்ரிகா லக்ஷணப்படி என்று கேலியாக ஒரு பெண்ணின் படம்போட்டிருந்தார்கள். அதுமாதிரி ரூபம் மனதில் தோன்றிவிடக்கூடாதே என்பதற்காக ராமர் அழகாக இருந்தார் என்று கூறினர்.

ராமர் அழகாக இருந்தார் என்பது மாத்திரமல்ல. பலசாலியாகவுமிருந்தாராம்; அழகும் பலமும் ஒரே இடத்தில் இருக்காதல்லவா? அதற்காக அவ்விதம் கூறினர். கருநெய்தல்போலக் கறுப்பாகவுமிருந்தார். ஆனலும் மன்மதனைப்போலிருந்தார். அந்த ராமரைப் பார்த்து சூர்ப்பனகை மோகங்கொண்டாள்.

அழகு என்பது எப்படி இருக்கும் என்று கேட்டால், அதற்குக் கடுகைப்போலவோ அல்லது மலையைப்போலவோ ஒரு உருவத்தைக் காண்பிக்க முடியாது. அன்பிற்கு எவ்விதம் தனி உருவம் கிடையாதோ அவ்விதமே அழகுக்கும் தனி உருவம் கிடையாது. பிறகு அது உள்ள இடத்தை அழகுள்ளது என்றும், அது இல்லாத இடத்தை அழகற்றதென்றும்தான் காண்பிக்க முடியும். இது ராமனையும் சூர்ப்பனகையையும் சேர்த்து கவி வருணிக்குமிடத்தில் நன்ருகத் தெரிகிறது.

நல்ல முகமுள்ளவனை விகார முகமுள்ளவள் விரும்பினள். உருண்டை இடையுள்ளவனை பெரிய வயிறுள்ளவள் விரும்பினள். இதுமாதிரியே அகண்ட கண்ணுள்ளவனை உருவமற்ற கண்ணுள்ளவளும், அழகிய கூந்தலுள்ளவனை தாமிர நிறம் படைத்த ரோமமுள்ளவளும், யாவரும் கண்டு களிப்படையும் ரூபமுள்ளவனை விகாரரூபமுள்ள

வளும். நல்ல குரலுள்ளவனை பயங்கரக் குரலுள்ளவளும் காலேவயதினனை குரூரமான கிழத்தன முள்ளவளும், எல்லோரிடமும் பிரியமாக நடந்து கொள்பவனை வக்ரமாகப் பேசுபவளும், நியாயப்படி நடப்பவனைகொடிய காரியங்கள் செய்பவளுமாகிய சூர்ப்பனகை விரும்பினுள் என்று கூறுவதாலேயே அழகுள்ள இடத்தையும் அதில்லாத இடத்தையும் தெரிவிக்கிருர் கவி. இதனுல் நமக்கு அழகு என்ருலென்ன, விகாரம் என்ருல் என்ன என்பது புரிகிறது.

இனி கவி காளிதாசனின் வர்ணனையைப் பார்ப்போம்.

சகுந்தலே மாவுரி யணிந்திருந்தாள். அதைக் கண்ட துஷ்யந்தன் "ஆஹா! இவ்வித சகுந்தலேயின் எழிலுக்கு நல்ல பட்டு உடுத்தி யிருந்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆனுல் இவளோ மரவுரி உடுத்திருக்கிருள். ஆனுலும் அது அவளுடைய அழகைக் குறைக்கவில்லே. தாமரை மலரில் பாசி படிந்தாலும் அதன் அழகு குறைவதில்லே. சந்திரன் தனது களங்கத்தால் அழகற்றவனுவதில்லே, அம்மாதிரியே மரவுரி அணிந்திருந்தாலும் சகுந்தலே அழகாகவே யிருக்கிருள்'' என்று கூறுகிருன்

சீதாதேவி மிகுந்த அழகி. அவளுக்குச் செயற்கையான அழகு தேவை யில்லேதான். ஆனுலும் சீதையைக் கண்ட அனசூயைக்கு அலங்கரித்து விட வேண்டுமென்று தோன்றியது. அதனுல், ஒரு அழகிய மாலே, உடுத்திக்கொள்ள ஒரு புடவை, அணிந்து கொள்ள சில ஆபரணங்கள், அவயவங்களில் பூசிக் கொள்ள, ஒருவித வர்ணப்பொடி, உடப்பு தேய்த்துக்கொள்ள ஓர் வகை வாசனைச் சூர்ணம் முதலியவை கொடுத்து சீதாதேவியை அலங்கரித்துக் கொள்ளும்படி சொன்னுள் அனசூயை.

காட்டில் வசிக்கும் ஒரு தவமாதிற்கு சீதையை அலங்கரிக்க வேண்டுமென்று தோன்றியது என்று கூறினுர் ஆதி கவி வால்மீகி. ஆனுல் காளிதாஸரோ அலங்காரத்திலுள்ள ஆவல் மனிதவர்க்கத்திற்கும், பிராணிகளுக்கு மட்டுமல்ல, தாவரமாகிய மரம் செடி கொடிகளுக்குங்கூட அலங்காரத்தில் ஆவலிருந்தது என்று கூறுகிருர்.

சகுந்தலேயைத் துஷ்யந்தனிடம் அனுப்பத் தீர்மானித்தார் மஹரிஷி கண்வர். சகுந்தலேக்கு புஷ்பம் அணிவித்து அனுப்பலாமென்று நினேத்து சிஷ்யர்களே புஷ்பம் கொய்துவர அனுப்பினுர். அப்பொழுது அங்குள்ள பூங்கொடிகள் சகுந்தலே பிறந்ததிலிருந்து தங்களுடன் பழகி சகோதரி போலிருந்ததை நினேத்துப் பார்த்தன. தங்கள் சகோதரி சகுந்தலே, அரசனிடம் செல்லும் பொழுது, காட்டில் வாழும்—பெண் போலச் செல்வதை விரும்பவில்லே. ஆதலால் ஒவ்வொரு செடியும் சகுந்தலேயின் அலங்காரத்திற்கு வேண்டியவைகளேக் கொடுத்தனவாம். சந்திரன் போல் வெண்மையான பட்டை ஒரு மரமும், கால்களே யலங்கரிக்க உகந்த செவ்வரக்குக் குழம்பை ஒரு மரமும், சகுந்தலேக்கு அணிவிக்க வேண்டிய ஆபரணங்களேப் பல மரங்களுமாகக்கொடுத்தனவாம்.

ஆகவே அலங்காரம் பகவானேப் போல் எங்கும் நிறைந்ததாகவே இருக்கிறது. பகவானின் கிருபைக்கு இலக்கான விடங்களில் மங்களம் நிறைந்த அழகும் குடிகொண் டிருக்கிறது.

பிருத்விசிம்மன்தான் முடிவில் ஏமாந்துவிட்டான்! மாலதி செய்த தியாகம்தான் ஒருவகையில் பலன் கண்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பலன் கிடைத்ததா? இறந் தவர் எண்ணம் ஈடேறிற்று? படித்துப் பாருங்கள்.

ரேவதியின் பரிசு

சகுந்தலாராஜன்

ரேவதி...போன பௌர்ணமி நிலவில் அவர் பேசிய பேச்சுக் களை நினைக்கையில்...அப்பப்பா! யாரால்தான் நினைக்க முடியும். இப்படி ஒரு மாறுதல் ஏற்படு மென்று......இப்பவும் எனக்கு நம்பிக்கையில்லை. ஆம். அவராக வந்து சொன்னாலொழிய......... அடுத்த பௌர்ணமிக்கு அவர் சொன்னதாக அந்த மனிதன் வந்து கூறினானே? அந்தப் பாவி அவர் நண்பனும். என் மட்டில் நஞ்சு தோய்ந்த கத்தி அவன். அந்தக் கத்தி பட்டும் என் உயிர் நீங்கவில்லையே அதுதான் வேடிக்கை! அவரது அன்பிற்கு ஈடாக எவ்வளவு சொத்து வேணுமோ கொடுத்துவிடு கிறேம்.........ஹூம்! கேவலம் கணிகை மாதென எண்ணினர் போலும். அன்பிற்கு ஈடு வைக் கும் மனிதரை நான் என்ன வென்று கூறுவது? ஊஹூம். அவராக வந்து நேரில் சொன்ன லொழிய இதை நம்ப என்னால் முடியவே முடியாது. என் தகப் பனர் அறிந்தால் என்னாகும்? ஏற்கனவே அவர் எச்சரித்தாரே ......ஈசா......

தந்தை தெய்வசிகாமணி......... படித்துப் படித்துப் பத்துதரம் சொன்னேனே? கேட்டாளா இவள். அன்பு, காதல், ப்ரேமை என்றெல்லாம் பிதற்றினாளே? தாயில்லா ஜமீந்தார் மகன் அவன். தனக்கேற்ற அந்தஸ்தில் பெண் கட்டுவான். வேண்டாம் அந்த ஆசையை விடு!' என்று அடித்துக்கொண்டேனே. 'இல் லவே யில்லை. இவர் விஷயம் உங் களுக்குத் தெரியாது அப்பா!' என்றாளே? இப்போ என்ன ஆச்சு? அடுத்த வாரம் அவ னுக்கு கல்யாணமாம். ஹோதாப் படி ஜமீந்தார் மகளையே மணக் கப் போகிறானாம். ஊர் அமர்க் களப் படுகிறது. என் பெண்... அவனை யாரும் தூற்ற மாட்டார் களே? என் கண்மணியை இனி யார் மணக்க முன் வருவார்கள்? பெயர் மட்டும் வைத்துக்கொண் டான், பிருத்வி சிம்மனென்று அந்த ராஜபுத்திரனுக்கும், இந்தக் கோழைக்கும் எவ்வளவு வித்தி யாசம்? என் ஆத்திரம் அவனை என்ன செய்ய முடியும்? நான் அவன் பிரஜையில் ஒருவன் தானே? ஆனால் என் பெண்ணின் சாபம் வீண் போகுமா?

பிருத்விசிம்மன்...ரேவதியை மணப்பதற்கு அப்பா இப்படி தடை விதிப்பார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. சொத்து சுதந்திரம் கிடையா

தென்பார். வேண்டாம் என்று கூறிவிட்டால் போச்சு என்றுதான் நான் மனக் கோட்டை கட்டினேன். அநியாயமாய் மலரையொத்த ஒரு பெண்ணின் ஹிருதயத்தை ஒடித்தாயிற்று. "இதோ இப்பவே நண்பன் நமசிவாயத்தினிடம் சொல்லியனுப்பு. ரேவதியிடம் நீ காட்டிய அன்பிற்கு வேண்டுமாயின் அவள் ஜாகீர் பெறட்டும் நம் சமஸ்தானத்திலிருந்து" என்று கண்டிப்பாய் கூறியதோடு மறுத்தால், இதோ இந்த வாளிற்கு நான் இரையாவேன்' என்று பயமுறுத்தினரே அப்பா...என் புத்திக்கு "ஐயோ தந்தையின் கொலைக்கு காரணமாவதா?" என்ற யோசனை பட்டதே தவிர இல்லாவிடில் ஓர் ஸ்திரீ ஹத்தி ஏற்பட்டுவிடுமே என்ற சிந்தனை என் எழவில்லை. ரேவதி...ரேவதி ...இங்கிருந்து நான் எவ்வளவு கத்தித்தான் என்ன? நண்பன் இந்நேரம் போய் சொல்லியிருப்பான். என் கண்மணி இருக்காளோ, உயிர் விட்டு விட்டாளோ!......

பெரிய ஜமீந்தார்......அப்பாடா பையனை வழிக்குக் கொண்டு வந்தாச்சு! அந்த ஜமீந்தாருக்கு கொடுத்த வாக்குப்படி அவர் மகளை மருமகளாய் அடைந்தால், எவ்வளவிற்கு சௌகரியம்? முதலாவது அவரிடம் பட்ட கடனை அடைக்க வேண்டாம். ஜமீனை ஆள ஜமீன் வம்சத்திலேயே பிள்ளை பிறக்கும்......நல்லவேளை. "என் பயமுறுத்தலுக்கு சரி! அப்பா! அப்படியே செய்யுங்கள்!" என்று பிருத்வி கூறியிருந்தானானால்......என் பாடு அரோஹராதான்......

நண்பன் நமசிவாயம்......நல்ல உத்தியோகம்தான் கிடைத்தது. நான் விஷயம் சொல்லப்போக அந்த பெண் மூர்ச்சித்து விழ, அவளைச் சேர்ந்த மனிதர்கள் வந்து என்னை வசவுப்பா, பாட... போதுமய்யா! எத்தனை ஜன்மம் எடுத்தாலும் ஜமீந்தார் மகனுக்கு தோழனாக மட்டும் பிறப்பிக்காதே என்னை. நேற்று வரையிலும் சந்தோஷமாய்ப் பேசி சமாசாரம் சொல்ல, ஒரு நாள் என்னை யனுப்பினதில்லை சின்ன ஜமீந்தார். இதற்கு மட்டும் என்னையே பொறுக்கினார்...... பாபம்...பாபம்!...அந்தப் பெண் அந்தஸ்திற்கு கீழ்ப்பட்டவள் என்பது முன்பே தெரியாதோ... இத்தனை தூரம் விஷயம் முற்றின பிறகா ...... சேச்சே !.......என் காதலி கமலிகூட என் அந்தஸ்திற்கு குறைந்தவள்தான்......... ஆனால், அதற்காக......ஈசுவரா! நல்லவேளை ஜமீந்தார் மகனாக என்னைப் பிறப்பிக்காமல் இருந்தாயே? ரேவதி மனதுடைந்து செத்தால், என் காதலி, என்னை சும்மாவிட மாட்டாளே? கமலியும் ரேவதியும் உயிர்த் தோழிகளாயிற்றே?......

கமலி.........இவரை நான் என்னவோ ரொம்ப இளகிய மனதுடையவர் என்று எண்ணியிருக்க, என் சகி ரேவதியின் உள்ளத்தை உடைக்க தூது எப்படிப் போனார் இவர்...விஷயம் அறிந்து நான் ரேவதியிடம் ஓடினால், அவளை அங்கே காணவே காணும். வீட்டில் ஒரே அழுகை, அமர்க்களம். "என்னைத் தேடாதீர்கள்" என்று எழுதி வைத்துப் போய்விட்டாளே! இந்த ஸ்திரீ ஹத்திக்கு இவர் என் ஆளாகணும்...... ஹூம்! கல் நெஞ்சம் படைத்தவர்கள்தாம் இந்தப் புருஷர்கள் [சிலநாட்களுக்குப்பிறகு]

பிருத்விசிம்மன்...பெரிய பிழை
யல்லவா செய்து விட்டேன்!
என்னை மணந்த மாலதியே தற்
சமயம் என் பிழையை எடுத்துக்
காட்டுகிருளே? ரேவதி....எது
உன் சாபம் விடாது போல்
இருக்கே?......என் கல்யாணத்
திற்குக் காரணமாய் இருந்த என்
பிதாவும் இறந்துவிட்டார். உண்
மையில் அவர் செய்தது என் கல்
யாணத்திற்கா? என் நன்மைக்கா?
ரேவதியை இழந்ததோடு, மாலதி
யின் அன்பைப் பெறவும் அரு
கதையற்றவனுனேன்!? இதுவோ
நான் கண்ட பலன்!

மாலதி...அப்போதே ஊரில்
பேசிக்கொண்டனர். உன்னை
மணக்கப் போகிறவன் வேறு
ஒருவளை நேசித்து வந்தாண்டி!
என்று என் சகியும் கூறினுள்.
ஆனுல், அப்போது எனக்குத்
தெரியாது அப்பெண் ரேவதி
என்று. எங்களூருக்கு வந்திருந்த
போது, ஒரு சமயம் என்
னுயிரைக் காப்பாற்றினுளே
அவள்! அவளை எப்படி மறக்க
முடியும்? அவளை ஒரு சாதாரணப்
பெண் என்று எப்படி நினைத்தார்
பெரிய ஜமீந்தார். எவ்வளவு வீரவ
முள்ளவளாயின், எக்கசக்கமாய்
அகப்பட்டுக்கொண்ட என்னை
அன்று காப்பாற்ற வந்திருப்பாள்
அவள்! ரேவதி என்று தன்
பெயர் செதுக்கிய மோதிரத்தை
எனக்கவள் அளித்தது இன்று
மிருக்கு! நான் அளித்த பதக்
கத்தை அவளும் ஒருசிநேகிதியின்
'பரிசு' என்று வைத்துக்கொண்
டிருப்பாள்! தனக்கும் தன்
காதலனுக்கும் இடையே வந்த
வள் நானென்பதை அப்பேதை
எங்கேயறிந்திருக்கப்போகிருள்?
இனி நான் வருந்துவதைத் தவிர
வேறு எம்முறையில் அவளுக்கு
உபகாரம் செய்யக்கூடும்.
எனக்கே புரியவில்லையே?.........
இத்தனை நாட்களாக அவ
ளைத் தேடி அலைந்த அலைச்சல்
தான் மிச்சம் போலும்...இப்
போது அகப்பட்டாலும்
ரேவதியை என் தமக்கையாக
பாவித்து, பலர் அறிய [illegible]ன் கண
வருக்கு அவளை மணமுடித்துப்
பார்ப்பேன்.. என் எண்ணம்
ஈடேறுமா?......

கமலி...என்ன ஆச்சரியம்? சக்
களத்தி வாய்ச்சாலும் மாலதி
யைப் போல் வாய்க்கணும்.
அவள் ஒரு பக்கம் ரேவதியைத்
தேட, என்னை இன்னெரு பக்கம்
தேடி வரும்படி அனுப்பினுளே?
யார் அதிருஷ்டமோ, ரேவதி
கிடைத்து விட்டாள். பாவம்!
பிருத்விசிம்மனைப் பிரிகையில்
மூன்று மாத கர்ப்பிணியாய்
இருந்தாளாம். அவனையே உரித்து
வைத்தாற் போல் இருக்கிருன்
ரேவதியின் பிள்ளை......ஆனுல்....
அவள் உடம்புதான்....ஹூம்....
ஆள் பிழைப்பது துர்லபம்தான்.
மாலதியும் பிருத்விசிம்மனும்
அவளைத் தேடுவதாக நான்கூறும்
போது, ஒரு பார்வை பார்த்
தாளே என்னை... அப்பா!...அதில்
தான் எவ்வளவு நிராசை! 'கமலி,
முன்பு ஒருநாள் நீயும் நானும்
ரேகைக் குறி கேட்டோமே
ஒருத்தியிடம், நினைவிருக்கிறதா?
என் கையைப் பார்த்து 'இவள்
வயிற்றுப் பிள்ளை ஜமீந்தாரா
வான்' என்றவள் கூறியது
ஞாபகமிருக்கா?' என்று தழு
தழுத்த குரலில் கேட்டாளே!
அப்படி யென்ருல்......ஆம்!
ஒருக்கால் தான் இறந்துவிட்
டால் பிள்ளையை உரியவர்களிடம்
ஒப்புவித்துவிடு. என்ற அர்த்தம்
தான். கடிதம் போய்ச்சேர்ந்தி
ருக்கும். கட்டாயம் பிருத்வியும்
மாலதியும் வந்து விடுவார்கள்.

197648

அது வரையிலும் ரேவதியின் உயிர் தங்கணுமே, அதுதான்......

மாலதி...அடாடாடா! ஓடோடியும் வந்து என்ன பயன்? கடைசியில் ரேவதி மோசம் செய்து விட்டாள். ஹூம்! அக் குழந்தை! மறவாமல் நானளித்த பதக்கத்தை பாலன் கழுத்தில் இட்டிருக்கிருளே? ரேவதி! உன் ஆத்மா என்னை மன்னிக்கட்டும். உன் குழந்தையே ஜமீனிற்கு அதிகாரி. ரேவதி அளித்த பரிசு இவன்......

பிருத்வி...ஹூம்! பிராப்தம் அவ்வளவுதான்! ஜமீனிற்கு புத்திரனுக மாலதி அவள் குழந்தையை ஏற்றுக் கொண்டாள்... ஆனல், நானே....இந்த இரு பெண் ரத்தினத்திற் கிடையில் தலை குனிந்து செல்லவும் லாயக்கற்றவன்... ஜமீன் வமிசத்துப் பிள்ளை வேண்டுமென்று தகப்பனர் பிடிவாதம் பிடிச்சார்... ஆனல் நடக்க வேண்டுமென்றிருந்தது வேறு அல்லவா? இதைத்தான் விதி என்பார்களோ?

நல்லவர்களைப்பற்றி நிறையப் படிக்கலாம், பேசலாம். நிறைய எழுதலாம். எவ்வளவோ பாராட்டலாம். ஆனல் நல்லவராக இருப்பது தான் மிகக் கடினம்.

—'ஏஸாப்'

உயர்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பார், தீண்டத்தகாதவர் என்ற பாகுபாட்டை நீங்கள் காட்டாமல் இருப்பது மிகவும் உயர்ந்த காரியம். இதே துறையில் உங்கள் இதயமானது வேலை செய்துவந்து, மற்றப் பெண்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்ற மனப்பாங்கையும் போக்கி விடுவார்களாயின் உண்மையிலேயே அது மிகவும் உயர்ந்தது.

—காந்தியடிகள்

சகோதரிகளின் சந்தேகங்கள்

("நித்யா")

சில குறிப்புகள் :

முகம் காய்ந்து வரவரப்பாக எப்போதும் எனக்கு இருக்கிறதே. அதற்கு என்னசெய்ய வேண்டும் என்று கவலைப்படும் சகோதரிகளுக்கு இதோ ஒரு வழி. நீங்கள் முகம் கழுவும் சோப்புக்குப் பதிலாக கடலைமாவும், மஞ்சள்பொடியும் கலந்து அதனுல் முகத்தைத் தேய்த்துக் கழுவி விடுங்கள். இரவு தூங்கப் போகு முன் வெண்ணெயையோ அல்லது ஆலிவ்எண்ணெயையோ முகத்தில்தடவி நன்ருக சூடுபறக்கத் தேய்க்கவும்.

சதா எண்ணெய்வழியும் முகத்தோடு நான் காட்சியளிக்கக் காரணம் என்ன என சில சகோதரிகள் அடிக்கடி வினவுகிருர்கள். இதற்குக் காரணம் ஜீரணக் கோளாறு, மலச்சிக்கல், அதிக மாவுப்பொருள்களும், சர்க்கரைப் பொருள்களும சாப்பிடுதல் முதலியவைகள்தான் இவர்களுக்கு ரத்த சோகை அதிகம் இருப்பதால்,காய்கறிகள் நிறைய சாப்பிட வேண்டும். இது தவிர சோப்பினுல் ஒரு நாளைக்குக் குறைந்தது மூன்று தடவையாவது முகத்தைக் கழுவவேண்டும். பின்பு ஒரு ஸ்பூன் படிகாரம் 1 படி ஜலத்துக்கு வீதம் கரைத்து அதில் முகத்தைக் கழுவ வேண்டும.

செம் புள்ளி, கரும் புள்ளிகள் வைத்ததுபோன்ற புள்ளிகளும், பார்ப்பதற்கு அருவருப்பை அளிக்கும பருக்களும் சிலசகோதரிகளின் உள்ளத்திற்கு துக்கத்தையளிக்கின்றன. இவற்றிற்குக் காரணம் நீங்கள் உபயோகிக்கும் சோப்பில் 'ஆல்கலி' என்ற காரவஸ்து அதிகமாக இருக்கலாம். மிகவும் மென்மையான, மிருதுத்தோலை உடைய உங்கள் முகம் அந்த அதிகமான காரவஸ்துவைத் தாங்காது கெட்டு, புள்ளிகள். பருக்கள் முதலியவைகள் ஏற்படுகின்றன.

இதற்கு நிவர்த்தி என்னவென்ருல் சோப்பை நிறுத்திவிட்டு, கடலை மாவும் மஞ்சளும் உபயோகிக்கவும். குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவுவது நல்லது. வியர்வை படியும் போதெல்லாம் முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஏனெனில் சருமத்திலுள்ள சிறு துவாரங்கள் எல்லாம் வியர்வையுடன் அழுக்குப் பொருள்களை வெளியேற்றுவதற்கு வாய்களைத் திறந்திருக்க வேண்டும், ஆகவே அந்தத் துவாரங்களை, பௌடரை முகத்தில் அப்பி அடைத்துவிடக் கூடாது. பௌடர் போடும் வழக்கத்தை விட்டுவிட்டால் என் உயிர் இல்லாது என்பவர்கள் இரவில் படுக்கப்போகுமுன், சுத்தமான குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

அடுத்த படியாக பருமனுகத் தடித்தவர்களுக்கு ஆடைகளணி

வதைப் பற்றி சில குறிப்புகள். இரட்டை நாடி சரீரமுள்ளவர்கள் இறுக்கமான ஆடைகளை அணிந்து கொள்ளக் கூடாது. பிடிக்கப் பிடிக்க உடலை ஒட்டினற் போன்ற இரவிக்கைகளை அணிந்துகொள்ள முயற்சித்தால் தாங்கள் மெல்லியவரைப் போன்ற தோற்றம் அளிப்போம் என சிலர் தங்களை அலங்கரித்துக் கொள்ளுகின்றனர். ஆனல் உண்மையில் இவர்கள் பார்வைக்கு, இதோ வெடித்துவிடுவோம் என்று பயமுறுத்தும் பஞ்சு திணிக்கப்பெற்ற தலையணைகளாகக் காட்சி யளிக்கின்றனர்.

அதிகச் சதையை மறைப்பது எப்படி?

1. இரவிக்கையின் கைகள் கூடியவரை நீண்டதாக இருக்க வேண்டும். தடித்த பெண்மணிகள் குட்டையான கைகளையுடைய இரவிக்கைகள் அணிந்து கொள்வதால், ஏதோ குஸ்திக்கு வரும் பயில்வான்கள் போலத் தோற்றமளிப்பார்கள். குட்டையான இரவிக்கையின் நீளத்திற்கு பின்பு, யானைத் துப்பிக்கையைப் போன்று தொங்கும் கை அசிங்கமாக இருக்கும்.

2. தைக்கும் இரவிக்கைகளைக் கூடியவரை சாதாரண வெட்டி தைக்கும் இரவிக்கைகளாக இருந்தால் நலம். 'ட்வ்ஸ்லீவ்ஸ்' போன்ற பக்ஷி இறக்கைக்கைகளும் கழுத்தைச்சுற்றி நாய்க்காலர்களும், வைத்த சட்டைகளை அணிவதால் இவர்கள் உருவம் இன்னும் விகாரப்படுகிறது. 'ரவுண்டு' கழுத்து 'ப' கழுத்து முதலிய அகன்ற வாய்களையுடைய கழுத்துக்களை அணிவதைவிட கழுத்தே தெரியாது. அதாவது மூடியிருக்கும் பழைய காலத்து 'Vநெக்' தைத்தால் நலம்.

3. உடல் பெருத்துத் தடித்தவர்கள் மெல்லிய ஆடைகளையே உபயோகிக்க வேண்டும். ஜார்ஜெட், நைலான் முதலிய மெல்லிய புடவைகள், தடித்த பெண்களை சிறிது மெலிந்து விட்டதைப் போன்ற பிரமை உண்டாக்கும். ஆனல் அதற்கென்று மிகமிக மெல்லிய புடவைகளான "டிஷ்யூ" புடவைகளை உடுத்த முயற்சிப்பது வேடிக்கையிலும், வேடிக்கையாக முடியும். பட்டுப் புடவைகளைத் துவைத்து, நன்ருகத் தேகத்துடன் ஒட்டிக் கொள்ளும் துவண்ட உடைகளை உடுத்துவது நல்லது. வாயில் துணிகளையும் உடுத்தலாம்.

4. மிகப் பெரிய பூக்கள் போட்ட புடவைகளையும் சரி, பெரிய, கொட்டை கொட்டையான மாங்காய்கள் இவைகளைக் கொண்ட ஜார்ஜெட், நைசான வங்காளப்பட்டுப் புடவைகள் இவைகளைவிட சிறிய பொட்டுக்கள் அல்லது புள்ளிகள், மெல்லிய கோடுகள், சின்னஞ் சிறு பூக்கள், சாதா உடல் முதலிய வேலைப்பாடுகள் கொண்ட புடவைகளே, தடித்தவர்களுக்கு மிகவும் ரம்யமான ஆடைகள்.

தடித்தவர்கள் கடைசியாக அறியவேண்டியது, 'எப்படியாவது நீங்கள் பிறருக்கு சிரிப்பு மூட்டக்கூடிய வகையிலோ அல்லது ஹாஸ்யத்திற்கிருப்பிடமாகவோ நாம் விளங்குகிருேமா என்பதை நிலைக் கண்ணாடியின் முன் நின்று பார்த்துக்கொள்ளுங்கள். பின்பு மேலே கூறியபடி உங்களை சீர்திருத்தம் செய்து கொள்ளுங்கள். எவ்வளவு மாறுதல் உங்கள் உருவில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள்.'

மல்லிகை

விஜி

மல்லிகையின் மணம் மனதை யள்ளும் மணம். அழகோ தூய்மையான வெள்ளை நிறம். இதழ்களோ பஞ்ச பாணனிடமிருந்ததற்கு அடையாளமாக ஐந்து இதழ்கள். மன்மதனின் ஐந்து கணைகளில் மல்லிகையும் ஒன்று என்று நான் சொல்ல வேண்டியதில்லை. தேவலோகத்திலிருந்த மலர் ஏன் பூமிக்கு வந்தது என்று கேட்கிறீர்களா? இதோ மல்லிகையே தன் விருத்தாந்தத்தை சாமந்திக் கெடுத்துச் சொல்லிக்கொண் டிருக்கிறாள். நீங்களும் கேளுங்கள்.

சாமந்தி: மல்லிகா! நீயும் நானும் சேர்ந்துதானே இருக்கிறோம். ஆனாலும் எல்லாரும் உன்னைத்தான் விரும்புகிறார்கள். என்னைக் கண்ணெடுத்தும் பார்க்காமலே சென்று விடுகிறார்கள்.

மல்லிகை: ஏனப்படி வருந்துகிறாய் சாமந்தி. இன்னும் இரண்டு மாதங்கள் வரைதானே நானிருப்பேன்! பிறகு எல்லாரும் விழுந்தடித்துக்கொண்டு உன்னிடம்தானே வர வேண்டும்!

சாமந்தி: அதென்னமோ வாஸ்தவந்தான். ஆனாலும் நீ என் பக்கத்திலிருக்கும் பொழுதுதான், நான் சந்தோஷமாகவிருக்கிறேன் நீ ஏன் எப்பொழுதும் இங்கேயே யிருக்க கூடாது?

மல்லிகை: அதெப்படி முடியும் சாமந்தி. நாலு மாதங்களுக்குத்தான் எனக்கு பூலோகத்தில் வசிக்க அனுமதி கொடுத்திருக்கிறார் பரமசிவன்.

சாமந்தி: நீ ஒவ்வெரு வருஷமும் பரமசிவனிடத்திற்கா போகிறாய்?

மல்லிகை: ஆமாம் — பூலோகத்தில் உங்களுடனெல்லாம் சேர்ந்து நான்கு மாதங்கள் தானிருக்கலாம். பிறகு மன்மதனின் பாணத்திலிருந்து சிவனைத் துன்புறுத்த வேண்டி வந்ததால் அந்தப் பாபத்தை சிவனுக்குப் பணி செய்து போக்கிக் கொள்ளுகிறேன்.

சாமந்தி: சிவனை எதற்கு துன்புறுத்தினாய்?

மல்லிகை: அந்தக் கதை தெரியாதா உனக்கு? சொல்லுகிறேன். நான் பிறந்தது எங்கு தெரியுமா? இந்திரனின் தோட்டத்தில், நான் பிறக்கும் பொழுது இந்திரனின் நந்தவனத்தில் வெள்ளை நிறப் பூவே கிடையாது. அதனால் என்னைப் பார்த்ததும் இந்திராணி என்னைத் தன் குழலில் சூட்ட விரும்பினாள். நான் அதற்கு இணங்கவில்லை. [அவளுடைய தோழி மேனகா]

மேனகா: மல்லிகா! இந்திராணியின் கூந்தலிலேற புஷ்பங்கள் ஒன்றோடொன்று போட்டி

யிடுவதை நீ பார்த்த தில்லையா? அவள் தானாகவே உன்னை சூட்ட விரும்புவது எப்பேர்ப்பட்ட பாக்கியம்? அப்படி யிருந்தும் நீ ஏன் மறுக்கிறாய்?

மல்லிகை: அம்மா. இந்திராணியின் குழலில் வீற்றிருப்பது பெரிய பாக்கியந்தான். என்னையும் ஒரு மலராக மதித்து எனக்கிந்த கௌரவமளிக்க முன் வந்த தேவிக்கு என் நன்றி. ஆனால் என் மனம் அதற்கிடம் கொடுக்க வில்லையே, என்ன செய்வேன்?

மேனகா: மல்லிகா, இந்திராணி ஒரு முறை சூடிய மலரானாலும் அது என்றும் வாடா மலராக இருக்கு மென்பது உனக்குத் தெரியுமல்லவா? மணமும் குன்றாது.

மல்லிகை: தெரியுமம்மணீ! இருந்தும் மனது சம்மதிக்கவில்லையே.

மேனகா: உன் மனதி விருப்பதைத் தான் சொல்லேன்!

மல்லிகை: அம்மணீ! எனக்கு மும்மூர்த்திகளுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று ஆசை யாக விருக்கிறது. ஈஸ்வரார்ப் பணத்திற்கு வைத்திருப்பதை யாரும் தீண்டக்கூடா தல்லவா?

மேனகா: உன்னுடைய அவா மிகக் கடினமாயிற்றே! பாரிஜாதமும், தாமரையும், அல்லியுந்தான் அந்த மதிப்பிற்குரியவை. நீயோ சிறியவள். உனக்கெப்படி அது கிட்டப்போகிறது! வீணாசை தான்!

மல்லிகை: அம்மா! எவ்வளவு கஷ்டம் வந்தாலும் பொறுக்கத் தயார். துன்டமில்லாமல் சுக மேற்படாது. அன்புத் தெய்வத்திற்குப் பணி செய்வதைத்தான் நான் விரும்புகிறேன்.

மேனகா: உன்னுடைய ஆசை மிகப் புனிதமானது. ஈஸ்வரனை அடைவது மிகக் கடினம். நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறாயா?

மல்லிகை: என் லட்சியத்தை அடைய நான் எதையும் செய்து பார்க்கத் தயார் அம்மணீ.

மேனகா: நீ என் மன்மதனிடம் சென்று பார்க்கக் கூடாது. அவன் உனக்கு உதவி புரியக் கூடும்.

மல்லிகை: செய்யக் கூடும். ஆனால், அவர் காமத்தைத் தூண்டி விடுபவரல்லவா? அவரால் எனக்கு என்ன உபயோக மிருக்கக்கூடும்.

மேனகா: அப்படிச் சொல்லாதே! அவன் அன்புக்கு முதல் படியான ஆசையைத் தூண்டி விடுகிறான். முதன் முதலில் அது காமமாக ஆரம்பித்தாலும், பிறகு அது நட்பாக மாறி, அன்பாய் உறைந்துவிடுகிற தல்லவா? மன்மதனில்லா விட்டால் சிருஷ்டி ஏது! சிருஷ்டி யில்லாவிட்டால் அன்பேது! அன்பிற்கு மூலவன் மன்மதன்தான். நீ அவனைப் பார். பிறகு உனக்கே எல்லாம் புரிந்துவிடும்.

மல்லிகை: அம்மணி இப்படி என்மேல் கோபிக்காமல், என் லட்சியம் கைகூட, சாவதானமாய் அரிய விஷயங்கள் எடுத்துச் சொல்லியதற்கு என் நன்றி. நான் என்றென்றும் உங்களுக்கு கடமைப் பட்டிருக்கிறேன்.

மேனகா: அதோ, மன்மதனும் ரதியும் உலாவ வருகிறார்கள். நானவர்களை இங்கு அனுப்பிவைக்கிறேன். [மன்மதனைப் பார்த்து] நமஸ்காரம மன்மதா. ஆஹா! மாலை வெய்யிலில் ரதியினுடை ஸ்வர்ணமயமாய் ஜ்வலிக்கிறதே.

ரதி: ஆமாம் ஆடைக்கென்ன! வாசனையுள்ள மலரிருந்தால் மனதிற்கு மகிழ்ச்சி.

மேனகா: உங்களுக்குப் பிடித்த தாமரைப் புஷ்பம்.

ரதி: அதைத்தான் இவர் எடுத்துக்கொண்டு விட்டாரே. அது என்ன, தலையில் வைத்துக் கொள்ளும்படியாகவா இருக்கிறது. கையில் பிடித்துக்கொள்வதற்குத்தான் பொருந்தும்.

மேனகா: அல்லி சிறியதாய் அழகா யிருக்குமே!

ரதி: அதற்கு மணம் மட்டுந்தானே! கூந்தலின் கறுப்பை மறைத்துவிடும். பூ என்ன பூ? சிறியதாயும் மணம் நிறைந்த மலராயிருந்தால் தலையில் சூட்டிக் கொள்ள சௌகரியமா யிருக்கும்.

மேனகா: மல்லிகா!

ரதி: மல்லிகாவா! அது யாரது? எங்கு யிருக்கிறுள்? நான் பார்த்ததில்லையே?

மன்மதன்: அப்படி ஒருத்தி யிருப்பதாகவே எனக்குத் தெரியாதே? நான் காலை மாலை இரு வேளைகளில் நந்தவனத்தை சுற்றுகிறேன்! என் கண்களில் படவே யில்லையே!

மேனகா: அவள் இப்பொழுதுதான் பிறந்திருக்கிறுள். தூய்மையான வெள்ளை நிறம்: மனதை யள்ளும் மணம்.

ரதி: அம்மாதிரி புஷ்பம்தான் எனக்கு வேண்டும்.

மன்மதன்: எனக்கும் அது தான் வேண்டும்.

மேனகா: காண்பிக்கிறேன். வாருங்கள்......மல்லிகா, இதோ அழகுத் தெய்வங்கள் மன்மதனும் ரதியும்.

மல்லிகை: மல்லிகா நமஸ்கரிக்கிறேன்.

மன்மதன்: ஆஹா! என்ன காந்தி, என்ன தூய்மை!

ரதி: என்ன சுகந்தம்!

மேனகா: இந்திராணி இவளை குழலில் சூட்ட விரும்பினுள். இவள் இணங்கவில்லை. ஈச்வரனுக்கு அன்புப் பணி செய்ய வேண்டுமாம்.

மன்மதன்: அப்படியா? அது மிகவும் கடினமாயிற்றே.

மல்லிகை: நீங்கள் மனது வைத்தாலுமா ஆகாது.

மன்மதன்: (சற்றுயோசித்துவிட்டு) என்னிடம் நான்கு கணைகள் இருக்கின்றன. அத்துடன் உன்னை ஐந்தாவதாக வைத்துக் கொள்ளுகிறேன். நான் செய்யும் அன்புப் பணியிலீடுபட்டால் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

ரதி: மல்லிகா! அதெல்லாம் ரொம்ப சிரமம். நீ வீணுக என் சிரமப்பட வேண்டும். பேசாமல் என் கூந்தலுக்கு வந்துவிடு. மன்மதன் ராணிக்குப் பிடித்த புஷ்பம் என்று எல்லோரும் கொண்டாடுவார்கள்.

மல்லிகை: அம்மணீ! தாங்கள் என்னைப் பெருமைப் படுத்துகிறீர்கள். அன்புத் தெய்வம் ஈச்வரன் பாதத்தில் ஒரு கணமிருந்தாலும் போதும். பிறகு என்னைக் கசக்கி எறிந்துவிட்டாலும் பரவாயில்லை.

மன்மதன்: மல்லிகா! உன் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய நான் முயற்சிக்கிறேன். அது வரை என்னுடைய கணையாக இருக்கச் சம்மதித்தால் போதும்.

மேனகா: மல்லிகா—மன்மதன் அன்புப் பணியில் முதலிலீடுபட்டால் பிறகு உன் லட்சியத்தையுமடைய முடியுமென்று எனக்குத் தோன்றுகிறது. இதில் ஏதோ சுபமிருப்பதாகப் படு

கிறது. சந்தர்ப்பத்தை இழந்து பிறகு வருத்தப்படாதே.

மல்லிகை: இதுவுந் தங்களாலளிக்கப்பட்ட சந்தர்ப்பந்தான். ஏற்றுக் கொள்ளுகிறேன், அம்மணீ.

மன்மதன்: மல்லிகா நீ சற்றும் பயமின்றி என்னுடனிருக்கலாம். சமயம் வந்தபொழுது உனக்கு என்னாலான உதவியைச் செய்கிறேன்.

மல்லிகா: தங்கள் சித்தம்.

ரதி: கடைசியில் நீங்கள்தான் ஜயித்தீர்கள்! இப்படி நீங்கள் எல்லாப் புஷ்பங்களையுமே எடுத்துக் கொண்டுவிட்டால் குழலில் சூட்ட பூக்களுக்கு நாங்கள் எங்கே போவதாம்?

[சில நாட்களுக்குப் பிறகு]

ரதி: மல்லிகா! கேட்டியா செய்தியை! உன் லட்சியம் கைகூடும் நாள் வந்துவிட்டது.

மல்லிகை: அப்படியா எனக்கொன்றும் தெரியாதே.

ரதி: அவர் உன்னிடம் சொல்லவில்லையா? பார்வதி சிவபெருமானைக் குறித்து தவம் செய்கிறாளாம். சிவன் அசைந்து கொடுப்பதாகக் காணோமாம், ஆகையால் இந்திரன் இவரைப் போகும்படி கட்டளை யிட்டிருக்கிறான்.

மல்லிகை: என் பாக்கியமே பாக்கியம். என்னுடைய ஜன்மம் இன்றுதான் சாபல்யமடைந்தது. உங்கள் பதி எப்பொழுது வருவார் தேவி? என்னை மறந்துவிட்டாரோ என்னவோ?

ரதி: சே! அப்படிச் செய்ய மாட்டார். உன்னை விட்டுவிட்டால் அவர் காரியம் எப்படி ஜயமாகும்.

மல்லிகை: அழகு ராணி தாமரையும், அல்லியுமிருக்கிறார்களே. கூட அரும்பும் மாந்துளிருமிருக்கிறார்கள் என்னை ஒருவேளை...

ரதி: அவர் உன்னை அழைத்துப்போக மறுக்கமாட்டார். அப்படி நினைவில்லாவிட்டாலும் நான் மறக்கமாட்டேன். நீ கவலைப் படாதே!

மல்லிகை: உங்கள் வாக்கு எனக்குப் பால் வார்த்ததுபோலிருக்கிறது தேவி. ஒரு வேளை என்னைத் தேடிக்கொண்டிருக்கிறாரோ என்னவோ—என் மனது ஒரு நிலையிலில்லை அம்மணீ.

மன்மதன்: ரதி! மல்லிகா எங்கே? கூப்பிடு. அவளை ஒன்று கேட்க வேண்டும்.

மல்லிகா: ஸ்வாமீ! என் நினைவு வந்ததற்கு நமஸ்காரம். எது வேண்டுமானாலும் செய்ய சித்தமாயிருக்கிறேன். சொல்லுங்கள்.

மன்மதன்: சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நடந்தாக வேண்டுமாம். இல்லாவிடில் உலகமே அழிந்து விடுமாம். இதுகை கூடுவதற்கு இந்திரன் என்னை அனுப்பியிருக்கிறான். உன்னிடம் ஒன்று கோரி வந்தேன். நீ கடைசியாக வந்த கணையாயிருந்தாலும், முதன் முதலில் உன்னையே அனுப்பலாமென்று உத்தேசம். என்ன சொல்லுகிறாய்?

மல்லிகை: அதைவிட வேறு பாக்கியம் ஏது? நானே உங்களைக் கேட்கலாமென்றிருந்தேன். நீங்களாகவே அதை யோசனை பண்ணிவிட்டீர்கள். என் நன்றி—உங்கள் பாணத்திலிருந்து விடப்படும் முதல் கணையாகச் சென்று உங்கள் வேலையை நானே செய்து முடித்து விடுகிறேன்.

ரதி: மல்லிகா! உன் வாழ்க்கை லட்சியம் இன்று

பலிக்கப் போகிறது. அன்புத் தெய்வத்திற்கு அன்பு ஊட்டி, அகிலத்தையும் காக்கப்போகும் உன் பணியே அன்புப் பணி.

மல்லிகை: இவ்வாறு ரதிதேவியுடன் மன்மதனின் உதவியாலும் சிவனடியில் போய் விழுந்தேன். அவருக்கு என் மீது கருணை பிறந்து என்னை யேற்றுக்கொண்டார். ஆனால் மன்மதனின் கணையாகி, அவருடைய நிஷ்டையைக் கலைத்ததற்காக பூலோகத்தில் ஆண்டு தோறும் சில நாட்கள் கழிக்க வேண்டுமென்று விதித்து விட்டார். ஆயினும் லட்சியம் தூய்மையானதால் இங்கும் அன்புப் பணியிலேயே ஈடுபட்டிருக்கவும் அருளினார். முக்கியமாக சுப காரியங்களிலெல்லாம் எனக்குத் தான்முதல் ஸ்தானம் கொடுப்பார்களென்று சொன்னார். ஆயிற்று. இன்னும் இரண்டு மாதங்கள்தான். பின்பு அடுத்த வசந்தம்வரை பகவத் ஸன்னிதானத்தி லிருக்கலாம்.



உயிரும் உடம்பும்

ஒளி கீழே குனிந்து பார்த்தது. எங்கும் இருள்மயமா யிருந்தது. அங்கே நான் போயாகவேண்டும் என்று ஒளி சொல்லிற்று. சாந்தம் குனிந்து பார்த்தது. யுத்தம் இருப்பதைக் கண்ணுற்றது. சரி, நாம் அங்கே போவோம் என்று சொல்லிற்று சாந்தம். அன்பு குனிந்து பார்த்தது. வெறுப்பே தென்பட்டது, சரி, அங்கே போவோம் என்று அன்பு சொல்லிற்று. மூன்றும் ஒன்று சேர்ந்து உடம்பும் உயிருமாகி நம்மிடையே உலவிக்கொண் டிருக்கிறது.

—'முனிவர் அஸிஸிபிரான்சிஸ்'

பெண்ணின் உள்ளம் எவ்வளவு மிருதுவானதோ அவ்வளவுக்கு ஆழமானதுங்கூட; அவர்களுடைய மனநிலையை, படம்பிடித்துக் காட்டுவதும் எளிதல்ல. அவர்களுடைய உள்ளக் கிளர்ச்சியைப்பற்றி இக்கதையில் ஓரளவு விவரித்திருப்பது சுவாரஸ்யமாய் இருக்கிறது.

உள்ளக்கிதல்

பதினோரு மணிக்கு சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தார்கள். சாயுங் காலம் அவரவர்கள் புருஷர்கள் வீட்டுக்கு வருவதற்குள் ஐந்நூறு அப்பளாம் இட்டாக வேண்டும். பிரேமாவின் நாத்தனாருக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கிறது. சம்பந்திகளுக்காக ஜாங்கிரிப் பருப்பு வரவழைத்து அலம்பி உலர்த்தி அரைத்து ஐந்நூற்றைம்பது உருண்டைகள் உருட்டினாள். விமலா, கோமளம், ஜானகி மூன்று பேருக்கும் ஒரு கூஜா காப்பியை ஆசை காட்டி வரச் சொன்னாள்.

ஜானகிக்குப் பேசிக் கொண்டே இடத் தெரியாது. அவள் ஒரு மூலையில்போய் உட்கார்ந்துகொண்டு தனக்குத் தானே ஏதோ யோசித்துக் கொண்டு அப்பளாம் இட ஆரம்பித்து விட்டாள். அவளுக்குத் தன் வேலையில் அபாரப் பிரேமை. அதை எல்லோரும் சிலாகித்துச் சொல்ல வேண்டுமென்ற ஆர்வம் வேறு.

அவள் கை வளைகள் 'சலக், சலக்' என்று ஓசை யிட்டுக் கொண்டு ஒரு சாண் வட்டமுள்ள மெல்லிய காகிதம் போன்ற அப்பளாங்களைப் பூர்ணச்சந்திர வடிவத்தில் இட்டுத் தள்ளிக்கொண்டிருந்த போதிலும் அவள் உள்ளம் ஒரு நிலையிலில்லை.

எம். சியாமளா

“சில நாட்களாக அவர் என்னமோ மாதிரியாக இருக்கிறார். என்னை அலுத்துவிட்டதோ என்று கூட நினைத்தேன். தெருக்கோடியில் எங்கேயாவது எவளாவது குழந்தையை எடுத்துக் கொண்டு வந்தால் உடனே அவர் பெருமூச் செறிகிறார். என் மன்னிக்கு நான்காவது பெண் பிறந்திருக்கிறதென்று சொன்னபோது அவர் எவ்வளவு பொறாமைப்பட்டார்!

“நான் என்ன செய்யட்டும் பகவான் என்னை மலட்டுச் சன்மமாக சிருஷ்டித்து விட்டான். எனக்குக் குழந்தைகளென்றாலே பிடிக்கவில்லை. நாத்தனார் தன் நான்கு குழந்தைகளோடு வந்து இரண்டு நாள் இருந்தால் வீடெல்லாம் அசங்கியமாய் விடுகிறது. அவளைக் கிளப்ப இருநூறு ரூபாய்க்குப் புடவை வாங்கிக் கொடுக்கவே நான் தயாராயிருந்தால், என்னால் இன்னொருவர் குழந்தையை 'தத்து' எடுத்துக்கொண்டு......

“என் மேல் அவரால் வேறு ஏதாவது குறை சொல்ல முடியுமா? 'அவர் மண வாழ்க்கையின் இன்பத்தைக் குலைக்க குழந்தைகளில்லாததை விட வேறு குறை என்ன வேண்டும்' என்று பிரகாசமாகவே என்னிடம் சொல்கிறார். இந்த

ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுத்தான் வரட்டுமே. என்னை விட சுத்தமாகவும் அழகாகவும் வீட்டை எவளாவது வைத்துக் கொண்டிருக்கிறாளா என்று பார்க்கட்டுமே! சாயுங்காலம் வந்தால் என்னிடம் ஒரு வார்த்தை பேசுகிறதில்லை. ஆந்தை மாதிரி விழித்துக்கொண்டு அசலாத்துக் குழந்தைகள் சாக்கடையில் விழுந்து புரளுவதை ஆநந்தமாகப் பார்த்துக்கொண் டிருப்பார்.

"இன்று சாயுங்காலம் அவர் வரட்டும். நான் என் மனதிலிருக்கிறதைச் சொல்லாமலிருக்கிறதில்லை" இப்படி ஜானகியின் மனம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தது.

விமலா நிமிர்ந்து ஒரு கணம் ஜானகியைப் பார்த்தாள். ஒரு பெருமூச்சு விட்டாள். அன்று சாயுங்காலம் அவள் கணவன் வருவதற்குள் மனதை ஒருவாறு ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைத்தாள். அவன் வீடு வந்துவிட்டால் அவளால் ஒன்றும் செய்யமுடியாது, நினைக்கக்கூட முடியாது. தான் அவன்மீது கொண்டுள்ள அளவு கடந்த காதல் ஒன்றுதான் அவள் உள்ளத்தில் ஊன்றி புலன்களை எல்லாம் மழுங்கச் செய்து விடுமே! ஒரு மனிதன்மேல் அவ்வளவு பாசமா? அதுவும் அவள் கணவன்—சுத்த மோசம். அவள் செய்த தவறு என்ன? அண்ணா சாப்பிடக் கூப்பிட்டிருந்தான். அதற்காகப் போனாள். அப்படியே புடவைக் கடைக்குப் போய் இருநூறு ரூபாய்க்கு இரண்டு புடவைகள் வாங்கிக் கொண்டு வந்தாள். அவனிடம் சொல்லா விட்டால் என்ன? சொல்லி யிருந்தால் வேண்டாமென்று சொல்லப் போகிறான். அல்லது என்றுமில்லாமல் அன்று திடீரென்று ஆபீசில் இருநூறு ரூபாய் முடையேற்பட்டு அவன் வீட்டிற்கு வருவான் என்று அவள் மூக்கிலா வேற்கும்?

"இன்று ராத்திரி வரட்டும். நான் உடுத்திக்கொண்டிருக்கும் ஸ்டைலைப் பார்த்ததுமே, நான் ஒரு நாளைக்கல்ல பல நாட்களுக்கு, மாதங்களுக்கு அவன் முகத்தில் முழிக்கப் போகிறதில்லை என்று அறிய வைக்காமல் போனால் என் பெயர் விமலா அன்று" என்று கருவினாள்.

கோமளம் திடீரென்று எழுந்திருந்தாள். குழவியைப் பலகையின் பக்கத்தில் வைத்தாள். "நான் போகணும். போயிட்டு சீக்கிரம் வந்துடறேன்."

கதவண்டை போனவள் வாசலில் எட்டிப் பார்த்து விட்டு "பிரேமா, என்ன எழவு இது? மங்களத்தும் மாமி வந்துண்டிருக்கா. அவள் போகிறவரைக்கும் காத்துக் கொண்டிருக்கேன். இன்னிக்கு அவளைப் பார்த்துப் பேசிண்டிருக்க என்னால் முடியாது. தொண, தொணன்னு"

பிரேமாவுக்கு இவாளெல்லாம் போய்விடப் போகிறார்களே என்று பயமா யிருந்தது. அவ்வளவு அடபளாத்தையும் தானே இட்டாக வேண்டுமே என்றல்ல. எல்லோரையும் கூப்பிட்டதே தன்னுடைய எண்ணங்களிலிருந்து சற்று நேரமாவது தப்பித்துக் கொள்ளத்தான். 86400 வினாடிகளும் சற்றுக்கூட ஓய்ச்சல் ஒழிவில்லாமல் அவள் உள்ளத்தில் ஓர் போர் நடந்து கொண்டே யிருந்தது. அதை நினைத்தாலே பயங்கரமா யிருந்தது.

எப்படி யிருக்கும் பாருங்கள். திடீரென்று அவள் தன் சிநேகிதைகளிடம், "என் கணவனை விட்டுவிட்டு மற்ருெருவருடன் போய்விடலாமென்று துடித்துக் கொண்டிருக்கிறேன்" என்ருள். அவர்கள் அவள் ஹாஸ்யத்திற்காகச் சொல்கிருள் என நினைப்பார்கள். இல்லாவிட்டால் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு வழி காட்டிவிடுவார்கள்.

ஆனல் உண்மை யென்ன வென்ருல் பிரேமா பைத்தியக் காரியு மில்லை. தமாஷுக்காகப் பேசுகிறவளும் இல்லை. மனதை உறுத்திக் கொண்டிருக்கும் விஷம், எப்பொழுதோ வெளிப்பட வேண்டியது. அவள் கணவன் சீனுவாசன் ஏற்கனவே அவள் நடத்தையில்ஏற்பட்டுள்ள மாறுதலைக் கவனித்திருக்கிருன். அவள் அடிக்கடி தன் பொறுமை யிழப்பதன் காரணத்தை அவன் உணராதிருக்க முடியாது. மன மோஹனும் அவளைத் தன்னுடன் பர்மாவுக்கு வந்துவிடச் சொல்லி வற்புறுத்திக்கொண்டே தான் இருந்தான். அவள் ஒளிவு மறைவு ஒன்றும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. அன்றிரவு......எவ்வளவு சீக்கிரத்தில் ஒரு முடிவு ஏற்படுகிறதோ அவ்வளவு நல்லதுதானே—அன்றிரவு சீனுவாசனிடம் உண்மையைச் சொல்லி விடுகிறது. அவன் தன்னை நேசிக்கும் யாராவது ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமா யிருக்கட்டுமே!

விமலாவும் சற்று கால்களுக்கு ரத்தோட்டம் உண்டாக்க எழுந்து வாசற்படியண்டை வந்தாள். மங்களம் மாமியும் அப்பொழுதுதான் அங்கு சேர்ந்தாள். மரியாதைக்காக "வாங்கோ மாமி" என்ருள்.

"நாழி யில்லையம்மா. இன்னம் ரேஷன் ஆபீசுக்குப் போய் அரிசியும் கோதுமையும் வாங்கிண்டு வரணும்..........

மாமி எப்பொழுதும் அவசரமாகத்தான் போய்க் காண்டிருப்பாள். ஆனல் ஒரு மணி நேரமாவது உங்களை நிறுத்தி உலக சமாச்சார மெல்லாம் சொல்லாமல் போக மாட்டாள்.

'விமலா சேதியைக் கேட்டியோ? இப்போதான் ஸ்டேஷன்லே ஒருத்தர் சொன்னர். ஒரு பஸ் சுவற்றில் மோதி சுக்கு நூருக உடைஞ்சுட்டுதாம். அந்த பஸ்ஸிலே இந்தக் காந்தி ரோட்டிலிருந்து ஒருத்தர் வந்து கொண்டிருந்தாராம். அவருக்குக் கழுத்து முறிந்து அங்கேயே பிராணன் போய் விட்டதாம். பெயர் தெரியவில்லை. உங்கள் புருஷன்களுக்கு ஒன்றும் நேராதிருக்க வேண்டும். நான் போயிட்டு வரேன்."

கோமளம் அப்படியே நிர்ஜீவனுக கதவின் மேல் சாய்ந்து விட்டாள். ஜானகி குழவியைக் கீழே வைத்துவிட்டு பித்துப் பிடித்தவள் போல எழுந்தாள். விமலா ஜன்னலண்டை நின்று கொண்டிருந்தவள் கற்சிலையாக சமைந்துவிட்டாள். அவள் முகம் பால் போல வெளுத்திருந்தது. மங்களம் மாமி போன திசையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பிரேமா கண்ணாடி யண்டை போய் மயிரைக் கோதி வைத்துக் கொண்டாள். பிறகு அவர்களைப் பார்த்து புன்சிரிப்பாக, "இன்று இனிமேல் கை ஓடாது. நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் போயிட்டு வர்ரேளா?" என்ருள்.

விமலாவின் மார்பு விம்மியது. அவள் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

"அவராக இருக்க முடியாது. சுவாமி ஆண்டவனே, உனக்கு கருட சேர்வை செய்து வைக்கிறேன். அவரை க்ஷேமமாகக் கொண்டுவந்து சேர். இனி நான் என்றைக்கும் அண்ணு வீட்டிற்குப் போவதில்லை. பகவானே, என்னை மன்னித்துக்கொள். இவ்வளவு கொடிய தண்டனையைக் கொடுத்துவிடாதே. அவர் மீது குற்றமேயில்லை. அவரிடம் சொல்லாமல் போனது என் தவறுதானே. இனி இந்தப் புடவையைக் கட்டிக் கொள்ளவேமாட்டேன். அவருக்கு ஏதாவது நேர்ந்திருந்தால்.... அவராயிருக்கவே இருக்காது. அவருக்கு என் மேலிருக்கும் பிரேமைக்கு—என்னை விட்டுவிட்டுப் போய் விடுவாரோ என்னவோ." குழந்தை போல விம்மினுள்.

"இன்னும் யாராகவாவது இருக்கும். அவராக இருக்காது" என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள்-முதல்முதலாக அவள் தன் உறவினரைத் தன் கணவன் கண்களோடு பார்த்தாள். அவர்களால் அவருக்கு ஏற்பட்ட நஷ்டங்கள், அவர்கள் அவரை அலட்சியம் செய்தது, எல்லாம் அவள் அகக்கண் முன் தோன்றி மறைந்தன. அவர்கள் மீது அவள் அன்பு குன்றவில்லை. ஆனல் அவள் கணவன் தான் முதலில்—

கோமளம் மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தாள். "எங் காத்துக்காரர் ரொம்ப ஜாக்கிரதையாச்சே, அவராக இராது. ஆனலும் நான் இப்படி இருந் திருக்கப் படாது. எப்போ பார்த்தாலும், குழந்தைகளையே கவனிச்சுண்டு, அவரை நினைக்கிறதேயில்லை. ஐயோ, பாவம். யார்தான் பிள்ளை பெறவில்லை. பன்றி கூட பத்துக்குட்டிகள் போடறது. அதுக்காக புருஷனைக் கவனிக்காமல் எப்போ பார்த்தாலும், ஒரு குழந்தைக்கு மருந்து போட்டுகிறது. மற்றென்றுக்குத் தலை வாருகிறது. இப்படி அவர் வந்ததும் வாராததுமாய் 'குழந்தைக்குப் பால் டப்பி வாங்கிவர மறந்துட்டேளோ இல்லையோ, எனக்குத் தெரியுமே' என்று எரிந்து விழுகிறது. தேமேன்னு பாவம் அவர் தன் குழந்தைகளைக்கூடத் தொடக் கூடாது. "அவனை அடிச்சுக் கொன்னுடுங்கோ. நீங்கள் என்ன பெத்து வளர்த்துட்டது" என்று எத்தனை தடவை கடிந்து கொண்டிருக்கிறேன். ஆஜானபாஹுவாய் அவர், என்னவோ எனக்கு இதமில்லாமல் தானிருக்கும், அவர் இல்லாமல், ஐயையோ! என்னல் நினைக்கக் கூட முடியாது"

வீட்டு வாசற்படியில் ஒரு கணம் தயங்கினுள். உள்ளே குழந்தைகள் விளையாடும் அரவம் கேட்டது. "சீச்சி, அவரில்லாமல் இந்தக் குழந்தைகள் எங்கிருந்து வரும். இன்று இராத்திரி அவர் வரட்டும். திணற அடித்து விடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

ஜானகி இராத்திரிக்கு சமைத்துக் கொண்டிருந்தாள். அவர் மனது உடைந்துவிட்டது என்பது வாஸ்தவர்தான். எனக்கும் தான் புத்திர சந்தானம் கிடையாது என்றபோது மனது உடைந்துவிட்டது. ஆனல் அதற்குப் பிறகு இருவரும் அதைப் பற்றிப் பேசவே இல்லை. அவர்

இருதயம் ரொம்ப மிருது. கீழே உட்கார்ந்து அவர் முழங்கால் மீது சாய்ந்து கொண்டு, "இதோ பாருங்கோ, எனக்குக் கூடத் தான், வீடே ரொம்ப வெறிச் சென்றிருக்கிறது. ஏதாவது ஒரு குழந்தையை சுவீகாரம் எடுத்துக் கொண்டு விடுவோம், என்ன?" இப்படி நினைக்கும் போதே அவள் கண்கள் முன் அவள் கணவன் முகத்திலேற்பட்ட பிரகாசம் தோன்றிற்று. அவள் கணவனிடம் சுவீகாரம் எடுத்துக் கொள்வதைப் பற்றி அன்றே சொல்வதுடன் அவரிடம் தான் மிருகத் தனமாக நடந்து கொண்டதற்கு வருந்துவதையும் தெரிவிக்க வேண்டுமென உறுதி செய்து கொண்டாள்.

பிரேமா கதவை சாத்திக் கொண்டு டாக்டர் வீட்டிற்குப் போனாள்: டாக்டர் வெளியே போயிருந்தார். டெலிபோனை எடுத்து ஒரு நம்பரைத் திருப்பினாள். அவள் முகம் உணர்ச்சியற்றிருந்தது.

"மனமோகன், என்னால் முடியாது. என்னை முற்றிலும் மறந்து விடு. என்னால் சீனுவாசனை விட்டுப் பிரிய முடியாது. அவர்மீது எனக்குள்ள காதலை இன்றுதான் அறிந்து கொண்டேன். நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டாம்."

வீட்டிற்குத் திரும்பி விட்டாள். சீனுவாசன் வீட்டிற்கு வந்த பொழுது அவள் மெத்தை மீது இருந்தாள். அவன் வந்தது தெரியாது. அவன் நேரே அவளிடம் வந்தான். அவள் ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டிருந்தாள். சீனுவாசன் தன் கரங்களை அவள் தோள்களின் மீது வைத்து "பிரேமா, கண்ணே, உனக்கு உடம்பு என்ன செய்கிறது" என்றான். அவன் குரலில் கவலை தொனித்தது.

"அவாளெல்லாம், ஜானகி, விமலா, கோமளம் எல்லாருடைய கணவர்களும்—அது யார்" என்று கேட்டாள்.

"என்ன உளறுகிறாய். நாங்கள் எல்லோரும் ஒன்றாகத்தானே வந்தோம்" என்று அவளை வாரி அணைத்துக் கொண்டான்.

அவள் சிரித்தே விட்டாள். தன் முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு விம்ம ஆரம்பித்தாள். அவள் இருதயம் ஆனந்தத்தால் துடித்தது.

"ஏ, அசடு, என்ன சமாச்சாரம்" என்று கொஞ்சிக் கொண்டே சீனுவாசன் கேட்டான்.

"மங்களத்து மாமி சொன்னாள், யாரோ ஒர்த்தர் காந்தி ரோட்டில் வசிக்கிறவர் பஸ்ஸில் அடிபட்டு—" அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து அவன் சட்டையை நனைத்தது.

"உங்களுக்கு என்னவாகிலும் நேர்ந்திருக்குமோ என்று, ரொம்பப் பயந்து விட்டேன். இப்பொழுது ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது. அதுதான் அழுகிறேன். பெண்களே அப்படித்தான். ரொம்ப சந்தோஷம் வந்தால் அழுவார்கள்" என்று சொல்லிக்கொண்டே சீனுவாசன் முகத்தோடு முகம் வைத்துக்கொண்டு பேசினாள் பிரேமா!

ய. லக்ஷ்மி நாராயணன்

[முன் கதைச் சுருக்கம்: ஆகஸ்டு இயக்கத்தின் போது கோடங்குடி கிராமத்தில் நிர்மாண சேவை செய்ய நாணுஜி வருகிறார். அந்த குடியானவன் அப்புப்படையாச்சியின் நண்பராகி அவனுடைய கஷ்டங்களைத் தீர்க்க முயற்சிக்கிறார். நாணுஜியின் நண்பர்களான சகுந்தலாவும், ராஜகோபாலும் கோடங்குடி வருகிறார்கள். நாணுஜியின் கிராம சேவையை சகுந்தலா விரும்பவில்லை. கோடங்குடி மைனர் அப்புப்படையாச்சியிடம் பகைமை யுணர்ச்சி காட்டுகிறார். காரணம் தெரியாமல் நாணுஜி அவனுக்காகக் கவலைப்படுகிறார். அப்புவின் மருமகன் உலகநாதன் நாணுஜிக்கு நண்பனாகிறான். மைனரின் ஆதிபத்தியத்தில் உலகநாதன் அடங்கி யிருக்காமல், அவரை எதிர்த்து நிற்கவும் துணிந்து விடுகிறான். அகஸ்மாத்தாக நாணுஜி, மைனரும் அவனும் தகராறு செய்து கொள்ளுவதைப் பார்க்க நேரிடுகிறது.]

அவருக்கு எதிரில் ஒரு சிறு துண்டைக் கச்சங்கட்டி திறந்து கிடந்த உடலுடன் கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் உலகநாதன். ஏதோ குஸ்திக்குத் தயாராகும் ரீதியில் இருந்த அவனுடைய தோற்றம், சற்று முன்னர் அவன் என்னிடம் பேசியதிற்கும் இப்போது அவன், அவர் எதிரில் நிற்கும் மாதிரிக்கும் ஏதோ சம்பந்த மிருப்பதாகத் தோன்றியது எனக்கு.

ஏதோ ஒரு பெருத்த விபரீதம் நடக்கப் போகிறது என்று நினைத்து என் மனம் துணுக்குற்றது. ராஜகோபால் அவர்களிருவரையும் விழுங்கிவிடுவது போல் பார்த்தபடி சிலையாகி நின்றான். சகுந்தலா அலட்சியமான தோரணையில் கொஞ்சம் ஆச்சிரத்துடன் என்னைப் பார்த்து, ‘இதுதான்கிராமாந்திர அதிசயம். ஏகாதிபத்திய ஸ்வரூப மெடுத்து நிற்பது போல அவர், அதை எதிர்த்துத் தகர்க்கும் வலுப் படைத்த அவன்—இங்கே யுள்ள குட்டி ஏகாதிபத்திய ஆட்சியின் நடைமுறை! என்று ஏளனமாக ஏதோ பேசினாள்.

நான் பதில் எதுவும் சொல்ல வில்லை. ஆனால் அவர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்றும் தெரியவில்லை.

கொஞ்ச தூரத்தில் அமைதியாகச் சில குடியானவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களும் எங்களைப் போலவே மைனரையும் உலகநாதனையும் உன்னிப்பாகப் பார்த்தார்களே அன்றி நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. திடீரென்று என்ன நடந்து விட்டது. அவர்கள் அப்படிப் போர்முகத் தோரணையில் நிற்பானேன்?

ராஜகோபாலுக்கும் பொறுமை குறைந்து விட்டது. அம்புபோல் பாய்ந்து அவர்கள் அண்டை போய்விட்டான். சகுந்தலா வியப்புடன் என்னைப் பார்த்தாள்.

உலகநாதன் ஏன்னவோ இரைந்து சொன்னது மட்டும் எங்கள் காதில் விழுந்தது. ஆயினும் வார்த்தைகள் தெளிவாகப் புலப்படவில்லை.

இதே சமயம் அப்புப் படையாச்சியும், அவன் மகள் பொன்னியும் குறுக்கு வரப்பிலே விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார்கள். இன்னொரு பக்கத்திலிருந்து மைனர் வீட்டு ஏஜெண்டும் கணக்கப் பிள்ளையும் இன்னும் நாலைந்து பேரும் வேகமாக வந்து சேர்ந்தார்கள்.

'இதென்ன ஒண்ணுமில்லாத விஷயத்துக்காக இவ்வளவு அமர்க்களப்படுகிறதே;' என்று மீண்டும் சகுந்தலா அலட்சியமான தொனியிலேயே கேட்டாள். அவளுக்கு வியாக்கியானம் செய்து காட்ட வேண்டிய சந்தர்ப்பமா இது?

குடியானவர்களைத் தாண்டிக் கொண்டு முன்னால் வந்த அப்புப் படையாச்சி, உலகநாதனிடம் நெருங்கி அவனைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, மைனரை நிதானமாகப் பார்த்தான். இதற்குள் ஏஜெண்டு சின்னையா அவர்களுக்கிடையில் புகுந்துவிட்டார். அவருடைய கூக்குரல் தான் எல்லாவற்றையும் விடப் பெரிதாயிருந்தது.

'மட்டு மரியாதை இல்லாத பயகளுக்கு இந்தப் பண்ணையிலே இடமில்லை. இப்பவே ஒழிஞ்சுடுங்க. இல்லாட்டி ஒழிச்சுக் கட்டிப்புடுவோம். ஆமாம். அப்புறம் சொல்லலேன்னு எம் பேரிலே வருத்தப்படாதிங்க,' என்று கத்தினது மட்டும் காதில் விழுந்தது"

அங்கே நெருங்கிப் போய்ப் பார்க்க வேண்டுமென்று மனம் துடித்தது. ஆனால் நான் அங்கே சென்றால் மைனரின் கோபம் இரட்டிக்கும். யார் மீதோ உள்ள கோபம் என் மீது திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் எனக்கு இந்தக் கொஞ்ச நாளைய அனுபவமே தெரிவித்துவிட்டது.

ராஜகோபால் மைனர் பக்கத்தில் போய் நின்றதும் கூட்டத்திலே சிறிது நிசப்த முண்டாகியது. ஏஜெண்டு சட்டென்றுதம் கூக்குரலை நிறுத்தி விட்டு மைனரையும், ராஜகோபாலையும் மாறி மாறிப் பார்த்தார். அவனோ தன் தந்தையையும், உலகநாதனையும் நிதானமாகப் பார்த்து விட்டு, அப்புப்படையாச்சியை அருகில் அழைத்தான். யந்திரம் மாதிரி முன்னே வந்தான் அவன். ராஜகோபால் மெதுவான குரலில் அவனிடம் என்னமோ சொன்னான். எங்கள் காதில் விழவில்லை.

சகுந்தலாவுக்கு நிலைமை ஏதோ நெருக்கடியான கட்டத்துக்குப்

போய் விட்டதாகத் தோன்றி விட்டது போலும்!

'ராஜாவன் இந்தக் கலவரத்துக்குள் போகணும் நாணாஜி? மைனர் வீட்டுப் பிள்ளையிடம் அவர்கள் ஆத்திரம் கொள்ளத்தானே கொள்வார்கள்?' என்று என்னமோ தனக்குரிய பொருளுக்கு மோசம் வந்துவிட்ட பாவனையில் பேசினாள்.

'ஆமாம் சகுந்தலா, பொன்னிக்கும் உலகநாதனைப் பற்றி இதே கவலைதான். அவள் விலவிலவென்று நடுங்கிக்கொண்டு நிற்பதைப் பார், அதோ மூலையில்' என்று சாவதானமாகக் கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தேன். அவளுக்கோ இப்போது என்னைப் பார்க்கவும் வெட்கமாயிருந்தது.

ராஜகோபால் என்னமோ சொல்லி முடிந்ததும் அப்புப் படையாச்சி விறுவிறுவென்று உலகநாதனருகில் போய் அவனைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றான். மைனர் வெறிக்கப் பார்த்தார் மகனை. அவனோ அலட்சியமாக அவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு எங்கள் பக்கம் திரும்பி வந்தான்.

'இப்பச் சரித்தானே சகுந்தலா?' என்று நான் கேட்டபோது, எவ்வளவு பெரிய புரட்சிக்காரியானாலும் தானும் பெண்மைக்குரிய இயல்பைக் கைவிட முடியாதவள் என்பதைக் காட்டிக்கொண்டு விட்டாள்! மவுனம் தான் அவள் பதில். எங்கள் அருகில் ராஜகோபால் வந்ததும் சகுந்தலாதான் முதலில் 'மைனர் மீது அவர்களுக்கு நெடுநாளாக ஆத்திரம் உண்டோ?' என்று சிறுபிள்ளைத்தனமாக ஒரு கேள்வி போட்டாள். அவனோ பதில் சொல்லாமல் எனக்கு முன்னே நடந்தான். சகுந்தலாவுக்கு மட்டும் அவன் ஏன் தன்னுடைய அற்புதமான கேள்விக்குப் பதில் சொல்லவில்லை என்ற சந்தேகம் இருக்கும்.

'இதெல்லாம் பின்னால் நடக்கப் போகும் பிரமாத சம்பவங்களுக்கு முன்னணி என்றுதான் நினைக்கிறேன் ராஜா' என்று நான் கொஞ்ச நேரம் கழித்துச் சொன்னதும்; 'ஆமாம் நாணாஜி, உண்மைதான்!' என்று முணுமுணுத்தாற் போலப் பதில் சொன்னான்.

கொள்ளிடச் சாலையில் மாலை வெயில் அதிகமாக வீசவில்லை. விரிந்து பரந்த மரக் கிளைகள் குளிர்ந்த நிழலையும் காற்றையும் உண்டாக்கக் காரணமாகவிருந்தது. நிம்மதியான மனோபாவத்துடன் உல்லாசமாக உலாவ வேண்டிய வேளை அது.

ஆனால் எல்லோருக்கும் அப்போதைய மனோபாவம் கலவர நிலையில்தானிருந்தது. இதுகாறும் காணாத சில அதிசயங்களை அந்தக் கோடங்குடி கிராமம் காணப் போகிறது என்றுதான் அவர்கள் நினைத்தார்கள்.

நான் அந்தக் கிராமத்துக்கு வந்தது முதல் இதுவரை மைனரை ஒரு தடவைகூட நேருக்கு நேர் சந்தித்துப் பேசவில்லை. ஆனால் மைனரைப் பற்றியும் அவருடைய நடைநொடி பாவனைகளைப் பற்றியும் பலர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவருடன் இவ்வூருக்கு வந்த புதிதில் சம்பாஷிக்க விரும்பினேன். இரண்டொரு தடவை அவருடைய வீடு வரை போனதும் உண்டு. ஆனால் என்ன காரணத்தாலோ மைனரின் பேட்டி கிடைக்கவேயில்லை. இதைப்பற்றி அப்புப்

படையாச்சி முன்பொரு முறை சொன்ன காரணம் இப்போது நினைவுக்கு வந்தது.

"அவுரைச் சுத்தி இருக்கிற வங்க வேலைங்க இது. அந்தக் கணக்கப் பிள்ளையும், ஏசெண்டும் எப்பவும் ஏதாச்சும் 'குளறுபடி' பண்ணிக்கிட்டிருப்பாங்க. அவுங்களுக்கு மந்திரி அந்த 'ஆனைக் காலய்யிரு.' அவுரு உங்களைப் பத்தி ஏதாச்சும் கயிறு திரிச்சிருப்பாரு" என்று சொன்னான். ஆனால் அப்போது எனக்கு இந்தக் குளறுபடி ஆசாமிகளைப் பற்றி தெரிந்துகொள்ள விருப்பமில்லை. என்னுடைய வேலைகளுக்கும் அவர்களுடைய நட்புக்கும் சம்பந்தம் ஏது?

ஆனால் பின்னால் இரண்டொரு தடவை என்னிடம் படிக்கவந்த குடியானவர்கள் மூலம் அந்த 'ஆனைக்காலன்' பற்றி கேள்விப் பட்டேன்.

'உங்களைப் பத்தி அந்த ஆனைக் காலய்யிரு, மைனருகிட்டே என்னென்னமோ கன்னுபின்னுன்னு சொன்னாருங்க. நான் வாழைக் கொல்லைலேருந்து வரப்போ கேட்டேங்க. ஆனா அதிகநேரம் அங்க நின்னு கேக்க முடியல்லிங்க. நீங்கதான் ஒட்டுக் கேக்கக் கூடாதுன்னு சொன்னிங்களேன்னு வந்துட்டேங்க' என்று கோவிந்தன் என்பவன் சொன்னான்.

கண்ணுச்சாமிப் படையாச்சி என்பவன் சொன்னதும் அவனுடைய கூற்றை அனுசரித்துத் தான் இருந்தது.

'அந்த ஆனைக்காலன் எங்கிட்ட ஒருநாளு மாட்டிப்பாங்க. ஒரு கை பாத்துடலான்னு இருக்கிறேங்க' என்று மிரட்டுந் தோரணையில் புகார் செய்தான்.

அவர்களை அத்துமீறிய வார்த்தைகளிலோ, செயல்களிலோ ஈடுபட வேண்டாமென்று எச்சரித்தேன்.

ஆனால் இப்போதைய குழப்ப நிலைமைக்கு காரணம் ஓரளவு அந்தப் 'பிரமுகரின்' தூண்டுதல் காரணமாக இருக்குமோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று.

இன்று இரவுப்பள்ளிக்கூடத்தின்போது கேட்டால் ஏதாவது தெரியும் என்று கொஞ்சம் தெளிந்தவனாய் ராஜகோபாலை நிமிர்ந்து பார்த்தேன். அவனோ ஆழ்ந்த சிந்தனையுடன் குனிந்தபடி நடந்துகொண்டிருந்தான்.

சகுந்தலா மவுனத்தைக் கலைத்தாள்.

'ஒன்றுமில்லாததற்கெல்லாம் இந்தக் கிராமாந்திரங்களில் தடபுடல் படுகிறது. உலகம் அறியாதவர்களின் போக்குக்கு இதெல்லாம் உதாரணம்' என்று சொல்லிவிட்டு, ராஜாவைப் பார்த்து 'இதற்கெல்லாம் நீங்கள் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம் ராஜா? என்று ஒரு கேள்வியையும் கேட்டுவைத்தாள். நான், அவன் என்ன பதில் சொல்லப் போகிறான் என்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால் அவன் பதில் சொல்லாமல் என்னைப் பார்த்தான். அந்தப் பார்வை என்னைப் பதில் சொல்லும்படி வேண்டியது போலும்.'

'நீ என்னைப் பார்ப்பதற்குப் பதிலாக அந்தத் தீவிரவாதியின் கேள்விக்குப் பதில் சொன்னால் நன்றாயிருக்குமே ராஜா. இந்த நிதானஸ்தன் பதில் கூறினால் அவள் ஏற்றுக்கொள்வாளா?' என்று கொஞ்சம் தமாஷாகவே கேட்டுவிட்டு சகுந்தலாவைப் பார்த்தேன். சட்டென்று அவள் முகம் மாறிவிட்டது. கொஞ்சம்

கோபமும் வெட்கமும் கலந்த பாவனை!

'என்ன நாணுஜி, என்மீது சொல்லம்புகளை இப்படி ஓரேயடியாக வீசுவதற்கு நான் என்ன சொல்லிவிட்டேன். தீவிரவாதத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நாங்கள் இதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டால் அப்புறம் எதுவுமே இயலாதவர்களாகி விடுவோம்.'

'வாஸ்தவம்தான் சகுந்தலா. தீவிரவாதம் பேசுவதற்காகவாவது முக்கியமான விஷயங்களைப் புறக்கணிக்க வேண்டியதுதான்' என்று ராஜா வெறுப்புடன் இடையிலே பேசியதும் நான் திடுக்கிட்டேன்.

'நீங்கள் சொல்லுவது புரியவில்லை ராஜா!'

'எப்படிப் புரியும் உனக்கு? செயலாற்றும் முக்கியத்துவம் தீவிரவாதிகளுக்கு இன்னும் போதிய அளவுக்குத் தெரியவில்லை. அதாவது அவர்கள் தீவிரம் பேசத் தயார். செய்யத் தயாரில்லை' என்பதுதான் இதற்கு அர்த்தம்.

'ராஜா, இதை நான் அடியோடு மறுக்கிறேன். நீங்கள் என்னைக் குத்திக்காட்டத்தான் இப்படிப் பேசுகிறீர்கள்' என்று பதற்றத்துடன் கூறிவிட்டு 'ராஜா உங்களுடன் சேர்ந்துவிட்டால் அடியோடு மாறிவிடுகிறார்' என்று என்னையும் இடித்துக் காட்டினாள்.

நல்லவேளை. பள்ளிக்கூட மணி அடித்தது. சகுந்தலாவுக்கு ஒரே சிரிப்பு.

'நாணுஜி, உங்களுடைய முப்பது நாற்பது வயசுக் குழந்தைகள் எல்லாம் காத்துக் கிடப்பார்கள். வாத்தியாரையாவைக்காணுமே யென்று, திரும்ப வேண்டியது தானே? என்று கேலி செய்தார்.

நாங்கள் திரும்பிவிட்டோம். வழக்கப் பிரகாரம் என்னுடைய 'வயது முதிர்ந்த மாணவர்கள்' வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். நான் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு பாடம் ஆரம்பித்ததை சகுந்தலா கேலிப் புன்னகையுடன் பார்த்தாள். ராஜகோபால் ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்தான்.

(தொடரும்)

மாம்பழக் கதை

[கா்மு]

[சின்னக் குழந்தைகளுக்கு கதை சொல்லுவதில் எச்சுமுப் பாட்டி கெட்டிக்காரி. சலிக்காமல் சொல்லுவாள். குழந்தைகளும் சுவாரஸ்யமாகக் கேட்பார்கள். இந்த மாம்பழக்கதை கூட பாட்டி சொன்னதுதான். இந்தக் கதையை அப்படியே எழுதுகிறேன். உங்களுக்கு இந்தக் கதையைப் படிக்கப் படிக்க ஆனந்தமாயிருக்கும்]

'ரொம்ப வருஷங்களுக்கு முன்னால் நடந்த கதை இது. பூபாளம் என்ற ஊரில் ஆபாலன் என்று ஒரு ராஜா. அவனுக்கு ஒரே ஒரு பெண் குழந்தை. அவளுடைய பேர் சங்கம்மா. ராஜாவுக்கு ஆண் குழந்தை இல்லை. ஆகவே பட்டத்து வாரிசுக்குப் பிள்ளையில்லையே என்ற குறை எல்லோருக்கும் உண்டாகி விட்டது. இப்படியே பலவருஷங்கள் ஓடி விட்டன. சங்கம்மா பெரிய பெண்ணாகி விட்டாள். செல்வமாக வளர்ந்தவளாதலால் கர்வமும், மூர்க்க குணமும் உள்ளவளாக இருந்தாள். ஆனால் அபார அழகி. எனவே இந்தப் பெண் விஷயமும் ராஜாவுக்குப் பெரிய பிரச்னை ஆகி விட்டது.

'என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புபவன் யாராயிருந்தாலும் சரி. சப்த சமுத்திரங்களுக்கு அப்பால் ஒரு தீவு உண்டு. அங்கே ஒரு மாமரம். அதில் ஒரே ஒரு அழகான தங்க வர்ண மாம்பழம் இருக்கிறது, அதை யார் கொண்டுவந்து தருகிறார்களோ, அவருக்குத்தான் நான் மாலையிடுவேன்,' என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

அவளை மணக்க எத்தனையோ ராஜகுமாரர்கள் விரும்பினார்கள். இந்த நிபந்தனையைக் கேட்டதும் அவர்கள் 'தங்கமாம்பழம்' கொண்டுவரப் புறப்பட்டார்கள். அவர்களுக்குள்ளேயே ஒரே போட்டா போட்டி நடந்தது!

ஆனல் சப்த சமுத்திரங் களைத் தாண்டுவதெப்படி? என்றுதான் அவர்களுக்குத் தெரியவில்லை. அடேடே! இதை முதலிலேயே தெரிந்து கொள்ளாமல் வந்து விட்டோமே என்று கவலையடைந்து அவர்கள் சமுத்திரக் கரையிலிருந்து திரும்பி வந்தார்கள். அந்தக்காலத்தில் கப்பல் கிடையாது. ஆனல் பிரும்மாண்டமான பறவைகள் உண்டு. அவைகளைப் பழக்கி வைத்திருப்பார்கள். அவைகள்தான் கடலைக் கடக்க உதவும். ஆனல் அந்த ராஜகுமாரர்களிடம் அம்மாதிரி பறவைகள் இல்லை.

'அந்தத் தங்க மாம்பழத்தைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல. சப்த சமுத்திரங்களைத் தாண்ட ஏழு பறவைகள் வேண்டும். இங்கிருந்து ஒரு யோசனை தூரத்தில் ஒரு முனிவர் இருக்கிருர். அவரிடம் ஏழு பறவைகள் உண்டு. அவைகள் தெய்வீகப் பறவைகள். அவரிடம் போய்க் கேட்டுப்பாருங்கள். அவரைத்தவிர வேறுயாரும் உங்களுக்கு உதவி செய்யமுடியாது; என்று அந்த நாட்டு மந்திரிகளில் ஒருவர் சொன்ஞர். உடனே அவர்கள் அந்த முனிவரிடம் ஓடிஞர்கள்.

முனிவர் அவர்களைப் பார்த்து, என்னிடமுள்ள அந்தப் பறவைகள் வேண்டுமானல், நீங்கள் சில காரியங்கள் செய்யவேண்டும். அதோ எதிரில் ஒரு தடாகம் இருக்கிறதல்லவா? அதில் தண்ணீரே இல்லை. எவ்வளவு வெட்டிஞலும் தண்ணீர் வருவதில்லை. உங்களால் அதில தண்ணீர் உண்டாக்க முடியுமா? என்று கேட்டார். அவர்களால் எப்படி முடியும்? அதோ ஒருபட்டுப் போன இலவமரம் இருக்கிறது. அதைப் பச்சை மரமாக்க வேண்டும். முடியுமா? என்று கேட்டார்.

ராஜகுமாரர்கள் விழித்தார்கள். அதோ அந்த மண்டபத்தில் ஒரு கிழவி இருக்கிருள். அவள் திடீரென்று இப்படிகிழத்தன்மையடைந்து விட்டாள். ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? அவள் மீண்டும் யௌவனம் பெறச் செய்ய முடியுமா? என்று அவர் கேட்டதும் ராஜகுமாரர்கள் எங்களுக்கு வீரமாகப் போர் செய்யத்தான் தெரியுமேயன்றி இந்தச் சிறு காரியங்கள் தெரியாது என்று சொல்லிப் போய்விட்டார்கள்.

ராணிக்கு, ராஜாவிடம் கோபம் கோபமாக வந்தது. ராஜகுமாரியின் பிடிவாதத்தைக்கண்டு அவளிடம் வெறுப்புக் கொண்டாள். இப்படி இருந்தால் யார் அவளை மணந்து கொள்ளுவார்கள்? என்று தவித்தாள் ராணி.

அந்த ராஜாவிடம் ஒரு பெரிய சேனை யிருந்தது.

அந்தச் சேனையில் சுமுகன் என்று ஒரு சிப்பாய் இருந்தான். அவன் பெயர் சுமுகனயிருந்தாலும் அழகானவன் இல்லை. ஆனால் நல்ல குணமும், வீரதீரமும் படைத்தவன்.

ராஜகுமாரி ஒருநாள் ராஜாவுடன் பவனி வந்தாள். அவன் சிப்பாய்களுடன் நின்றான். 'இப்படிப்பட்ட குரூபியும் இருக்கிறானா?' என்று ராஜாவிடம் ஏளனமாகச் சொல்லி சிரித்தாள். இது அவன் மனதைப் புண்படுத்தியது. சேனைத் தலைவன் அவனைச் சேனையிலிருந்து விலக்கிவிட்டான். ஏற்கனவே மனமுடைந்த அவன் தன் உத்தியோகமும் போய் விட்டதுபற்றி தாங்க முடியாத வருத்தத்துக்குள்ளானான். நிதானமாக நெடு நேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

அந்த முனிவரிடம் சென்று வணங்கி நின்றான். அவரும் அவன் வந்த காரணம் கேட்டுத் தெரிந்து கொண்டார். பழைய மூன்று கேள்விகளைக் கேட்டார்.

'சுவாமி, நீங்கள் எனக்குப் பறவைகளைத் தாருங்கள். நான் அந்த மாம்பழத்தைக் கொண்டு வந்து, இந்தத் தடாகத்தில் தண்ணீர் வர வழைக்கிறேன். பட்ட மரம் பாலாயுருகச் செய்கிறேன். கிழவியைக் குமரியாக்குகிறேன்,' என்று சாதுரியமாகப் பதில் அளித்ததும் அவனுடைய முன் யோசனையை மெச்சிப் பறவைகளைக் கொடுத்தார். அந்தப் பறவைகளைப் பெற்ற அவன் அவரை வணங்கிவிட்டு, சப்த சமுத்திரங்களைக் கடந்து செல்லத்தயாரானான்.

* * *

பல நாட்கள் சென்ற பிறகு அவன் திரும்பினான். முனிவரை வணங்கி அந்தப் பழத்துடன் தடாகத்தை அடைந்தான். திடீரென்று அலை பொங்கி வெள்ளமாகத் தண்ணீர் பெருகியது. இலவ மரத்தண்டை சென்றதும் அது பூத்துக் குலுங்கியது. கிழவியுங் குமரியானாள்.

'அவள் தன் பதியிடம் பிரியமாக நடந்து கொள்ளாததனால் இந்த நிலை ஏற்பட்டது,' என்று அவரிடம் விளக்கினான். முனிவர் அவனை ஆசீர்வதித்து 'இந்த அற்புத மாம்பழத்தால் எல்லாக் காரியங்களும் சித்தியாகும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இதை வைத்திருப்பவர்கள் சீல குணமும், பணிவான சுபாவமும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்' என்று சொன்னார். அவனும் வணங்கி விடை பெற்று அரண்மனைக்குப் போனான்.

அங்கே ராஜகுமாரி இந்தக் குரூபியைக் கண்டதும் ஆத்திரமும் ஆச்சரியமும் அடைந்தாள். 'தங்க மாம்பழம் உனக்கு எப்படிக் கிடைத்தது?' என்று கத்தினாள். அதைப் பிடுங்கிக்

கொண்டு அவனை விரட்டும்படி ஆட்களை உத்திரவிட்டாள். ஆனால் அவனிடம் யாரும் போக முடியவில்லை.

'ஏ, கர்வம் பிடித்த ராஜகுமாரியே! நீ என்னைத்தானே குரூபி யென்று இகழ்ந்தாய்? நீ அழகி என்று இறுமாந்திருக்கிறா யல்லவா? இப்போது பார், உன் முகத்தை அந்தக் கண்ணாடியில்' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

அவள் இறுமாப்புடன் 'என் அழகுக்கு என்ன குறைவு?' என்று கண்ணாடியில் கர்வத்துடன் பார்த்தாள். ஆனால் அவள் முகம் அப்போது மிக விகாரமாயிருந்தது. கண்ணால் காணவும் சகிக்க முடியாத குரூபம்!

'ஐயையோ! நான் ஏன் இப்படிப் போனேன்?' என்று அலறினாள் அவள். ராஜாவும் ராணியும் பிரமித்து சுமுகனிடம் அவளைப் பழையபடியே மாற்றி விடுமாறு மன்றாடினார்கள்.

'அவள் மமதையும் பிடிவாதமுமே அவளுடைய விரோதிகள். அவைகள் நீங்கினால்தான் அவள் மாற முடியும்!' என்று சொல்லி விட்டு 'இதோ என்னைப் பாருங்கள் இப்போது!' என்று திரும்பினான்.

'உலகில் இவ்வளவு அழகான வாலிபனும் இருக்கிறானா?' என்று அத்தனை பேரும் பிரமிக்கும்படி மாறி விட்டது அவனுடைய உருவம். ராஜகுமாரி அழுதாள். அவன் காலில் விழுந்து மன்றாடினாள். ஆனால் அவன் மனம் இளகவில்லை. 'நான் உங்களையே மணக்க விரும்புகிறேன். என்னைக் கைவிடக் கூடாது' என்று கெஞ்சினாள். அப்போதும் அவன் மனமிரங்கவில்லை.

முன்பு நான் குரூபியாயிருந்தபோது வெறுத்தாய். இப்போது அழகனாயிருப்பதால் விரும்புகிறாய். ஆனால் நான் உன்னை மன்னித்து விடுகிறேன். பழைய உருவமும் தருகிறேன். ஆனால் பழைய குணங்களைத் திரும்ப நீ அடையாமலிருப்பதைப் பொறுத்தது நான் உன்னை மணப்பதும், மணக்காமலிருப்பதும்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

சங்கம்மா பழையபடி ரூபவதியாய்விட்டாள். ஆனால் முன் போலக் கர்வம் அடையவில்லை. பிடிவாத மூர்க்க குணமும் இல்லை. சுமுகனை அவளால் மறக்க முடியவில்லை. அவனைக் கல்யாணம் செய்து கொள்ள அவள் துடித்தாள். ராஜாவும் ராணியும் என்ன செய்வதென்று தவித்தார்கள்.

'அந்த மாம்பழத்தை அவன் வைத்திருக்கும் வரை அவன் அப்படித்தான் இருப்பான். அதை அவனிட

மிருந்து அபகரித்து விட்டால் அப்புறம் அவன் மனம் மாறிவிடுவான்' என்று அந்த ராஜா நினைத்தார்.

அவன் தூங்கும் போது அதை அபகரிக்க ஏற்பாடு செய்தார் அவர். அன்றிரவு அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

ராஜாவும், மற்ற ஆட்களும் அவன் வீட்டைச் சுற்றிக் கொண்டார்கள். ராஜா உள்ளே நுழைந்தார். திடீரென்று அவர் மண்டையில் அடி விழுந்தது. 'ஐயோ!' என்று துள்ளிஓடினர் ராஜா. மற்றவர்கள் மண்டைகளிலும் அடி! எல்லோரும் 'ஐயோ, ஐயோ!' என்று அலறினர்கள்.

சுமுகன், சத்தங்கேட்டு எழுந்தான். உடனே நடந்ததென்னவென்று தெரிந்து கொண்டான். இடி இடியென்று சிரித்துவிட்டு 'நான் விரும்புபவரிடந்தான் இதைக்கொடுக்கலாம். வேறுயாரும் தொடமுடியாது. அப்படியே நான் கொடுத்தாலும் நல்லவர் களிடம்தான் இருக்கும். இல்லாவிட்டால் மறைந்துவிடும். நடந்தது நடந்து விட்டது. நாளைக்கு உங்களுடைய பெண்ணை நான் மணந்து கொள்ளுகிறேன். இப்போது அவள் திருந்திவிட்டாள். அவள் கர்வம் போய்விட்டது. ஆகவே அவளை ஏற்றுக் கொள்ளுகிறேன்' என்று சொன்னன்.

ராஜாவுக்கு சந்தோஷம் தாங்கவில்லை தன் பெண்ணையும் அவனுக்குக் கல்யாணம் செய்துவைத்து ராஜ்யத்தையும் அவனுக்கே தந்துவிட்டார். தங்க மாம்பழ மகிமையினல் சுமுகனும் சங்கம்மாவும் நல்லவர்களாயும், சந்தோஷமுள்ளவர்களாயும் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்கள் என்று பாட்டி சொல்லி முடித்தாள்.

குழந்தைகள் வாழுமிடமே ஸ்வர்க்கமாகும்.

'ஏனன்'

தாயார் கொடுமைக்காரி அல்ல. ஆனாலும் ஆசாரப் பித்து. அப்படி அவள் இருந்ததன் பலனை அவளுடைய மகன் அனுபவித்தது விதியின் செயல் அல்ல.

ஆசாரப் பேய்

சகுந்தலாபாரதி

இந்தியாவுக்குப் பிரயாணிகளை ஏற்றிவரும் 'ரஜுலா' என்ற கப்பல் 'போர்ட் ஸ்வெட்டன் ஹாம்' துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டது. நானும் என் நண்பரும் இரண்டாவது வகுப்பு மேல்தளத்தில் வந்து உட்கார்ந்தோம். அழகிய மலாய் நாட்டை விட்டுப் போகிறோமே என்ற வருத்தமும், பல நாளாக காணாத தாய் நாட்டைக் காணப்போகும் சந்தோஷமும் மாறிமாறி மனதில் கொந்தளித்தது. இருபுறமும்கரை கண்ணுக்கெட்டும் தூரத்தில் கப்பல் சென்றுகொண் டிருந்தது. இந்தியாவிலிருந்து முதன் முதலாக கப்பலேறியபோது ஏற்பட்ட மனக்குழப்பம்-எதையோ பறிகொடுத்தது போன்ற ஏக்கம்—இன்று காணப்படாததையெண்ணி வியப்படைந்தேன். 'தண்ணீரைவிட ரத்தம் கட்டியானது' என்றொரு ஆங்கிலப் பழமொழியுண்டு. உடன் பிறந்தோர் இழைத்த பல கொடுமைகளையும்மறந்துபின் அவருக்கு ஒரு ஆபத்து நேரிட்டால் உதவி செய்யப் புகும் மனப் பான்மையை விளக்குவதற்காக. அதுபோல, தன்னை வெறுத்தொதுக்கி, தனக்கிடமில்லையென்ற தாய்நாட்டின் மீதும் தன்னையறியாததோர் வாஞ்சை—பாசம்—ஏற்படுகிறது போலும்! சிந்தனைக்கடலில் மூழ்கியிருந்த நான் எங்கள் பக்கத்தில் இருந்த சாய்வு நாற்காலியில் யாரோ உட்கார்ந்த சத்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவர், 'தங்கள் நித்திரையைக் கலைத்துவிட்டேன் போலும், மன்னிக்கவேண்டும்' என்றார். நான் வழக்கமாக இது போன்ற சந்தர்ப்பங்களில் உபயோகப்படும் 'பரவாயில்லை' என்ற அர்த்தமற்ற வார்த்தையைக் கூறினேன். பின் அவர் நிஜமாகவே தூக்கத்தில் ஆழ்ந்திருந்த என் நண்பரை எழுப்பினார். அவர் செய்கை எனக்கு சிறிது நகைப்புண்டாக்கிற்று. அதைக் கவனித்ததும் அவர், 'நான் நாளைக் காலை பினங்கில் இறங்கி விடப்போகிறேன். என் தாயார் தனியாக ஊருக்குப்போகிறார். அவருக்கு உதவியாக வேண்டியவற்றை செய்து கவனித்துக் கொள்ளும்படி சொல்வதற்காக இந்த நண்பரைத் தேடிவந்தேன் என்றார். அதற்குள் நிம்மதியான மனத்துடன் நித்திரையுலகில் சஞ்சரித்திருந்த என் நண்பர் கண் விழித்து, ஆச்சரியக்குறி தொனிக்கும் குரலில், 'ஆமாம், ஏனையா, உங்கள் தாயார் நாலு நாளைக்குமுன் இந்த 'ரஜுலா' வில்தானே ஊரிலிருந்து வந்தார்கள். ஏன் உடனே திரும்புகிறார்கள்'? என்று கேட்டார். 'என்ன

வென்று சொல்வது. நீங்கள் கூட அநேகமாக கேள்விப்பட்டிருக்கலாம். நான் ஒரு சீனப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறேன். அவளுடன் குடியிருக்க மனமொப்பாமல், அம்மா உடனே ஊருக்குத் திரும்பிவிட்டாள்' என்றார்.

பின்னர் பிராமணர்களின் ஆசார விவகாரங்களைப் பற்றியும், ஜாதி வித்தியாசங்களைப் பற்றியும், கலப்புமணத்தைப் பற்றிய பலவித அபிப்பிராயங்களையும் குறித்து சிலநேரம் பேசினோம்.

'எது எப்படி இருந்தாலும் இந்தியர்கள் தமக்குள்ளேயே மணம் செய்துகொள்வதுதான் சரி. அன்னிய பாஷை பேசும் பிறநாட்டு ஸ்திரீகளை மணம் செய்துகொண்டால், பழக்க வழக்கங்கள் அதிக வித்தியாசமாக இருப்பதால் குடித்தனம் செய்வது சிரமம். அதிலும் பெண்களுக்குத்தான் கஷ்டமதிகம். மாமியும் மருமகளும் ஒரேவீட்டில் குடியிருப்பது முடியாத காரியம்' என்று நான் சொன்னேன். சிறிது யோசனை செய்துவிட்டு, அந்தப் பிராமணர் சொல்லத்தொடங்கினார்: 'ஐயா, சொந்த ஜாதியிலேயே மணஞ்செய்து கொண்டபோதிலும் மாமியும் மருமகளும் ஒற்றுமையாக ஒரு வீட்டில் குடியிருப்பதில்லை. அன்னியப் பெண்ணொருத்தி சந்தோஷமாகத் தன் மகனுடன் வாழ்ந்து கொண்டிருப்பதைக் காண எந்த ஸ்திரீக்கும் சம்மதம் இருப்பதில்லை. இதற்கும் விலக்கு இருக்கத்தான் செய்கிறது. கணவனைப் பெற்ற தாய் வீட்டிலிருக்கக்கூடாதென அடித்து விரட்டும் மருமக்கள் மார்களும் இருக்கிறார்கள். ஆனாலும் இளம்பிராயமுள்ள பெண்களை குடும்பம் நடத்தத் தெரியவில்லையென்றும், வீட்டு வேலை தெரியவில்லையென்றும், ஓயாமல் குறைகூறிக்கொண்டிருக்கும் மாமியார்கள் தங்களுக்கு வினையைத்தானே தேடிக் கொள்கிறார்கள். சற்று பொறுமையுடன் மருமகள் செய்யும் தவறுகளை, அவ்வப்போது அவளுக்கு விளங்கும்படியாக, நல்ல வார்த்தைகளால் சொல்லித் திருப்பினால், நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதுபேர் மாமியாருக்குக் கீழ்படிந்து பிரியமாக நடந்து கொள்வார்கள். என் கதையைக் கேட்டால், நான் சீனப்பெண்ணை விவாகம் செய்யத் துணிந்ததின் காரணம் நன்றாக விளங்கும்' என்றார்.

நானும் நண்பரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து என்ன மறுமொழி சொல்வதெனத் தெரியாமல் விழித்தோம். ஆனால் அந்தப் பிராமணர் எங்களை கவனிக்கவில்லை பதிலும் எதிர்பார்க்கவில்லை. துக்கத்தால் கம்மிய குரலுடன் சொல்லத் தொடங்கினார்:

'ஐயா, சுவரோடேயாவது சொல்லியாறு' என்று நம்மவர்கள் ஒரு வசனம் சொல்வார்கள். யாரிடமாவது சொன்னால்தான் மன சமாதானமடையும்போலத் தோன்றுகிறது. உங்களுக்கு யாதொரு ஆட்சேபணையுமில்லாவிட்டால் என் கதையைச் சொல்கிறேன்' என்றார். நானும் நண்பரும் பரிவுடன் கேட்கும் முகத் தோற்றத்தை வரவழைத்துக் கொண்டு தலையசைத்தோம். நீண்டதொரு பெருமூச்சு—பின் அவர் தன் கதையைத் தொடங்கினார்:

'நான் எஸ். எஸ். எல். ஸி. பரிக்ஷையில் தேறியதும் திருநெல்

வேலி ஜில்லாவில் ஒரு ஊரில் தாலூகா ஆபீஸில் குமஸ்தாவாக முப்பது ரூபாய் சம்பளத்தில் போய்ச் சேர்ந்தேன். என்னுடன் என் தாயார், குழந்தைப் பருவத்திலேயே விதவையான என் தமக்கை இருவரும் வசித்து வந்தார்கள். எனக்கு ஏற்கனவே கல்யாணமாய் விட்டபடியால், பதினைந்து வயதான என் மனைவியும் வந்து சேர்ந்தாள். என் மனைவி வீட்டுக்கு வந்த நாள் முதல், என் தாயாரும் தமக்கையும் அவளைக் குறை கூறுவதே தொழிலாகக் கொண்டார்கள். 'பாத்திரம் தேய்க்கத் தெரியவில்லை. மெழுகத் தெரியவில்லை. சீதனம் போதாது. தன்னைச் சிங்காரித்துக் கொள்வதிலேயே நேரத்தைச் செலவிடுகிறாள்'. என்பது போன்ற பல குற்றங்கள். என். மனைவியின் நிலைமையைக் கண்டு, இரங்கி நானும் சில நாள் அவர்களுடன், தர்க்கித்தும், கோபித்தும், கெஞ்சியும் பார்த்தேன். அவர்கள் நிறுத்தவில்லை. கடைசியாக, அவர்கள் சொல்வதைக் கவனிப்பதில்லையென்று தீர்மானம் செய்துகொண்டேன். பகலில் படிக்க நேரமில்லாதபடியால் கமலம்—என் மனைவியின் பெயர்—இரவில் என்னிடமுள்ள சில ஆங்கில கதைப் புத்தகங்களைப் படிப்பது வழக்கம். இது எவ்விதமாகவோ என் தமக்கைக்குத் தெரிந்து விட்டது. ஒரு நாட் காலையில் ஆறு மணிக்கு என் தாயாரின் குரல்—கோபமாக உச்சஸ்தாயில் பேசுவது கேட்டது. நான் கண் விழித்து எழுந்து வந்து என்னவென்று விசாரித்தேன். அவள் 'ஆமடா, உனக்குத்தான் காது செவிடாகப் போய்விட்டதே. காலமே எழுந்து ஒரு மணி நேரம் கதவை பிடித்து, யஜமானியம்மாளிடம், 'நான் வாசல் தெளித்து, மெழுகிப் பெருக்கி எல்லாம் முடிந்து விட்டது. கோலம் போடு' என்று சொல்லி விட்டுத் தாம்பிரபாணிக்குக் குளிக்கப் போனேன். வந்து பார்க்கும்போது வாசல் சூனியமாகக் கிடக்கிறது. மார்கழி மாதம் எல்லா வீடுகளிலும் கோலம் போட்டு, பூசணிப் பூ வைத்து செம்மண்ணிட்டு மங்களகரமாக யிருக்கிறது. நான் பண்ணின பாபம். இல்லாவிட்டால் உனக்குத்தான் இப்படிப் புத்தி போகுமா?

'ராத்திரி பத்து மணி வரை பரீக்ஷைக்குப் படிக்கிற மாதிரி ஒருத்தி படித்துக் கொண்டிருந்தால், காலையில் எப்படி எழுந்திருக்கத் தோணும்? எதிராத்து மாட்டுப் பெண்கள் எல்லாரும் குளிக்க வந்திருந்தார்கள். தாசில்தார் ஆம்படையாளும் வந்திருந்தாள். மாட்டுப் பெண் எங்கே? என்று கேட்டாள். நான் 'அவள் இன்னும் எழுந்திருக்கவேயில்லை' என்று சொன்னேன். 'ரொம்ப நேரம் தூங்கினாலும் உடம்புக்காகாது. ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம்தான் தூங்கலாமாம்' என்று அடுத்தாத்துப் பெண் சொன்னாள். நம்ம பார்வதி (என் தமக்கை) 'எங்காத்து மாட்டுப் பெண் ராத்திரி பனிரண்டு மணி வரை வாசித்துக் கொண்டிருந்தாள். அதனால்தான் எழுந்திருக்க முடியவில்லை' என்றாள். அதைக் கேட்டு தாசில்தாராம்படையாள் 'இரண்டு நாளில் கலெக்டர் ஜமாபந்திக்கு வரப் போகிறார். உங்க பிள்ளை பெண்டாட்டிக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தால், ஆபீஸ் வேலை எப்படிச் செய்வது? எங்காத்துக் காரார்கூட நேற்று சொல்லி வருத்

தப்பட்டார். 'பையன் முன்னுக்கு வரக்கூடியவன் இப்பொழுது கொஞ்ச நாளாக வேலையைக் கவனித்துச் செய்வதில்லை'.

அதற்கு மேல் நின்று கேட்க மனம் பொறுக்காமல் வெளியே போய்விட்டேன். அன்று மூன்றாம் சனிக்கிழமை. ஆதலால் அன்றும் மறுநாளும் ஆபீஸ் இடையாது. நானும் என் சிநேகிதர் சிலரும் குற்றாலத்துக்குப் போய் ஒருநாள் இருந்துவிட்டு ஞாயிற்றுக் கிழமை இரவு எட்டு மணிக்கு வீடுவந்து சேர்ந்தேன். படுக்கை யறைக்குள் சட்டையைக் கழற்றி வைப்பதற்காகப் போனேன். கமலம் ஒரு பாயின் மேல் படுத்திருந்தாள். வேலை செய்த சிரமத்தால் தூங்குகிறாள் என்று நினைத்து எழுப்புவதற்காக அவள் மேல் கையை வைத்தேன் தேகம் நெருப்பு மாதிரி சுட்டது. கமலம், கமலம், என்று பல தடவை கூப்பிட்டேன். அவள் கண் விழிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தாள். நான் என்ன செய்வதெனத் தெரியாமல் வெளியில் ஓடிவந்து உட்புறத்துக் கூடத்திலிருந்த என் தமக்கையிடம் 'கமலத்துக்கு எப்பொழுது ஜுரம் வந்தது? மருந்து கொடுத்தீர்களா?' என்று கேட்டேன். அவள் எனக்குப் பதில் சொல்லாமல் சமையல் உள்ளில் பலகாரம் செய்துகொண்டிருந்த என் தாயிடம் 'அம்மா, உன் மாட்டுப் பெண் நீலித்தனத்தைப் பார்த்தாயா? இன்று நீ அவளை ஆற்றுக்கு குளிக்க அழைத்துப் போனது அவளுக்கு இஷ்டமில்லை. காலமேயே ஜலதோஷம் பிடித்திருக்கிறதென்று சாக்குச் சொன்னாள். ஆம்படையான் வந்ததும் ஆவலாதி சொல்லிக் கொடுத்து விட்டாள்' என்று சொன்னாள்.

இனி அவர்களிடம் பேசிப் பயனில்லை யென்று நான் டாக்டர் வீட்டுக்கு ஓடி அவரை அழைத்து வந்தேன். அவர் வந்து பார்த்து விட்டு 'கடுமையான' இன்புலுயன்ஸா ஜுரம், 104டிகிரி இருக்கிறது. ஒருக்கால் நிமோனியாவாகவும் மாறலாம். ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ளுங்கள்' என்று சொல்லி, மருந்து ஷாப்பிலிருந்து வாங்கிக் கொடுக்கும்படி சில மருந்துகளும் எழுதிக் கொடுத்து விட்டுப் போனார்.

மறுநாட் காலையில் கலெக்டர் அடுத்த ஊரில் தங்கியிருப்பதால் தாசில்தார் போக வேண்டும். என்னையும் உடனே கூடவர வேண்டுமென்று ஆளப்பினார். தலை விதியை நொந்துகொண்டு, கமலத்துக்கு மருந்து வாங்கிக் கொடுத்து ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி என் தாயாரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு, நான் தாசில்தாருடன் போனேன்.

மூன்றாம் நாள் 'கமலத்துக்கு அபாயம். உடனே வா!' என்று தந்தி கிடைத்தது. தந்தியைக் காண்பித்து லீவு வாங்கிக் கொண்டு ரயிலேறி இரவு பத்து மணிக்கு ஊர் வந்து சேர்ந்தேன். டாக்டர் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் என் தாயும், தமக்கையும், பிலாக்கணம்பாடி அழத்தொடங்கினார்கள். உள்ளே ஓடினேன். கமலம், இந்த உலகத்துத் துன்பங்களையும், இன்பங்களையும் விட்டு பரலோகம் சேர்ந்து விட்டாள். மேலே சொல்ல முடியவில்லை.

என் தாயாரையும், தமக்கையையும் மனமாரச் சபித்துவிட்டு, கமலத்தின் ஈமக் கடன்களை முடித்துக் கொண்டு, வேலையை ராஜினமா செய்துவிட்டு சென்னை

வந்து சேர்ந்தேன். அங்கு ஒரு சிநேகிதன் என் மேல் இரக்கப்பட்டு, மலாய் நாட்டிலுள்ள தன் பந்து ஒருவருக்கு சிபாரிசு கடிதமும், கடனாக நூறு ரூபாய்களும் கொடுத்தான். மலாய் நாட்டுக்கு வந்து சேர்ந்தேன். அந்த நண்பரின் உதவியால் போஸ்டாபீஸில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. நாலைந்து வருஷம் ஹோட்டலில் சாப்பிட்டும், சில சமயம் தனியே சமையல் செய்து சாப்பிட்டும் வந்தேன். தனிமையை வேண்டின எனக்குத் தனிமை சகிக்க முடியாததாகி விட்டது. மறுபடி ஊருக்குப் போய் ஒரு பிராமணப் பெண்ணை மணம்புரிந்துகொள்ள மனமிசைய வில்லை. ஒரு சீனப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டேன். சரியோ, தப்போ. வீண் பொய் நடிப்பு ஆசாரப் பேய்க்குப் பலியான என் கமலத்தின் ஆத்மா இதனால் சாந்தியடையும் என்ற நம்பிக்கையால் தான் செய்தேன்.

நான் மலாய் நாட்டில் உத்தியோகத்தில் இருப்பதாக சில நாளைக்குமுன் கேள்விப்பட்ட என் தாயார், என்னை ஊருக்கு வந்து மறுபடி கல்யாணம் செய்துகொண்டு போகும்படி கடிதம் எழுதினாள். நான் பதில் எழுதவில்லை. நேரில்வந்து என்னை சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு போவதற்காக என் தாயார், தான் இந்த கப்பலில் வருவதாக ஒரு தந்திமட்டும் கொடுத்து விட்டுப் புறப்பட்டு வந்து சேர்ந்தாள். நான் என்ன செய்வேன்? முன்னால் தெரிவித்திருந்தால் வரவேண்டாமென எச்சரிக்கை செய்திருப்பேன். வேறுவழியில்லை. என்னவானாலும் பெற்ற தாய்—'பேயானாலும் தாய்' என்ற வசனம் எனக்குத்தான் உண்டாக்கினார்கள்போலும்—நான் அவளை 'போர்ட் ஸ்வெட்டன்ஹாம்' வந்து சந்தித்து அழைத்துப் போனேன். நான் தற்காலம் கோலாலம்பூருக்கு அருகில் ஒரு சிறிய நகரில் இருக்கிறேன். என் தாயாரிடம் நான் சீனப்பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டிருக்கும் விஷயம் சொல்லவில்லை. சாயங்காலம் வீடுபோய்ச் சேர்ந்தோம். எங்களைக் கண்டதும் என் மனைவி இரண்டு கோப்பைகளில் டீயும், ஒரு தட்டில் ரொட்டித் துண்டுகளும் கொணர்ந்து மேஜைமேல் வைத்துவிட்டு, மாமியாரின் முன்வந்து 'கோட்டோல்' பண்ணி (நமஸ்காரம்) மலாய் பாஷையில் தன் மாமியாருக்கு நல்வரவு கூறினாள். என் தாயாரின் முகத்தைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பு பொறுக்க முடியவில்லை. அவள், திகைப்புடன் 'அப்பா இந்தப் பெண் யார்?' என்று கேட்டாள். 'இவள்தான் உன் இரண்டாவது மாட்டுப்பெண்' என்றேன். என் தாயார், தான் இனி ஒரு க்ஷணமும் அங்கு தங்கமுடியாது என்று சொல்லிவிட்டாள். ஒரு மைலுக்கப்பாலுள்ள ஒரு பிராமண நண்பர் வீட்டிற்கு அவளையழைத்துப்போய் விட்டேன். உடனே ஊர் திரும்ப வேண்டுமென்று சொன்னதால் இந்தக் கப்பலுக்கே டிக்கட் வாங்கி அவளை பினாங்குவரை கூடப் போய் அனுப்பிவிட்டு வரலாமென நினைத்துப் புறப்பட்டேன் என்று கதையை முடித்தார்.

நாங்களும் அவர் தாயார் ஊர் போய்ச் சேரும் வரை சவனித்துக் கொள்வதாகச் சொன்னோம். ஆனால் அவர் வரலாறு எனக்கு ஒரு பிரச்னையாகத்தானிருந்தது.

வாசகர்களுக்கு

●

இந்த இதழில் சிந்தனைக்கு விருந்தளிக்கும் சில கட்டுரைகள் இருப்பதைக் காணலாம்.

'கன்னியாகுமரி' என்ற கட்டுரை ஒரு நூதனமான ஆனால் முக்கியமான பிரச்னையை உண்டாக்குகிறது. அக்கட்டுரையாளரின் அபிப்பிராயத்தை தெரிந்துகொண்டவர்கள் தங்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதையும் எழுதலாம். இன்றைய யுவதிகள் பலருக்கு இக்கட்டுரையாளரின் நிலைமை ஏற்பட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ஏற்பட முடியாதல்லவா? எனவே இதைப் படித்தவர்கள் கட்டுரையாளர் கூறும் பரிகாரம் போதுமா? சாத்தியமானதா? அவசியமானதா வென்று நீங்கள் எழுதலாம்.

'எதிர்பாராதது' கதைக்கு வாசகர்கள் பலர் காட்டும் ஆதரவு உண்மையில் எதிர்பாராததுதான்! சகோதரிகள் பலருக்கு இந்தக் கதையில் வரும் சம்பவம் சாதாரண வாழ்க்கையில் நடப்பது சகஜம் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் கதா ரூபமாக இந்த அனுபவம் வளர்வதை அவர்கள் சுவாரஸ்யமாகப் படிக்கிறார்கள் என்று தெரிகிறது. இம்மாதிரியான அனுபவங்கள் நம்முடைய வாழ்க்கையில் நடப்பதில்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால் அதை 'கல்பனா' ஜோடித்து எழுதுவது பாராட்ட வேண்டிய அம்சந்தான். ஆனால் சிலர் இந்தக் கதை எழுதும் 'கல்பனா,'வின் உண்மைப் பெயர் என்னவென்று தெரிந்துகொள்ள ஆவல் காட்டுகிறார்கள். எழுதியவரைப் பற்றி என்ன? கதை சுவாரஸ்யமாக இருந்தால் சரி! இந்தப் புனைபெயர் படைத்தவர் ஒரு நல்ல நாவலாசிரியர் என்பதுடன் நிறுத்திக் கொள்கிறோம்.

'சிறு கதைப் போட்டி' முடிவை இந்த இதழில் எதிர்பாராத காரணங்களால் அறிவிக்க முடியவில்லை. அடுத்த இதழில் நிச்சயம் அறிவிக்கலாம் என்று நம்புகிறோம்.

அடுத்த இதழ் இன்னும் சில மாறுதல்களுடன் முக்கியமான விஷயங்களைத் தாங்கி வரும். தவிரவும் பெண்களுக்கு நலந்தரும் வகையில் சீரான அபிப்பிராயங்களைக்கொண்ட சிறந்த கட்டுரைகளை 'மங்கை' எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறது.

உங்கள் அன்புள்ள

ஆசிரியை

197648

*

Printed and Published by Vai. Govindan at Shakti Press., Ltd., (Shanti Press)
115-E, Mowbrays Road, Royappettah, Madras. Editor: S. VISALAKSHI.

ஆனந்த நடனமாடும் ஆரணங்கிரண்டுபேரும் யாரென்று தெரிகிறதா?
யோகமும் மங்களமும்தான்!

Regd. No. M. 4845 MANGAI July, August 1948

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

•

தொகுத்தவர் :
தி. நா. சுப்பிரமணியன்

•

500-க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக்
காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

•

ரூபாய் ஐந்து

தபால் செலவுடன் ரூ. 5-8

வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

•

சக்தி காரியாலயம்

சென்னை-14